# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

இரண்டாம் பதிப்பு

விலை: 20

பக்கங்கள்: 28

சுடர் 32 கதிர் 307 புரட்டாதி 13ஆம் நாள் வெள்ளிக்கிழமை 29 செப்ரெம்பர் 2017 வள்ளுவர் ஆண்டு 2048


### இலங்கை வரலாறு முழுவதுமே

# ஆக்கிரமிப்பு எல்லாமே வடக்கிலிருந்தே வருவதால் ராணுவத்தை அகற்றாதீர்

## உதய கம்மன்பில வலியுறுத்து

கொழும்பு, செப்ரெம்பர் 29

வரலாற்றில் நாட்டுக்கு எதிராக இடம்பெற்றுள்ள ஆக்கிரமிப்புகளில் ஒன்றைத் தவிர்ந்த ஏனைய அனைத்து ஆக்கிரமிப்புக்களும் வடக்கிலிருந்தே இடம்பெற்றுள்ளன. போரின் பின்னரும் வடக்கிலிருந்தே சட்டவிரோதப் பொருள்கள் நாட்டுக்குள் கொண்டு வரப்படுகின்றன. எனவே வடக்கிலிருந்து இராணுவத்தை அகற்றக்கூடாது.

இவ்வாறு மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் போராளிகள் 12 ஆயிரம் பேர் மறுவாழ்வு வழங்கப்பட்டு விடுவிக்கப்பட்டனர். அவர்கள் இன்னும் வடக்கிலேயே உள்ளனர். இவ்வாறான நெருக்கடிகள் இருக்கும்போது இராணுவத்தை வடக்கில் நிலைபெறச் செய்ய வேண்டும். அதனை விடுத்து தெற்கில் இராணுவத்தினரின் எண்ணிக்கையை அதிகரிப்பதில் எவ்விதப் பிரயோசனமும் இல்லை.

நாட்டின் பாதுகாப்பை அதிகரிப்பது எனத் தெரிவிப்பது அதிகளவில் நிதி செலவிடுவதை குறிப்பதல்ல. மாறாக பாதுகாப்பைப் பலப்படுத்த வேண்டும் என்பதேயாகும். அரசு தற்போது இராணுவத்தினரைப் பலவீனப்படுத்தும் வேலைத்திட்டங்களையே மேற்கொள்கிறது. வடக்கில் இராணுவ முகாம்கள் அகற்றப்படுகின்றன. இராணுவத்தினரால் பிடிக்கப்பட்ட விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர்களுக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்யாது அவர்களுக்கு மன்னிப்பு வழங்கி விடுதலைசெய்யப்பட்டுள்ளனர். இதனால் இராணு

>> 25

## 9 பொருள்களின் விலைகள் குறைப்பு

கொழும்பு, செப். 29

அரிசி உள்பட 9 அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் சதொச விற்பனை நிலையங்களில் நேற்று நள்ளிரவு முதல் குறைக்கப்பட்டுள்ளன. புதிய விலைகள் உடனடியாக நடைமுறைக்கு வருவதாக

>> 25

## பலாலி ஆசிரியர் கலாசாலையை விடுவிப்பதற்கு ராணுவம் மறுப்பு

### 3 பாடசாலைகளைத் தருவதாக இணக்கம்

>> 25

## அரசியல் கைதிகள் மூவரின் உணவு ஒறுப்பு 4ஆவது நாள் நீடிப்பு

யாழ்ப்பாணம், செப். 29

அநுராதபுரம் சிறப்பு மேல் நீதிமன்றத்துக்கு வழக்கு இடமாற்றப்பட்டதை எதிர்த்து தமிழ் அரசியல் கைதிகள் முன்னெடுத்துள்ள உணவு ஒறுப்புப் போராட்டம் நேற்று நான்காவது நாளாகவும் தொடர்ந்தது.

உணவு ஒறுப்பில் ஈடுபட்டுள்ள மூன்று அரசியல் கைதிகளையும், அநுராதபுரம் சிறைச்சாலையில் உள்ள தூக்குத்

>> 25

### அரச நிர்வாக சேவை ஆள்சேர்ப்பு:

## பொது அறிவு பரீட்சையை மீண்டும் நடத்தப் பணிப்பு

கொழும்பு, செப். 29

அரச நிர்வாக சேவை ஆள்சேர்ப்புக்கான திறந்த போட்டிப் பரீட்சையின் பொது அறிவுப் பரீட்சை வினாத்தாளை நீக்கம் செய்து பரீட்சையை மீள நடத்துமாறு கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் பரீட்சைகள் ஆணையாளருக்கு அறிவுறுத்தியுள்ளார்.

>> 25

## தாஜுதீன் கொலையுடன் தொடர்புடைய மேலும் பலரின் விவரங்கள் விரைவில்

### நீதிமன்றுக்கு அறிவித்தார் சட்டமா அதிபர்

கொழும்பு, செப். 29

ரக்பி வீரர் வசீம் தாஜுதீன் படுகொலை தொடர்பில் முன்னெடுக்கப்பட்டுள்ள விசாரணைகளில் பல தகவல்கள் வெளியாகியுள்ளன. இதுவரை வெளிப்படுத்தப்படாத சந்தேகநபர்களின் விவரங்கள் விரைவில் நீதிமன்றுக்கு அறிவிக்கப்படும்.

இவ்வாறு சட்டமா அதிபர் திணைக்களத்தின் பிரதி மன்றாடியார் அதிபதி டிலான் ரத்நாயக்க நீதிமன்றில் நேற்றுத் தெரிவித்தார்.

>> 25

### வித்தியாவைக் கொன்றவர்களுடன்

## தூக்கிலிடவேண்டியோர் ஆயிரத்து 166ஆக உயர்வு

கொழும்பு, செப். 29

மாணவி வித்தியா படுகொலையில் குற்றவாளிகளாகத் தீர்ப்பளிக்கப்பட்டுத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட 7 பேருடன் சேர்த்து இலங்கையில் தூக்குத் தண்டனைத் தீர்ப்பளிக்கப்பட்ட கைதிகள் பட்டியலானது ஆயிரத்து 166ஆக உயர்ந்துள்ளது.

வித்தியா படுகொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட 7பேரும்போகம்பரை,வெலிக்கடை மற்றும் மகர சிறைச்சாலைகளில் அடைக்கப்படவுள்ளனர் என்று சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் துஷார

>> 25

## போதையில் சாரத்தியம்; ஆசிரியருக்கு எச்சரிக்கை

### முன்மாதிரிகளே இப்படி என்றால் மாணவர்கள் எப்படியிருப்பர் என நீதிவான் சீற்றம்

யாழ்ப்பாணம் செப். 29

மதுபோதையில் உந்துருளியை செலுத்திய ஆசிரியரொருவர் நீதிமன்றால் கடுமையாக எச்சரிக்கப்பட்டார். சமூகத்துக்கு முன்மாதிரியாகச் செயற்படவேண்டியவர்களே மது அருந்திவிட்டு வாகனம் செலுத்தினால் மாணவர்கள் எப்படி நடந்துகொள்வார்கள் என்றும் நீதிவான்

>> 25

## வன்கொடுமைக் குற்றவாளிகளை தகுதி பாராது தண்டிக்கவேண்டும்

### எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் வலியுறுத்து

கொழும்பு, செப். 29

வன்கொடுமைகளில் ஈடுபட்ட அனைவரும் தராதரம் பாராது சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டுத் தண்டிக்கப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் வலியுறுத்தினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பாடசாலை மாணவி சிவலோகநாதன் வித்

>> 25

newuthayan.com

## வடமாகாண சபை உறுப்பினர்கள் 16 பேர் புதுடில்லி செல்கின்றனர்

யாழ்ப்பாணம், செப். 29

வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் 16 பேர் எதிர்வரும் 8ஆம் திகதி புதுடில்லிக்குப் பயணமாகவுள்ளனர்.

ஆசிய நிறுவனத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மேம்பாடு தொடர்பான செயலமர்வில் பங்கேற்பதற்காகவே அவர்களின் புதுடில்லி செல்கின்றனர் என்று அவைத் தலைவர்சி.வி.கே.சிவ

>> 25

## துயிலும் இல்லங்களை பூங்காக்களாக்க வடக்கு மாகாண சபையில் கடும் எதிர்ப்பு

யாழ்ப்பாணம், செப்.29

வடக்கு மாகாணத்தில் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்களை வேறுவடிவத்தில் மாற்றுவதை விடுத்து, அவை மீளவும் சீரமைக்கப்பட வேண்டும் என்று வடக்கு மாகாண சபையில் வலியுறுத்தப்பட்டது.

வடக்கு மாகாணசபையின் 106ஆவது அமர்வு அவைத் தலைவர் தலைமையில் நேற்று இடம்பெற்றது. இந்த அமர்வில் அக்கரை கடற்கரையை சுற்றுலாத் தளமாக்குவது தொடர்பாக கருத்துகளைப் பதிவுசெய்யும் போதே இந்தக் கோரிக்கை முன்

>> 25




சிறு பிள்ளைகளுடன் பரிசும் வளரும்

Vardhana JUNIOR

இன்றே DFCC வங்கிக்கு வந்து வர்தன ஜுனியர் கணக்கொன்றை ஆரம்பியுங்கள்.

நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

24 மணிநேர அழைப்பு மையம்: 011 2350000

www.dfcc.lk

DFCC வங்கி ஃபிச் ரேட்டிங் லங்கா லிமிட்டெட்டின் AA- (lka) தரப்படுத்தலைப் பெற்றுள்ளது.

DFCC வங்கி இலங்கை மத்திய வங்கியினால் மேற்பார்வை செய்யப்படும் உரிமம் பெற்ற ஒரு வர்த்தக வங்கியாகும்.

DFCC வங்கி

உங்கள் வளர்ச்சிக்கு



# வலி. கிழக்கு மக்கள் வட மாகாண சபை முன்பாக ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம் செப் 29

வலி. கிழக்குப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் கிளைக்குழு அந்தஸ்து வழங்கப்பட்ட, கலைமதி கிளைக்கு, கிளைக்குழுவைத் தெரிவு செய்யுமாறு கோரி, அந்தப்பகுதி மக்கள் வடக்கு மாகாண சபை முன்பாக நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வடக்கு மாகாண சபையின் அமர்வு நேற்று நடைபெற்றது. அந்த சந்தர்ப்பத்திலேயே ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

"வலி.கிழக்குப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் நிர்வாகத்தால், கடந்த ஜனவரி மாதம் 21 ஆம் திகதி நடைபெற்ற இயக்குநர் சபைக் கூட்டத்தில் கிளைக்குழுத் தெரிவுக்கான தீர்மானம் எடுக்கப்பட்டது. ஆனால் இதுவரை கிளைக்குழு நிர்வாகத் தெரிவுக்கான தேர்தல் நடத்தப்படவில்லை. சங்கத்தின் கிளைக்குழுக்கான தேர்தல் நடைபெற வேண்டிய காலத்தை 5 மாதங்கள் கடந்தும் தேர்தல் நடத்துவதற்கு வடக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளர் தயங்குகின்றார்?. இந்த விடயத்தில் யாழ்.மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் பொருத்தப்பாடற்ற காரணங்களை முன்வைத்து, எமது கிளைக்குத் தேர்தல் நடத்துவதற்கு முட்டுக்கட்டையாக இருப்பதாக நம்பகமாக அறிகின்றோம். கடந்த மே மாதம் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனால், கூட்டுறவு அமைச்சருக்கு இந்த விடயம் தொடர்பில் கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. முப்பது ஆண்டுகளுக்கு மேலாக கிளைக்குழு நிர்வாகம் இன்றி எமது கிளையுடன் நான்கு கிளைகள் இயங்கி வருகின்றன. பதவிக்கு வந்த எந்த நிர்வாகமும் எமது கோரிக்கையை செவிமடுக்கவில்லை. 2014 இல் பதவிக்கு வந்த நிர்வாகமும், அதன் தலைவரும் இந்தக் கிளைகளுக்கு உரிய ஒழுங்கின்படி கிளை அந்தஸ்து வழங்கினார். அதனால் தெரிவு செய்யப்பட்ட தலைவரையும், ஆணையாளர் புதிய தலைவர் ஒருவரை நியமனம் செய்ததன் மூலம் தூக்கி எறிந்துள்ளார். பின் தங்கிய சமூகத்தை சேர்ந்த மக்களாகிய நாம் நிர்வாகத் திறனை வளர்த்து புதிய தலைமைகளை உருவாக்குவதற்கு ஒரு ஆரம்ப நிலையமாகக் கருதக்கூடிய கிளைக்குழு நிர்வாகத்தில் பங்கேற்று கொள்வதற்கு, கிளையைச் சிறப்பாக நடத்துவதற்கும், எமது கிளைக்கு விரைவாக தேர்தல்களை நடத்துவதற்கான ஏற்பாடுகளை செய்ய வேண்டும்" என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்தனர். (ஐ-8,11)

# கஞ்சாவுடன் முதியவர் கைது

வவுனியா.செப்.29

கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த முதியவர், வவுனியா பேருந்து நிலையத்தில் வைத்து நேற்றுக் காலை கைது செய்யப்பட்டார். வவுனியா போதைப் பொருள் தடுப்பு பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது, சந்தேகநபர் கைது செய்யப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது. கிளிநொச்சியிலிருந்து வவுனியா வந்த முதியவர், அங்கிருந்து அநுராதபுரத்துக்குப் புறப்பட இருந்தார். அவரிடமிருந்து ஒரு கிலோ 8 கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டது எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-ரி4,402)

# வவுனியா மாவட்டத்தில் யானைகளைத் தடுக்க பாதுகாப்பு வேலி

## அறிக்கை சமர்ப்பிக்குமாறு அமைச்சர் கோரிக்கை

வவுனியா, செப். 29

வவுனியா மாவட்டத்தில் அதிகரித்து வரும் யானைகளின் அட்டகாசத்தைக் கட்டுப்படுத்த, விரைவில் பாதுகாப்பு வேலிகள் அமைக்கப்படும். பாதிக்கப்படும் பிரதேசங்களை அடையாளப்படுத்தி இன்னமும் 10 நாள்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு வனஜீவராசிகள் அமைச்சர் காமினி ஜெயவிக்கிரம பெரேரா அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். வவுனியா மாவட்டத்தில் தொடரும் வனஜீவராசிகளால் ஏற்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது தொடர்பான கலந்துரையாடல் மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.

அண்மையில் நெடுங்கேணி மருத்துவமனையின் வளாகத்துக்குள் யானை புகுந்தது. அங்கிருந்த மருத்துவரின் துணிச்சலால் மருத்துவமனைக்கு ஏற்படவிருந்த ஆபத்துத் தடுக்கப்பட்டது என்று கலந்துரையாடலில் சுட்டிக்காட்டப்பட்டது. அதற்குப் பதிலளித்த அமைச்சர், மருத்துவமனைப் பிரதேசத்தைச் சுற்றி உடனடியாக யானைகளைத் தடுக்க பாதுகாப்பு வேலியை அமைக்குமாறு பணித்தார். அதேநேரம் குரங்குகளால் ஏற்படுத்தப்படும் பயிரழிவுகள் தொடர்பாகவும்சுட்டிக்காட்டப்பட்டது. வவுனியா மாவட்டத்தில் வனஜீவராசிகளால் நெடுங்கேணி மற்றும் வெண்கலச்செட்டி குளம் பிரதேச செயலர் பிரிவுகளே அதிகமாகப் பாதிக்கப்படுகின்றன. அதனால் திணைக்களத்தின் உப அலுவலகங்கள் அந்தப் பகுதிகளில் நிறுவப்பட வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதன் சுட்டிக்காட்டினார். இது தொடர்பில் பதிலளித்த அமைச்சின் பணிப்பாளர், இந்த விடயத்துக்கான பரிந்துரை வழங்குமாறு நாம் பிராந்திய பணிப்பாளரைக் கோரியிருந்தோம். அவரின் பரிந்துரை தற்போது கிடைத்துள்ளது. அதன் அடிப்படையில் விரைவில் அதற்கான அனுமதி வழங்கப்படும். உப அலுவலகங்கள் தொடர்பில் வெண்கலச்செட்டிகுளம் பிரதேசத்தில் உப அலுவலகத்துக்கான பணிகள் நிறைவுற்றுள்ளன. அதேபோன்று நெடுங்கேணிப் பிரசேத்திலும் தங்கள் கோரிக்கையின் பிரகாரம் விரைவில் ஓர் உப அலுவலகத்தை இயக்க நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (ஐ-10,101)

# திறந்த நீதிமன்றில் அலைபேசியை ஒலிக்க விட்டவருக்குத் தண்டம்

சாவகச்சேரி, செப். 29

திறந்த நீதிமன்றில் அலைபேசியை ஒலிக்க விட்டவருக்கு 500 ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று வழக்குகள் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில், பார்வையாளர் ஆசனத்தில் அமர்ந்திருந்த நபரின் அலைபேசி ஒலித்தது. . நீதிவானின் பணிப்பின் பேரில் நபரைக் கைது செய்த நீதிமன்ற பொலிஸ் அலுவலர், அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்தார்.

வழக்கை விசாரணை செய்த நீதிவான், 500 ரூபா தண்டம் விதித்தார் எனத் தெரிவிக்கப்பட்டது

நீதிமன்றப் பாதுகாப்பு அலுவலர் அறைக்கு முன்பாக நீதிமன்ற வளாகத்துக்குள் அலைபேசி பயன்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது என அறிவிப்புப் பலகை போடப்பட்டுள்ளது. நீதிமன்றுக்குள் செல்வோரின் அலைபேசிகள் இயக்கம் நிறுத்தப்பட்டு, அங்கு பெறப்பட்டு மீண்டும் வெளியே செல்லும்போது வழங்கப்படுவது வழமை. (ஐ-9)

# கடத்தப்பட்ட பெண் மீட்பு காப்பாற்றிய முதியவர் சாவு

கொழும்பு.செப்.29

கடத்தப்பட்ட இளம் பெண் ஒருவரைக் காப்பாற்ற முற்பட்ட முதியவர் ஒருவர் உயிரிழந்தார். இந்தச் சம்பவம் கம்பஹாப் பிரதேசத்தில் நேற்றுக்காலை நடந்தது.

தனியார் நிறுவனம் ஒன்றில் தொழில் புரியும் இளம் பெண், நேற்றுக் காலை வழமைபோல் நிறுவனம் நோக்கிச் சென்று கொண்டிருந்தார். அப்போது முச்சக்கர வண்டியில் வந்த சிலர் பெண்ணைக் கடத்திச் சென்றனர்.

அதனை அவதானித்த முதியவர், பெண்ணைக் காப்பாற்றும் நோக்குடன் அயலவர்களின் உதவியுடன் முச்சக்கர வண்டியைப் பின் தொடர்ந்து சென்றார். அதில் செல்லும் வழியில் முதியவர் மயங்கி வீழ்ந்து உயிரிழந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை பெண்ணைக் காப்பாற்றுவதற்காகப் பின் தொடர்ந்து சென்றவர்கள், கடத்தல் குழுவிடம் இருந்து பெண்ணை மீட்டனர்.

மக்களின் தாக்குதலுக்கு இலக்கான கடத்தல்காரர் ஒருவர் கம்பஹா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். அவருக்கு உதவிய இருவர் தப்பிச் சென்றுள்ளனர். மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-ரி4)



சரவணை பள்ளம்புலம் முருகமூர்த்தி சனசமூக நிலையத்தின் வாணிவிழா நிகழ்வுகள், முருகமூர்த்தி திருக்கோயில் நாவலர் மணி மண்டபத்தில் நேற்று நடைபெற்றன. நல்லூர் பிரதேச செயலக தொழில்நுட்ப அலுவலரும் நிலைய சமயப் பொறுப்பாளருமான ப.ஞானபண்டிதன் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது. (ஐ-17)

உங்கள் பிரதேசங்களில் நடக்கும் நிகழ்வுகளை உலகறியச் செய்ய எமக்கு அனுப்புங்கள்



உதயன்
DIGITAL

newuthayan.com
Leading Tamil News website in Sri Lanka

(+) 94 77 316 5555



# வித்தியா வழக்குத் தீர்ப்பு நீதிக்குக் கிடைத்த வெற்றி

## இராஜாங்க அமைச்சர் இராதாகிருஸ்ணன் நீதிபதிகளுக்குப் பாராட்டு

யாழ்ப்பாணம், செப். 29

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் புங்குடுதீவு மாணவி வித்தியா தொடர்பான வழக்குக்கு, நீதிபதிகளால் வழங்கப்பட்ட தீர்ப்பு, நீதி தேவதைக்குக் கிடைத்த பெரும் வெற்றியாகும். கடந்த காலங்களை விட தற்போது, அரசின் தலையீடு இல்லாமல் நீதிமன்றங்கள் சுயாதீனமாக செயற்படுகின்றன. இது நல்லாட்சியின் மூலம் கிடைத்த வெற்றியாகும். தீர்ப்பை வழங்கிய நீதிபதிகள் பாராட்டுக்குரியவர்கள். சட்டம் அனைவருக்கும் சமனானது என இந்தத் தீர்ப்பின் மூலம் அது நிரூபிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கல்வி இராஜாங்க அமைச்சரும் மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதித் தலைவருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் சுழிபுரம் விக்ரோறியா கல்லூரியில் 45.2 மில்லியன் ரூபா பெறுமதியான 18 வகுப்பறைகளைக் கொண்ட மூன்று மாடிக் கட்டடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் மற்றும் இராஜாங்க அமைச்சர் ஆகியோர் இணைந்து அடிக்கல்லை நட்டனர்.

அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

வித்தியா வழக்குத் தீர்ப்பு மூலம், எமது நாட்டில் சட்ட ஒழுங்கு முறையாகச் செயற்படுகின்றது என்பதை உலக நாடுகளுக்கு எடுத்துக் காட்டியிருக்கின்றோம். நீதிமன்ற வழக்குகள் இழுத்தடிக்கப்படுகின்றன. அதனால் நீதிமன்றத்தை நாடுவதை மக்கள் விரும்பவில்லை. ஆனால்



இந்தத் தீர்ப்பு மிகவும் விரைவாகவும், சரியாகவும் வழங்கப்பட்டுள்ளது. மாணவர்கள் தங்களுடைய பாதுகாப்புத் தொடர்பாக மிகவும் கவனம் செலுத்த வேண்டும். இன்றைய காலகட்டத்தில் கல்வியில் எந்தளவு கவனம் செலுத்துகின்றார்களோ, அந்தளவு தங்களுடைய பாதுகாப்பிலும் கவனம் செலுத்த வேண்டும். தனியாகப் பாடசாலைக்கு வருவதையோ அல்லது தனியாக தனியார் வகுப்புகளுக்குச் செல்வதையோ தவிர்த்துக் கொள்ள வேண்டும். பாடசாலை நிறைவடைந்ததும் நேரடியாகத் தங்களுடைய வீடுகளுக்குச் செல்ல வேண்டுமே தவிர, சுற்றித்திரிவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

உங்களுடைய பெற்றோர்கள் பல எதிர்பார்ப்புகளுக்கு மத்தியிலேயே உங்களைப் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கின்றார்கள். அவர்களுடைய அந்த அர்ப்பணிப்பைப் புரிந்து கொள்ள வேண்டும். வித்தியாவின் சம்பவம் எங்களுக்கு ஒரு பாடமாக அமைய வேண்டும். பெற்றோர்களும் தங்களுடைய பிள்ளைகளின் பாதுகாப்புத் தொடர்பாக அதிக கவனம் செலுத்த வேண்டும். அவர்களுடைய நண்பர்கள் தொடர்பாக அறிந்து வைத்திருக்க வேண்டும். இன்றைய நவீன உலகில் மாணவர்களை சீரழிக்கின்ற பல செயற்பாடுகள் முன்னெடுக்கப்ப டுகின்றன.

ஒரு சில இடங்களில் மாணவர்களை இலக்கு வைத்து போதைப் பொருள்கள் விற்பனை செய்யப்படுகின்றன. இவ்வாறான இடங்களைப் பெற்றோர்களோ மாணவர்களோ அறிந்து கொண்டால், அது தொடர்பாக அருகில் உள்ள பொலிஸ் நிலையத்துக்கோ அல்லது உங்களுடைய பாடசாலை அதிபர்களுக்கோ அறிவிக்க வேண்டும்.

பாடசாலைகளுக்கு அருகில் செயற்படுகின்ற விற்பனை நிலையங்கள் தொடர்பாக மிகவும் அவதானமாக இருக்க வேண்டும். மாணவர்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு நம் அனைவருக்கும் இருக்கின்றது. நாங்கள் அனைவரும் மாணவர்கள் தொடர்பாக அதிக கவனம் செலுத்த வேண்டும்-என்றார்.

இந்த நிகழ்வில் பாடசாலை அதிபர், ஆசியர்கள் மாணவர்கள், நலன்விரும்பிகள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

(ஐ-10,101)

# தலைவரை இழந்ததால் வடக்கில்சமூகப்பிரச்சினை

## அமைச்சர் ரமேஷ்வரன் தெரிவிப்பு

கொழும்பு, செப். 29

வடக்கில் நல்ல தலைவரை இழந்ததன் காரணமாக சமூகப்பிரச்சினைகள்உருவெடுக்கின்றன. சிறுபான்மைத் தலைவர்கள் ஒற்றுமைப்பட்டால் மட்டுமே இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும் இவ்வாறு மத்திய மாகாணவிவசாயத்துறைமற்றும் அபிவிருத்தி, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், தமிழ் கல்விஅமைச்சர்எம்.ரமேஷ்வரன்தெரிவித்தார்.

மத்தியமாகாணதமிழ்கல்வி அமைச்சின் 4.8 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் நோர்வூட்நிவ்வெளிதமிழ்வித்தியாலயத்தில் நிர்மாணிக்கப்பட்ட புதிய கட்டடத் திறப்பு விழா நேற்று இடம்பெற்றது.

அதில்கலந்துகொண்டுஉரையாற்றும் போதே அவர் இதனைத்தெரிவித்தார்.

அவர்தெரிவித்ததாவது:

சமூக ரீதியாக சிறுபான்மை இனத்தவர்களுக்குபல்வேறு பிரச்சினைகள் தோன்றியுள்ளன. உதாரணமாக இந்த நாட்டுமக்களால்எதிர்பார்க்கப்பட்டஒருமாணவிக்குநேர்ந்த கொடூரமான செயலுக்கான தீர்ப்புக் கிடைக்கப் பெற்றது. இந்தக் கொடூர செயலில் ஈடுபட்ட 7 பேருக்கு தூக்குத்தண்டனை தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதுதான்இந்தநாட்டில்உள்ள தற்போதைய சட்டங்கள். இந்த நாட்டின் அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன, வித்தியாவின் குடும்பத்தாரை சந்தித்துநல்லதீர்வைப்பெற்றுத் தருவேன் என்றார். அதே போன்று உரிய தீர்ப்புக் கிடைத்துவிட்டது.இவ்வாறாக பல்வேறு பிரச்சினைகள் நமதுசமூகத்தில்தோன்றியுள்ளன. வடக்கில் முக்கிய தலைவர்கள்பலர்இருந்தகாலத்தில் ஒரு நல்ல தலைவரும் இருந்தார். அவரை இழந்ததன் பின்னே இந்தப் பாடசாலை மாணவிக்கு இந்தக்கொடூரச் செயல் இடம்பெற்றுள்ளது.

பாடசாலை மாணவ, மாணவிகள் நம்மில் ஒரு பெரிய சமூகம்.

இந்தச்சமூகத்தைநாமேஇழிவுபடுத்தினால், எதிர்காலம் எவ்வாறாகஇருக்கும்என்பது ஒரு கேள்விக்குறியாகவே இருக்கின்றது. அபிவிருத்தியிலும், முன்னேற்றத்தி லும் மேலோங்க முடியாத நிலை ஏற்படும்.

இந்த நாட்டைப் பொறுத்தவரையில்சிறுபான்மை இனமானதமிழர்களும்,முஸ்லிம்களும்ஆட்சிக்குவரமுடியாது என்பதுதெரிந்தவிடயமாகும். இந்த நிலையில் நம் சமூகத்தில் ஒற்றுமையை வளர்த்தெடுக்க சிறுபான்மை இனத் தலைவர்கள் ஒன்றுபட்டு ஒற்றுமையாக செயற்பட வேண்டும்.

அவ்வாறு செயற்படும் போது சிறுபான்மை இனத்தவர்களுக்கு எதிராக உருவாகும் பிரச்சினைகளுக்கு ஆட்சியாளர்களிடம்பேசித்தீர்வைபெற்றுக்கொள்ள முடியும் - என்றார். (ஐ-10,41)

## மரத்தில் ஏறியவர் தவறி வீழ்ந்ததில் படுகாயமே!

முல்லைத்தீவு, செப்.29

தென்னை மரத்தில் ஏறியவர் தவறி வீழ்ந்து படுகாயமடைந்தார். இந்தச் சம்பவம் முள்ளியவளை நாவல்காட்டுப்பகுதியில் நேற்றுமுன்தினம் மதியம் நடந்துள்ளது. அதே இடத்தைச் சேர்ந்த லோகேஸ் வரதகுமார் (வயது34) என்பவரே படுகாயமடைந்தார்.

நேற்றைய பத்திரிகையில் வெளியான செய்தியில் மரத்தில் இருந்து வீழ்ந்தவர் உயிரிழந்தார் என்று தவறுதலாக பிரசுரமாகிவிட்டது. இந்தத் தவறால் ஏற்பட்ட அசௌகரியங்களுக்கு மிக மனம் வருந்துகின்றோம். (ற)

# நிரந்தரமாக வசிக்கும் முஸ்லிம் குடும்பங்களுக்கே வீட்டுத்திட்டம்

யாழ்ப்பாணம், செப். 29

யாழ்ப்பாண மாவட்டத்தில் நிரந்தரமாக வசிக்கும்குடும்பங்களுக்குமட்டுமேவீட்டுத்திட்டங்கள் வழங்கப்படும். முஸ்லிம் மக்களுக்கான வீட்டுத்திட்ட நடைமுறையில் முழுமையான ஒத்துழைப்புகளைவழங்குவதற்குநாம்தயாராகவே இருக்கின்றோம்.

இவ்வாறு யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

யாழ். மாவட்டச் செயலாளர் மற்றும் அதிகாரிகள் மற்றும் யாழ் முஸ்லிம் சிவில் சமூகப் பிரதிநிதிகளுக்கும் இடையில், யாழ் முஸ்லிம் மக்களின்வீட்டுத்திட்டம்தொடர்பிலானசிறப்புச் சந்திப்புயாழ். மாவட்டச்செயலகத்தில் நேற்று இடம்பெற்றது. அதில் கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

மீள்குடியேற்றஅமைச்சின்"நீண்டகாலஅகதிகளை மீள்குடியமர்த்து வதற்கான சிறப்புச் செயலணி" ஊடாக யாழ் மாவட்ட முஸ்லிம் மக்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 200 வீட்டுத்திட்டங்களையும், இந்த ஆண்டுக்குள் முழுமையாகமுஸ்லிம்மக்கள்பயனடையும் வகையில்நடைமுறைப்படுத்துதல், யாழ்ப்பாணம்அராலிவீதி, பறச்சேரிவயல்காணிகளில் வீட்டுத்திட்டங்களை அமைப்பதற்காக விண்ணப்பித்திருக்கின்றகுடும்பங்களுக்கு அந்தக் காணிகளில்வீட்டுத்திட்டங்களைஅமைப்பதற்கான அனுமதியை வழங்குவதற்கு விவசாய அபிவிருத்தித்திணைக்களத்துக்கு பரிந்துரை செய்தல். யாழ்ப்பாணத்தில் காணிகளையுடைய மீள்குடியேற்றப் பதிவுகளை மேற்கொண்டுள்ள குடும்பங்கள் நிரந்தரமாக மீள்குடியேறும் சந்தர்ப்பத்தில் அவர்களுக்குத் துரிதமாக வீட்டுத்திட்டங்கள் வழங்கப்படுவதை உறுதிசெய்தல், தற்போது தெரிவு செய்யப்பட்டிருக்கின்ற வீட்டுத்திட்டப் பயனாளிகளுக்குவீட்டுத்திட்டங்களைநடைமுறைப்படுத்துகின்ற வேளையில் அவற்றைத் துரிதமாக நிர்மாணிப்பதற்கு ஏற்ற விதமாக உதவிகள் வழங்கப்படுதல்" போன்ற கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. "யாழ்ப்பாணமுஸ்லிம் மக்களுக்கான வீட்டுத்திட்ட நடைமுறையில்முழுமையானஒத்துழைப்புகளைவழங்குவதற்குநாம்தயாராகவே இருக்கின்றோம். இங்கேபதிவுகளைமேற்கொண்டகுடும்பங்களில்குறைந்தபட்சம்ஒருவரேனும்மாவட்டத்தில் நிரந்தமாக வசிக்க வேண்டும். அதே வேளை வீட்டுத் திட்டம் தொடர்பில் நாட்டின் எந்தப் பகுதியிலும் சலுகை பெற்றிருத்தல் ஆகாது.

ஒருவேளைநாட்டின்ஏனையபகுதியில்குடும்பத்தலைவரின்பெயரில்வீட்டுத்திட்டம்பெற்றிருப்பின் அதனைப் பிள்ளைகளுக்கு வழங்கினால், அவை ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

அதேநேரம்இங்குபதிவைமேற்கொண்டவர்களில் 84 குடும்பங்களின் தரவுகள் புத்தளம் மாவட்டத்தில் பரீட்சிக்கப்பட்ட வேளையில் 51 குடும்பங்களின் விவரமே இதுவரை பரிந்துரையுடன் மீளக் கிடைக்கப்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இதுவரை 228 முஸ்லிம் குடும்பங்களுக்குக் கடந்த 5 வருடகாலப் பகுதிக்குள்வீட்டுத்திட்டங்கள்அல்லதுவீட்டுத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டிருக்கின்றன. இப்போது நீண்டகாலமாக இடம்பெயர்ந்தவர்களை மீள்குடியேற்றும் சிறப்புமீள்குடியேற்ற செயலணியால் 200 வீடுகள் முஸ்லிம் மக்களுக்கு வழங்குவதற்கென பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. சுமார்30ஆயிரத்துக்கும்அதிகமான வீடுகள் யாழ். மாவட்டத்துக்கு அவசியப்படும் சூழலில் நாம் 200 வீடுகளையும் முழுமையாக நடைமுறைப்படுத்த விரும்புகின்றோம்.

அந்தவகையில் சொந்தக்காணியுள்ள மீள்குடியேற்றப் பதிவு செய்தோர் 255 குடும்பங்களாகும். அதிலே169குடும்பங்கள்வீட்டுத்திட்டத்துக்குவிண்ணப்பித்துள்ளார்கள், ஏனைய86 குடும்பங்கள் காணியிருந்தும் இதுவரை விண்ணப்பிக்கவில்லை. எனவே இவ்வாறு காணியுள்ள 255 குடும்பங்களையும் அடிப்படைப் பயனாளிகளாக வைத்து 200 வீட்டுத்திட்டத்தையும் முழுமையாக நடைமுறைப்படுத்தவே நாம் விரும்புகின்றோம்.

அதேபோன்று பறைச்சேரிவயல் காணிகள் தொடர்பில் ஏற்கனவே கொள்கையளவில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. அந்தக் காணியில் குடியிருக்கும் ஒவ்வொருவரும் தனித்தனியாக முறைப்படி விண்ணப்பங்களை விவசாய அபிவிருத்தித் திணைக்களத்திடம் வழங்கி அதற்கான அனுமதிகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

அவற்றின்அடிப்படையில்மீள்குடியேறுகின்ற அனைத்துக் குடும்பங்களுக்கும் வீட்டுத்திட்டத்தைப் பெற்றுத்தர எம்மாலான முழுமையான நடவடிக்கைகளையும் நாம் முன்னெடுப்போம். சமூக ரீதியான சரியான பயனாளிகளைத்தெரிவுசெய்வதில்நீங்களும் எம்முடன் ஒத்துழைக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கின்றேன்" என்று மாவட்டச் செயலர் தெரிவித்தார்.

சந்திப்பில் வடக்கு மாகாணசபை உறுப்பினரான இம்மானுவேல் ஆர்னோல்ட் மற்றும் அய்யூப் அஸ்மின் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

(ஐ-10,101)

# இணையாவிடில் சிறுபான்மையினருக்கு விடிவில்லை

## கிழக்கு முதலமைச்சர் சுட்டிக்காட்டு



மட்டக்களப்பு, செப். 29

நாட்டில் எத்தனை புதிய அரசமைப்புச் சட்டங்கள் உருவாக்கப்பட்டாலும், சிறுபான்மையின மக்கள் இணைந்து செயற்படாவிடில் விடிவு கிடைக்கப்போவதில்லை. இல்லாவிடில் உரிமைகளுக்காகக் கையேந்தும் நிலைமையே ஏற்படும்.

இவ்வாறு கிழக்கு மாகாண முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

சமகால அரசியல் நகர்வுகள் குறித்து ஊடகங்களுக்கு நேற்றுக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது,

அரசியல்வாதிகளிடம் காணப்படும் அரசியல் வாழ்க்கை மற்றும் பொது வாழ்க்கையில் காணப்படும் இருவேறுபட்ட நேரெதிர் நிலைப்பாடுகள் காரணமாக, மக்கள் மத்தியில் அதிருப்தி காணப்படுவது இயல்பானதே.

அரசியல் ஆதாயங்களுக்காக மேடைப் பேச்சுக்களில் ஒன்றையும், அதிகாரத்தில் இருக்கும் போது வேறொன்றையும், பொது வாழ்க்கையில் மற்றொன்றையும் நடைமுறையாகக் கொள்ள வேண்டிய எந்தத் தேவையும் எனக்கில்லை.

தமிழ் முஸ்லிம் ஒற்றுமை என்று நான் மேடைகளில் முழங்கியதையே அதிகாரத்தில் இருக்கின்ற போதும் செயற்படுத்துகின்றேன். சிறுபான்மையினருக்கான உரிமைகள் என்ற விடயத்தில் உள்ளொன்று வைத்துப் புறமொன்று செயற்படுவதற்கான போக்கு என்னிடம் இல்லை.

அரசியல் உரிமைகள், அபிவிருத்திகள், வேலை வாய்ப்புக்கள், பதவி உயர்வுகள், நிதிப் பங்கீடுகள், வளப் பங்கீடுகள், கருத்துப் பரிமாற்றங்கள், ஆலோசனைகள் போன்ற எவற்றிலும் எனது அதிகாரத்தின் கீழ் இனப்பாகுபாடு, பாரபட்சம், ஏமாற்றுக்கள், மோசடி, ஊழல் இருந்தது கிடையாது.

இத்தகைய விடயங்களில் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசி, கடந்த காலங்களில் செயற்பட்டு இனங்களுக்கிடையில் பகைமையை உண்டாக்கி வந்தவர்களே இப்பொழுதும் அவற்றைத் தமது மூல மந்திரமாகக் கொண்டுள்ளார்கள்.

இலங்கையில் அரசியல் உரிமைகள் தொடங்கி அபிவிருத்தி வரையுள்ள அனைத்து அம்சங்களிலும் இனி என்ன மாற்றங்கள் ஏற்பட்டாலும், சிறுபான்மை இனங்கள் இணைந்து பயணிப்பதே விமோசனம் தரக் கூடியது - என்றார்.

(ஐ-10, 46)

## கைக்குண்டுடன் சந்தேகநபர் கைது

கொழும்பு,செப்.29

காலி மொரவக நெலுவ நகரில், கைக்குண்டு ஒன்றுடன் சந்தேகநபர் ஒருவர் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டார்.

பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற தகவலை அடுத்து, அந்தப் பகுதி



யில் பொலிஸார் வீதிச் சோதனை மேற்கொண்டனர். அதன் போது துவிச்சக்கர வண்டியில் பயணித்த ஒருவர் தனது உடைமையில் கைக்குண்டு ஒன்றை வைத்திருந்தமைக் கண்டுபிடிக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.

சந்தேகநபரைக் கைது செய்தனர். அதே இடத்தைச் சேர்ந்த 34 வயதுடைய நபரே கைது செய்யப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ஐ-ரி4)

## போர்க்குற்றச்சாட்டுக்கள் பற்றி ஐ.நாவுடன் விவாதிக்கத் தயார்

### கண்டியில் தெரிவித்தார் தளபதி மகேஷ்

கொழும்பு, செப். 29

படையினருக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள போர்க்குற்றச்சாட்டுகள் தொடர்பில் ஐ.நா. சபையுடன் விவாதம் நடத்துவதற்கு நான் தயாராகவே இருக்கின்றேன் என்று இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் மகேஷ் சேனநாயக்க அறிவித்தார்.

கண்டியில் அஸ்கிரிய, மல்வத்து பௌத்த பீடங்களின் மகாநாயக்க தேரர்களை நேற்றுச் சந்தித்து ஆசிபெற்ற பின்னர் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இராணுவமானது எவ்வாறு ஒழுக்க விழுமியத்துடன் செயற்படவேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபையால் முன்வைக்கப்பட்டுள்ள விதிமுறைகளுக்கமையவே இலங்கை இராணுவம் இதுவரை காலமும் செயற்பட்டு வந்துள்ளது. மேற்படி தராதரங்களை இராணுவம் எப்போதும் மீறியதில்லை. அப்படி ஏதேனும் சந்தேகங்கள் ஐ.நா. சபைக்கும், அந்த சபையின் கீழ் இயங்கும் நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்கும் இருக்குமாயின் அது தொடர்பில் தெளிவுபடுத்தி, விவாதிப்பதற்கு நாங்கள் தயாராகவே இருக்கின்றோம்.

தேசிய பாதுகாப்பின் நிமித்தமே வடக்கு, கிழக்கில் இராணுவம் நிலைநிறுத்தப்பட்டுள்ளது. எக்காரணம் கொண்டும் இராணுவ முகாம்களை அகற்றமுடியாது. தனிநபரின் உரிமைக்காக அன்றி ஒட்டுமொத்த மக்களினதும் பாதுகாப்புக்காகவே இராணுவம் போராடி வருகின்றது - என்றார்.

(வ-5,33)

## மு.கா. தலைவர்களின் இலக்கு எப்போதும் மாறுபட்டதில்லை

### இப்படிச் சொல்கிறார் கிழக்கு மாகாண சபை உறுப்பினர்

மட்டக்களப்பு, செப். 29

முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர்களின் இலக்கு அன்றும், இன்றும் ஒரே மாதிரியானவைதான். மக்களுக்காகச் செயற்படும் கட்சி மீது சிலர் கீழ்த்தரமான பழிகளைச் சுமத்துகின்றனர். கட்சியின் தலைவர்களின் வழியில் மக்களுக்கான செயற்பாடுகளை எப்போதும் மேற்கொள்ளத் தயாராக இருக்கின்றோம்.

இவ்வாறு கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஏ.எல். தவம் தெரிவித்தார்.

மு.கா. கட்சியைப் பற்றியும், தலைமைத்துவத்தைப் பற்றியும் வெளியாகும் பிழையான விமர்சனங்கள் தொடர்பில் ஊடகங்களுக்கு நேற்றுக் கருத்துத் தெரிவிக்கும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது,

விகிதாசார தேர்தல் முறைமையில் தேர்தல்களை நடத்தச் சட்டம் இயற்றப்பட்ட போது, தலைவர் மர்ஹூம் அஷ்ரப் வெட்டுப்புள்ளியை 12.5 வீதத்திலிருந்து 5 சதவீதமாகக் குறைத்து முஸ்லிம்பிரதிநிதித்துவங்களைப் பாதுகாக்கவும், அதிகரிக்கவும் முனைந்தார்.

இன்று தொகுதி ரீதியிலான கலப்புப் பிரதிநிதித்துவ முறையில் மாகாண சபைத் தேர்தல்களை நடத்தச் சட்டம் இயற்றப்படுகின்ற போது, தலைவர் ரவூப் ஹக்கீம் 60:40 விகிதத்தை மாற்றி 50:50 என்ற விகிதமாக்கி முஸ்லிம் பிரதிநிதித்துவத்தைப் பாதுகாக்கவும், அதிகரிக்கவும் முனைகிறார். இவை இரண்டும் ஒரே செயல்தான்.

இரு தலைவர்களின் முயற்சிகளிலும் எந்தவித பிழைகளும் இல்லை - என்றார்.

(ஐ-10, 48)



## திருகோணமலையில் மணல் அகழாவிடில் ஆறுகளுக்கு ஆபத்து

### மாவட்டச் செயலகம் தெரிவிப்பு

திருமலை, செப். 29

திருகோணமலை மாவட்டத்தில் மணல் அகழ்வு கட்டாயம் மேற்கொள்ளப்பட வேண்டும். இல்லாவிடில் அங்கிருக்கும் ஆறுகளுக்குப் பெரும் பாதிப்பு ஏற்படும் என்று திருகோணமலை மாவட்டச் செயலகம் தெரிவித்தது.

இடர் முகாமைத்துவச் செயற்பாட்டைப் பொதுமக்களுக்குக் கொண்டு செல்வதில் பிரதேச ஊடகவியலாளர்களின் பங்கு தொடர்பில் தெளிவுபடுத்தும் செயலமர்வு திருகோணமலை ஜெகப் விடுதியில் நேற்று நடைபெற்றது.

"நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் இருந்தும் ஆற்றின் மூலம் அடித்து வருகின்ற மணல் திருகோணமலையிலே வந்து சேர்கிறது. அவற்றை அகழவில்லை என்றால் மணல் மேடுகள் ஏற்பட்டு, ஆறுகள் உடைப்பெடுக்க நேரிடும். எனவே மணல் அகழ்வு இடம் பெற வேண்டியது அவசியம்." என்று திருகோணமலை மாவட்ட மேலதிக செயலர் (காணி) கே. அருந்தவராஜா தெரிவித்தார்.

இந்தச் செயலமர்வில் மாவட்ட ஊடகவியலாளர்கள் கலந்து கொண்டனர்.

(ஐ-10, 40)

## ரோஹிங்ய மக்களை பாதுகாக்கவேண்டும் அவர்களுக்குப் பரிந்து பேசுகிறார் மகிந்த

கொழும்பு, செப். 29

ஏதிலிகளாக வந்தவர்களை நாம் கைவிடக்கூடாது. அது இலங்கையின் கலாசாரமும் அல்ல. சாக்குப்போக்குகளைக் கூறிக் கொண்டிருக்காது ரோஹிங்ய மக்களை அரசு பாதுகாக்கவேண்டும். இவ்வாறு முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார். இலங்கையில் தஞ்சம் புகுந்த ரோஹிங்ய முஸ்லிம்கள் தற்காலிகமாக தங்கவைக்கப்பட்டுள்ள வீட்டை சுற்றிவளைத்த குழுவொன்று அவர்கள் மீது தாக்குதல் நடத்துவதற்கு முற்பட்டதுடன், அடாவடிச் செயலிலும் ஈடுபட்டது. இது தொடர்பில் மகிந்த ராஜபக்சவிடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஏதிலிகளாக வந்த எவரையும் நாட்டைவிட்டு விரட்டக்கூடாது. அவர்களுக்கு எதிராகச் செயற்படுவது எமது கலாசாரமும் அல்ல. இந்த விவகாரம் (ரோஹிங்ய முஸ்லிம்கள்) தொடர்பில் அரசும், பொலிஸாரும் இதனைவிடப் பொறுப்புடன் செயற்படவேண்டும். ஏதிலிகளுக்கான ஐ.நா. தூதுவர் அலுவலகம் ஊடாக அவர்களை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். ஏதிலிகளாக வந்தவர்கள் அவர்களின் நாட்டுக்குத் திருப்பியனுப்பப்படும்வரை அவர்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படக்கூடாது. அவர்களை அலைக்கழித்து துன்புறுத்துவது ஏற்புடையதல்ல. ஏதிலி தகுதி (அகதி அந்தஸ்து) வழங்கமுடியாவிட்டால் அவர்களைப் பாதுகாப்பாக வைத்திருப்பதற்கு அரசும், பொலிஸாரும் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றார்.

(வ-5)



வவுனியா ஏ-9 வீதியில் அமைந்துள்ள விதை மற்றும் நடுகைப்பொருள் அபிவிருத்தி நிலைய வளாகத்தினுள் இருந்த பழமை வாய்ந்த மரமொன்று நேற்று மதியம் முறிந்து வீழ்ந்தது. அதனால் ஏ-9 வீதிப் போக்குவரத்து சிறிது நேரம் பாதிப்படைந்தது எனத் தெரிவிக்கப்பட்டது. போக்குவரத்துப் பொலிஸார், நகர சபையினர், பொதுமக்கள் இணைந்து வீதியிலிருந்த மரத்தை அகற்றினர். (ஐ-ரி4)

# மானம்பூதிருவிழா நாளை

யாழ்ப்பாணம், செப்.30
நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் ஆலயத்தில் நாளைசனிக்கிழமைபிற்பகல்மானம்பூதிருவிழா இடம்பெறவுள்ளது. அன்றைய தினம் சிறப்பு வழிபாடு. முழுக்கு இடம்பெற்று மானம்பூ திருவிழா நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. (வ-17)

++++++++++++++++++

யாழ்ப்பாணம், செப்.30
நீர்வேலி கந்தசுவாமி கோயிலில் நாளை சனிக்கிழமை காலை 8 மணிக்கு வழிபாடுகள் ஆரம்பமாகித் தொடர்ந்து சுவாமி வீதிவலம் வருதலும் மானம்பூதிருவிழாவும் நடைபெறவுள்ளது. (வ-17)

++++++++++++++++++

நீர்வேலி தெற்கு அம்மன் ஆலயத்தில் நாளை சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நவராத்திரி வழிபாடு இடம்பெறவுள்ளது. அன்றைய தினம் சிறப்பு முழுக்கு இடம்பெற்று கற்பூர வழிபாடும் நடைபெறும். தொடர்ந்து பொங்கல், நவராத்திரி பாமாலை இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது. (வ-17)



வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்று அ.த.க.பாடசாலையின் பரிசில் நாள் நிகழ்வு பாடசாலையின் முதன்மை மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. அதிபர் சு. கணேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்குமுதன்மைவிருந்தினராகமருதங்கேணி கோட்டக் கல்விப் பணிப்பாளர் அ.திரவியராசாவும் சிறப்பு விருந்தினர்களாக ஆசிரிய ஆலோசகர்திருமதி வ.அம்பிகைபாகன், பழைய மாணவி திருமதி பி.சிவகுமார் ஆகியோரும் சிறப்பு விருந்தினராக பழைய மாணவர் சங்க போசகர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரனும் கலந்து கொண்டனர். (4, 9)

# வாசகர்வட்டத்தில் நாளை சிறப்புரை

யாழ்ப்பாணம்.செப்.29
யாழ்ப்பாணம் பொதுசன வாசகர் வட்டத்தின் ஏற்பாட்டில் 'வடக்கு மாகாண மீன்வளமும் பயன்பாடும், எதிர்கொள்ளும் பிரச்சினைகளும் என்னும் தலைப்பில் பேராசிரியர் சூசை ஆனந்தனின் உரையாடல் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3மணிக்கு இடம்பெறும்.
நூலககுவிமாடச்சிறியகேட்போர்கூடத்தில்நிகழ்வு நடைபெறும். இதில் ஆர்வலர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ய-ரி)

குடாநாட்டில் பல இடங்களில் திருடிக்கொண்டு வந்து

# விற்பனைக்குத்தயாரான 25 ஆடுகள் அச்சுவேலிப் பொலிஸாரால் மீட்பு

யாழ்ப்பாணம், செப். 29
பல இடங்களிலும் திருடப்பட்டதாகக் கூறப்படும் 25 ஆடுகள் விற்பனைக்காகவைத்திருந்த போதுபொலிஸாரால்மீட்கப்பட்டுள்ளன. அவை அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் உள்ளன. ஆடுகளைப் பறிகொடுத்தவர்கள்அங்குசென்றுபார்த்து இருந்தால்அடையாளம்காட்டலாம் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
வசாவிளானில் ஒரு மாதத்துக்கு முன்னர் ஒருவரது ஆடு திருடப்பட்டது. அச்சுவேலியில் ஓரிடத்தில் ஆடுகள் விற்பனைக்கு உள்ளன என்ற தகவல் கிடைத்து அங்கு சென்று பார்த்தபோது 25 ஆடுகள் நின்றுள்ளன. அவற்றில் ஒன்று தனதுதிருடப்பட்டஆடுஎன்பதை அவர் கண்டுகொண்டார். அது தொடர்பில் பொலிஸாருக்குத் தகவல்வழங்கப்பட்டது. அங்கு சென்ற பொலிஸார் 25 ஆடுகளையும் மீட்டு பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றனர். ஆடுகளை வைத்திருந்தவரையும் விசாரணைக்கென அழைத்துச்சென்றனர். அவரிடம்மேற்கொண்டவிசாரணையில்அடையாளம்காணப்பட்ட முதலாவது ஆடு கோண்டாவிலைச் சேர்ந்த ஒருவரால் விற்கப்பட்டுள்ளது. அவரை விசாரணைக்கு உட்படுத்தியபோது தொல்புரத்தைச்சேர்ந்தஒருவரிடம் அதனை வாங்கியுள்ளமை தெரியவந்தது. இவ்வாறுசங்கிலித்தொடராகஆள்கள் விசாரணைக்கு அழைக்கப்படுகின்றனர் என்றும் பொலிஸார்மேலும்தெரிவித்தனர். (4,26)

புத்தூர் கிழக்கில்

# தோட்டக்கிணற்றிலிருந்து வயோதிபரின்சடலம்மீட்பு

யாழ்ப்பாணம், செப். 29
புத்தூர் கிழக்கில் தோட்டக் கிணற்றிலிருந்து வயோதிபர் ஒருவரின் சடலத்தை நேற்று மீட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
அதே இடத்தைச் சேர்ந்த ஆறுமுகம் ஆண்டி (வயது-74)என்பவரேசடலமாகமீட்கப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
அவர் 2 நாள்களுக்கு முன்னர் கிணற்றுக்குள் இறந்திருக்கலாம் என்றும் உடல் ஊதிப்பெருத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. நீதிமன்ற அனுமதியுடன் சடலத்தைப் பொலிஸார் மீட்டனர். விசாரணைமற்றும்உடற்கூற்றுப்பரிசோதனைக்காகச்சடலம்தற்போது யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. (4,26)

# ஒக்ரோபர்புரட்சியின் ஆய்வரங்குத்தொடர்

யாழ்ப்பாணம், செப். 29
ஒக்ரோபர்புரட்சியின்நூற்றாண்டைமுன்னெடுக்கும் முகமாக (1917 - 2017) தேசிய கலை இலக்கியப்பேரவைநடத்தும்கலை இலக்கிய ஆய்வரங்குத் தொடரின் 6 ஆவது அமர்வு நாளைமறுதினம்ஞாயிற்றுக்கிழமைஇடம்பெறும்.
ஒக்ரோபர் புரட்சியும் உலக இலக்கியமும் என்ற தலைப்பில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பி.ப 4 மணியளவில் இல. 62, கே. கே.எஸ். சாலை, கொக்குவில் சந்தி என்ற முகவரியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இது இடம்பெறவுள்ளது.
பிரபல எழுத்தாளர் ஐ. சாந்தன் அவர்களின் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த ஆய்வரங்கில் ஆய்வுரையைப் பேராசிரியர் சி. சிவசேகரம் வழங்கவுள்ளார். ஆய்வுரையைத் தொடர்ந்து கலந்துரையாடல் இடம்பெறும். கலை இலக்கிய ஆர்வலர்கள் அனைவரையும்இந்தஆய்வரங்கில்கலந்துகொள்ளுமாறு தேசிய கலை இலக்கியப் பேரவையினர் அழைத்துநிற்கின்றனர். (4)

# டெங்கு பரவும் சூழல்: ஒரு வாரத்தில் 105 பேர் மாட்டினர்

## எச்சரிக்கையுடன் தண்டமும் விதிப்பு

டெங்குநோய்பரவும்நிலையில்சூழலைவைத்திருந்த 105 பேர் கடந்த வாரம் மாட்டினர். அவர்களுக்குயாழ்ப்பாணநீதிவான்மன்றுஆயிரத்து 500 ரூபா தண்டம் விதித்தது. பலர் எச்சரிக்கை செய்யப்பட்டு அனுப்பப்பட்டனர்.
யாழ்ப்பாணம் தலைமையக பொலிஸ் நிலையத்தைச்சேர்ந்த சுற்றுச்சூழல் பிரிவு பொலிஸாராலும்கோப்பாய்பொலிஸாராலும்யாழ்ப்பாண நகரப்பகுதி, அதனை அண்டியபகுதிகள்மற்றும் கோப்பாய் பிரதேசத்தில் அமைந்துள்ள வீடுகளில் கடந்த வாரம் டெங்குசோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.
டெங்குநுளம்புகள் பரவக்கூடியவகையில்வடிகால்கள், கால்வாய்கள், வாகனத்தின் பழைய ரயர்கள், கைவிடப்பட்ட போத்தல்கள், பேணிகள் என்பவற்றையும் சூழலை அசுத்தமான வகையில் வைத்திருந்த 105 பேர் இனங்காணப்பட்டனர். அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அவர்களை நீதிமன்றில் முற்படுமாறு அறிவுறுத்தப்பட்டு பொலிஸ்பிணையில்விடுவிக்கப்பட்டிருந்தனர்.
அவர்களுக்கெதிராக இந்த வாரம் யாழ்ப்பாணம் நீதிவான் மன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.
அவர்களில் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் நீதிமன்றினால் அவர்களுடைய வயதைக் கருத்தில் கொண்டு எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டிருந்தனர். ஏனைய ஒவ்வொருவருக்கும் நீதிமன்று ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதித்ததோடு எச்சரிக்கப்பட்டு அனுப்பப்பட்டனர். (4,103)

# இடர்முகாமைத்துவ கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், செப்.29
ஆசியபசுபிக் பிராந்திய இடர் முகாமைத்துவ ஒருங்கிணைப்புக் குழுவின் கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் ரில்கோ விருந்தினர் விடுதியில் நடைபெறும் என்று இணைப்பாளர் பீ. சே.கலீஸ் தெரிவித்தார்.
இடர்முகாமைத்துவத்தில்இணைச் செயற்பாடு என்னும் தலைப்பில் நிகழ்வு இடம்பெறும்.
முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் கலந்துகொள்வார். (ய-ரி)

# அரசடி சிவன் ஆலயத்தில் நவராத்திரிவிழா

யாழ்ப்பாணம், செப்.29
அரசடி சிவன் ஆலய நவராத்திரி விழா இன்று வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணிக்கு நடைபெறும்.
ஓய்வுபெற்ற மருத்துவ உதவியாளர் சிவத்திரு க.மார்க்கண்டேயர் தலைமையில்விழாநடைபெறும். தலைமை ஆசியுரையை ஆலய குரு க.கோபாலசிங்கமும், அறநெறிப்பாடசாலை இணைப்பாளர் சிவஸ்ரீ ப.சிவலோகநாத தேசிகரும், வரவேற்புரையைவே. அரியரத்தினமும், தலைமையுரையை சிவத்திரு. க.மார்க்கண்டேயரும், வாழ்த்துரைகளைசி.சச்சிதானந்த ஐயரும், ஸ்தபதி க.கோபாலசிங்கமும் ஆற்றவுள்ளனர்.

# முத்தமிழ் விழா

யாழ்ப்பாணம், செப்.29
யாழ்ப்பாணம் முத்துத்தம்பி மகா வித்தியாலய முத்தமிழ் விழா இன்று காலை. 8.30 மணிக்குப் பாடசாலை முதன்மை மண்டபத்தில்அதிபர்இ.பசுபதீஸ்வரன்தலைமையில் நடைபெறவுள்ளது.
முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண அவைத்தலைவர் சி.வி. கே.சிவஞானமும், சிறப்பு விருந்தினர்களாகயாழ்ப்பாணணக்கல்விவலய உதவிக்கல்விப் பணிப்பாளர் (அழகியல்) க.ஜெயபாலசிங்கமும், யாழ்ப்பாணக் கல்விவலய ஆசிரிய ஆலோசகர் (சைவநெறி) பா.பாலசிங்கமும், யாழ்ப்பாணக் கல்விவலய ஆசிரிய ஆலோசகர் (தமிழ்)ர.பிரதீபனும்கலந்துகொள்ளவுள்ளனர். (ய)

# சைவபரிபாலனசபையில் நாளை வித்தியாரம்பம்

அச்சுவேலி, செப்.29
யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் நவராத்திரி விழாவில் ஏடு தொடக்கும் நிகழ்வுகள் 30 ஆம் திகதி சனிக்கிழமை மு.ப .10 மணிக்கு நடைபெறவுள்ளது.
கல்லூரி வீதியில் உள்ள நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறும் ஏடு தொடக்கும் வைபவத்தில் உரிய நேரத்துக்கு கலந்து கொண்டு ஒத்துழையுங்கள். விஜயதசமியன்று பாலர்களுக்கு ஏடு தொடக்கவிரும்புபவர்கள்சைவபரிபாலனசபையின்சமயப்பிரசார அமைச்சர்வி.தயாபரனை தொடர்புகொள்ளவும். சைவபரிபாலன சபையின்செயலாளர்வை.இரகுநாதன்தெரிவித்துள்ளார். (ய-8,11)

# கொக்குவில் இந்துவில் பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்,செப்.29
யாழ்ப்பாணம் கொக்குவில் இந்துக்கல்லூரியின் பரிசளிப்பு விழா நாளை சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு அதிபர் எம். ஞானசம்பந்தன் தலைமையில் நடைபெறும். முதன்மை விருந்தினராக கல்லூரியின் பழைய மாணவன் ரகு தேவராஜ் கலந்து கொள்ளவுள்ளார். (ய-ரி)

# சனசமூக நிலையத்துக்கு புதிய தலைவர் தெரிவு

யாழ்ப்பாணம், செப்.29
குருநகர் சென்றோக் சனசமூக நிலையத்தின் நடப்பாண்டுக்கான புதிய தலைவராக க.திருவம்பலம் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.
சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றது. ஜே/68 றெக்கிளமேசன் கிழக்கு கிராம சேவையாளர் ஆர். சல்பீர் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.
செயலாளராக ஜெறாட் ஜெயந்தனும், பொருளாளராக க. அருள்நேசனும் தெரிவு செய்யப்பட்டனர். பதினைந்து உறுப்பினர்களைக் கொண்ட புதிய நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது. (ய-51)

# குளவிக்கூடுகளை அப்புறப்படுத்த தீயணைப்பு பிரிவினர் நடவடிக்கை

யாழ்ப்பாணம், செப்.29
தென்மராட்சி பிரதேசத்தில் காணப்படும் கருங்குளவிக்கூடுகளைஅப்புறப்படுத்துவதற்கு யாழ்ப்பாண மாநகரசபையின் தீயணைப்புப் பிரிவினர் முன்வந்துள்ளனர்.
தென்மராட்சிப் பிரதேசத்தில் பெருமளவு கருங்குளவிக்கூடுகள்காணப்படுகின்றன. அவற்றை அப்புறப்படுத்த அரச திணைக்களங்கள் முன்வருவதில்லைஎன்றுபிரதேச மக்கள் அதிருப்தி தெரிவித்திருந்தனர். இது தொடர்பில் செய்திகளும் வெளியாகின.
இதையடுத்து கருங்குளவிக் கூடுகள் காணப்பட்டால் அது தொடர்பான விவரங்களைமாநகரஆணையாளருக்குஅறிவிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.
அதேநேரம் குடியிருப்புகள் அற்ற காணிகளில்கருங்குளவிகள்காணப்பட்டால்கிராம அலுவலர்மற்றும்பிரதேசசெயலரின்சிபார்சுடன் மாநகர ஆணையாளருக்கு அறிவிக்குமாறும் தெரிவிக்கப்பட்டது. (ய-9)

# கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்

| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 600 | 700 | 1000 | 800 |
| நண்டு | 400 | 400 | 500 | 300 |
| கணவாய் | 800 | 600 | 800 | 800 |
| பாரை | 600 | 500 | 600 | 700 |
| சுறா | 600 | 700 | 800 | 800 |
| சீலா | 400 | 400 | 500 | 500 |
| விளை | 600 | 400 | 200 | 600 |
| முரல் | 350 | 350 | 400 | 400 |
| கும்பிளா | 350 | 300 | 400 | 400 |
| கிளாக்கன் | 800 | – | 500 | 300 |
| ஓரா | 350 | 300 | 400 | 300 |
| திரளி | 250 | 200 | 200 | 200 |
| நகரை | 250 | 150 | 400 | 200 |
| சூடை | 150 | 100 | 200 | 200 |
| ஒட்டி | 200 | 200 | 300 | 250 |
| திருக்கை | 350 | 200 | 400 | 300 |
| மதனம் | 250 | 150 | 200 | 300 |
| கொய் | 150 | 70 | 50 | 50 |
| பாலை | 150 | 200 | 400 | 300 |
| வாளை | 150 | 200 | 300 | 250 |

# மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | சாவகச்சேரி | சுன்னாகம் | மருதனார்மடம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 80 | 80 | 70 | 60 | 60 |
| கத்தரி | 140 | 180 | 150 | 160 | 140 |
| மரவள்ளி | 80 | 80 | 70 | 60 | 60 |
| பயிற்றை | 80 | 100 | 80 | 100 | 120 |
| பாகல் | 300 | 400 | 300 | 220 | 200 |
| க.கிழங்கு | 100 | 100 | 80 | 120 | 100 |
| பெ.வெங்காயம் | 100 | 240 | 140 | 220 | 120 |
| சி.வெங்காயம் | 250 | 140 | 200 | 220 | 180 |
| பூசணி | 40 | 40 | 40 | 50 | 40 |
| தக்காளி | 120 | 160 | 160 | 160 | 140 |
| வாழைக்காய் | 80 | 100 | 90 | 80 | 80 |
| கீரை | 50 | 30 | 30 | 20 | 30 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 35 | 30 | 30 |
| ப.மிளகாய் | 280 | 280 | 320 | 340 | 260 |
| புடோல் | 100 | 100 | 90 | 100 | 80 |
| கோவா | 140 | 100 | 140 | 140 | 100 |
| வெண்டி | 80 | 70 | 100 | 100 | 80 |
| போஞ்சி | 200 | 200 | 200 | 180 | 200 |
| லீக்ஸ் | 150 | 140 | 180 | 140 | 180 |
| தேங்காய் | 75 | 90 | 80 | 90 | 80 |
| உ.கிழங்கு | 100 | 120 | 110 | 110 | 120 |
| தேசிக்காய் | 300 | 300 | 230 | 250 | 200 |
| வல்லாரை | 20 | 20 | 30 | 15 | 15 |
| கறிமிளகாய் | 160 | 120 | 180 | 160 | 180 |
| கரட் | 200 | 180 | 80 | 120 | 180 |
| முருங்கைக்காய் | 160 | 200 | 180 | 200 | 120 |

# திருட்டுப் பேர்வழிகள் மூவர் வவுனியாவில் கைதாகினர்

## ஒருவர் முன்னாள்-இராணுவச் சிப்பாய்

வவுனியா, செப். 29

வவுனியாவில்பல்வேறுதிருட்டுச்சம்பவங்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் முன்னாள் இரானுவச் சிப்பாய் உட்பட மூவரைக் கைது செய்துள்ளதாக வவுனியாப் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா நகரில் சாலையில் நடந்து செல்பவர்களிடம் மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் தங்கச்சங்கிலி அபகரிப்பு, நகைகள் திருட்டு என்று பல்வேறு முறைப்பாடுகள் வவுனியா பொலிஸ் நிலையத்துக்குக் கிடைக்கப்பெற்றன.

இதனையடுத்து வவுனியா பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரி மகிந்தவின் வழிகாட்டலில் பொலிஸ் உத்தியோகத்தர் நிஜாமின் தலைமையிலான குழுவினர் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். இதன் போதுவவுனியாவில்வைத்துநேற்றுமுன்தினம் அவர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்கள் அனுராதபுரம், நிராவி, சாலபுரம் ஆகிய பகுதிகளைச்சேர்ந்த 20,21,25 வயதுடையவர்கள். அவர்களில் முன்னாள் இராணுவச் சிப்பாயும் உள்ளடங்குகிறார். இவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பிரகாரம் தாங்கள் செய்த குற்றங்களைஒப்புக்கொண்டுள்ளதாகவும் மேலதிக விசாரணைகளின் பின்னர் வவுனியா நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (4)

# கிராம அலுவலர் நியமனம்

யாழ்ப்பாணம், செப்.29

யாழ்ப்பாணம் ஜே.68 றெக்கிளமேசன்கிழக்குகிராமஅலுவலராக ஆர்.சல்பீர்நியமிக்கப்பட்டுள்ளார். இந்தப்பிரிவின் கிராம அலுவலராக கடந்த ஐந்து வருடங்களாகப் பணிபுரிந்த க.நித்தியானந்தன் ஓய்வுபெற்றுள்ளார்.

புதிய கிராம அலுவலர் பதில் கடமைபுரிவதற்கே நியமிக்கப்பட்டுள்ளார். இந்தக் கிராம அலுவலரின் அலுவலகம் தற்போது றெக்கிளமேசன் சனசமூக நிலையத்தின் ஒருபகுதியில் இயங்கிவருகின்றது என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (ய-51)

# ஈழத்து சீரடியில் புதிய சித்திரத் தேர் வெள்ளோட்டம்

யாழ்ப்பாணம்,செப்.29

நல்லூர் பிரதேசத்தில் அமைந்துள்ள "சீரடி சாயி மந்திர்" எனும் ஈழத்துசீரடியில்புதியசித்திரத்தேர் வெள்ளோட்டம் நாளை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்தத் தேரானது 18 அடி உயரம் கொண்டதாக அமைந்துள்ளதாகத்தெரிவிக்கப்பட்டது. (4)

# பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நான்கு லட்சம் செலவில் உபகரணங்கள்



யாழ்ப்பாணம், செப்.29

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அலுவலக உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

நெடுந்தீவு சங்கத்துக்கு ஒரு இலட்சம் ரூபாவுக்கு கணினியும், வேலணை, நயினாதீவு சங்கங்களுக்குபோட்டோகொப்பி இயந்திரங்களும் ஊர்காவற்றுறை சங்கத்துக்கு அலுமாரிகள் மற்றும் உபகரணங்களும் வழங்கப்பட்டன.

இதுதொடர்பான நிகழ்வு கடந்த திங்கட்கிழமை யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகத்தில், கூட்டுறவு உதவி ஆணையாளர் எஸ்.மோகன் தலைமையில் நடைபெற்றது.

இவற்றை வடக்கு மாகாணசபை உறுப்பினர் என்.விந்தன் கனகரட்ணம் இந்தவருட நிதிஒதுக்கீட்டின் மூலம் வழங்கியுள்ளார்.

இந்தநிகழ்வில் தமிழீழ விடுதலை இயக்கத்தின் பிரான்ஸ் நாட்டு கிளை அமைப்பாளர் நித்தி, லண்டன் பிரதிநிதியான ஜீவன், வட்டுக்கோட்டை தொகுதி அமைப்பாளரும் புவியியல் ஆசிரியருமான எஸ்.குகதாஸ், நெடுந்தீவு ப.நோ.கூ. சங்கத் தலைவர் க.அரசரத்தினம், பொதுமுகாமையாளர் ச.பத்மலிங்கம், ஊர்காவற்றுறை சங்கத் தலைவர் சுந்தரலிங்கம், பதில் முகாமையாளர் ப.கலைச்செல்வி, நயினாதீவு சங்கத் தலைவர் வே.சு.கருணாகரன், உபதலைவர் செல்வி பூ.அன்பரசி, பதில் முகாமையாளர் க.இராஜேஸ்வரி, வேலணை சங்கத் தலைவர் பாலச்சந்திரன், உபதலைவர் அ.ஸ்ரீபத்மராசா, பதில் பொது முகாமையாளர் ஆ.தவமலர் ஆகியோரும்கலந்துகொண்டனர். (ய)

# தொல்புரத்தில் நவராத்திரி விழா

யாழ்ப்பாணம்.செப்.29

தொல்புரம்மத்தியசனசமூகநிலையம், ஆதி முத்துமாரி அம்மன் ஆலய பரிபாலன சபை, சக்தி முன்பள்ளி, சக்தி விளையாட்டுக்கழகம் ஆகியன இணைந்து நடத்தும் நவராத்திரிவிழாஇன்றுவெள்ளிக்கிழமை சனசமூக நிலைய முன்றலில்நடைபெறும்என்றுஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக வலிகாமம் மேற்கு பிரதேச சபைச் செயலாளர் சதாசிவஐயர் சந்திர மௌலி கலந்துகொள்வார். "ஆடல் அமுதம" சிறப்பு நிகழ்வும் இடம்பெறும்என்றுதெரிவிக்கப்பட்டுள்ளது. (4,ரி)

# இயக்குநர் பாரதிராஜா கிளிநொச்சிக்கு வருகை

கிளிநொச்சி, செப். 29

தென்னிந்தியத் திரைப்பட இயக்குநர் பாரதிராஜா கிளிநொச்சிக்கு நேற்றுப் பயணம்மேற்கொண்டார்.

கிளிநொச்சிதர்மபுரம்பகுதியில்தனியார் நிறுவனம் ஒன்றில் இலவச கணனிக் கற்கைநெறி இடம்பெற்றது. குறித்த கற்கைநெறியை பூர்த்தி செய்த மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் வடக்கு மாகாணசபை உறுப்பினர் த.குருகுல ராஜா தலைமையில் இடம் பெற்றது. அதில் விருந்தினராக பாரதிராஜா கலந்துகொண்டார். அவருடன் நாடாளுமன்றஉறுப்பினர்மாவை.சோ.சேனாதிராசாவும் கலந்து கொண்டிருந்தார். அவர்கள்உரையாற்றியிருந்தனர்.

மாணவர்களின் கலைநிகழ்வுகளைத் தொடர்ந்து பயிற்சியை முழுமை செய்த 130 மாணவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. சான்றிதழ்களை பாரதிராஜா வழங்கினார். இந்த நிகழ்வில் மாணவர்கள், பெற்றோர்உள்ளிட்டபலர் கலந்துகொண்டனர். (4,6,35)



## இது புதுச

பெண்களுக்கான கைக்கடிகார வகைகள் சில அறிமுகமாகியுள்ளன. இவை 800 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

# காரைநகர்-யாழ். பேருந்துசேவை சீரில்லை என மக்கள் முறைப்பாடு

காரைநகர் யாழ்ப்பாணம் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும்வடபிராந்தியப்போக்குவரத்துச்சபைபேருந்துகள் கடந்தசிலநாள்களாகசீரானசேவையில்ஈடுபடவில்லை. இதனால் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளனர் என்று குற்றஞ்சாட்டப்படுகிறது.

மாணவர்கள், அரசஅலுவலர்கள், வர்த்தகநிலையங்களில் பணிபுரிவோர் பருவகாலச் சீட்டுக்களைப் பெற்று இந்த பேருந்துகளில் சென்று வருகின்றனர்.

கடந்தஇருதினங்களாககுறித்தநேரஅட்டவணையின்படி பேருந்துச்சேவைகள்இடம்பெறவில்லை. இதனால்அவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கினர்.

உரிய நேரத்துக்குப் பாடசாலைகளுக்கோ பணியிடங்களுக்கோ செல்லமுடியாத நிலை ஏற்பட்டதாகத் தெரிவித்துள்ளனர்.

எனவே, இதுதொடர்பில் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. கடந்தவாரமும்இவ்வாறுமுன்னறிவித்தலின்றிபேருந்து சேவைமட்டுப்படுத்தப்பட்டது. இதனால்பயணிகள்பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (ய-250)

# பயிற்சிக்கால சுகாதாரப் பரிசோதகர்களாக 15 பேருக்கு வடக்கு மாகாணத்தில் நியமனம்

யாழ்ப்பாணம், செப்.29
வடக்கு மாகாணத்தில் பொதுச் சுகாதாரப் பரிசோதர்களுக்கான பயிற்சிகளை நிறைவுசெய்த 15இற்கும் மேற்பட்டவர்களைப் பயிற்சிக்கால உத்தியோகத்தர்களாக நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று வடக்கு மாகாண சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதுபற்றி அமைச்சு மேலும் தெரிவித்ததாவது:

பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களுக்கான பயிற்சிகள், கற்கை நெறிகள் அமைச்சின் ஊடாக நடைபெற்று வருகின்றன. ஜி.சி.ஈ. உயர்தரத்தில் கணிதம் மற்றும் விஞ்ஞான பாட நெறிகளில் வெட்டுப்புள்ளிகளின் அடிப்படையில் இவர்களுக்கான அனுமதி வழங்கப்பட்டு வருகின்றது.

இவர்களின் பயிற்சிக் காலத்தில் ஊக்குவிப்புத் தொகை வழங்கப்பட்டு பயிற்சிகள் நிறைவடைந்தவுடன் நியமனங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

நடப்பு வருடத்தில் பயிற்சிகளை நிறைவுசெய்தவர்கள் பயிற்சிக்கால உத்தியோகத்தர்களாக நியமிக்கப்படவுள்ளனர். அமைச்சின்கீழ் இவர்கள் உள்ளவாங்கப்படவுள்ளனர்.

வடக்கு மாகாணத்தில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கு 40க்கும் அதிகமான வெற்றிடங்கள் உள்ளன.

பயிற்சிகளை நிறைவுசெய்த பின்னர் இவர்களை உரிய வகையில் தயார்செய்வதன் மூலமாக அவர்களை வடக்கு மாகாணத்தில் நியமிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் - என்றார். (ய-ரி)

## பொது இடத்தில் புகைபிடித்த 10 பேருக்குத் தண்டம்

சாவகச்சேரி, செப். 29
பொதுமக்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் பொது இடத்தில் புகை பிடித்த 10 பேருக்கு சாவகச்சேரி நீதிமன்று தலா 2 ஆயிரம் ரூபா வீதம் தண்டம் விதித்தது.

சாவகச்சேரி மதுவரி நிலையத்தினரால் பொது இடங்களில் புகை பிடித்தவர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் நேற்றுமுன் தினம் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது அனைவரும் குற்றத்தை ஒப்புக் கொண்டனர். அதனையடுத்து 10 பேருக்கும் தலா 2 ஆயிரம் ரூபா வீதம் தண்டம் விதிக்கப்பட்டது. (4- 9)

## மாவீரர் துயிலும் இல்லங்களை பூங்காவாக மாற்றுவதை விடுத்து அவர்களின் உறவுகளைக் காப்போம்

### ஜனநாயகப் போராளிகள் கட்சி கோருகிறது

யாழ்ப்பாணம், செப்.28
மாவீரர் துயிலும் இல்லங்களை தாவரவியல் பூங்காவாக மாற்ற வேண்டிய அவசியம் இல்லை. அவை சாதாரண கல்லறைகள் அல்ல. எமது விடுதலைப் போராளிகள் உறங்கும் இடங்கள். அவற்றைவிடுத்து அவர்களது குடும்பங்க ளுக்கு உதவமுன்வாருங்கள்.

இவ்வாறு ஜனநாயகப் போராளிகள் கட்சியின் ஊடகப் பேச்சாளர் துளசி தெரிவித்தார்.

நல்லூரில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற தியாக தீபம் திலீபனின் 30 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோது அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது மண்ணில் உள்ள விவசாயிகள், கடற்றொழிலாளர்கள் பசியுடன் உறங்கும்வரை எமக்கான அபிவிருத்தியோ தீர்வோ கிடைக்காது. எமது அரசியல்வாதிகள் தமிழீழத்தைப் பெற்றுக்கொடுக்கும் அரசியலைச் செய்யவேண்டும் என்றில்லை. மக்களைப் பொருளாதார ரீதியாக அபிவிருத்தி அடைந்த சமூகமாக மாற்றுங்கள். இளைஞர்களை அரசியலில் ஈடுபடுத்தும் வேலைத்திட்டங்களைச் செய்யுங்கள்.

மாவீரர் குடும்பங்களை நேரில் சென்று பாருங்கள். அவர்கள் சாலைகளையோ அல்லது வேறு உதவிகளையோ கேட்கமாட்டார்கள். மூன்று வேளைக்கான உணவையே கேட்டுக்கொண்டிருக்கின்றனர்.

மாவீரர் குடும்பங்களைப் பாதுகாக்க வேண்டும். ஒரு குடும்பத்திலிருந்து இரண்டு, மூன்றுபேர் என இழக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கான உதவிகளை செய்யுங்கள் - என்றார். (ய)

## கிளி. பொருளாதார மையம் திறப்பு இன்று சிறப்புக் கலந்துரையாடல்

கிளிநொச்சி, செப். 29
கிளிநொச்சி மாவட்ட பொருளாதார மையத்தைத் திறப்பது தொடர்பில் கிளிநொச்சி மாவட்டச்செயலகத்தில் அமைச்சர் கரிசன் தலைமையில் இன்று சிறப்புக் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளதாக மாவட்டச் செயலாளர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.


இதுதொடர்பில் மாவட்டச் செயலாளர் மேலும் தெரிவித்ததாவது:

கிளிநொச்சி கனகபுரம் சாலையில் பொருளாதார மையம் அமைக்கப்பட்டுள்ளது. பொருளாதார மையத்தை எதிர்வரும் ஒக்ரோபர் 14ஆம் திகதி திறப்பதற்கு அமைச்சரால் உத்தேசிக்கப்பட்டு சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கட்டிமுடிக்கப்பட்டு நீண்டகாலமாகத் திறக்கப்படாத நிலையில் உள்ள பொருளாதார மையத்தைத் திறப்பதற்கு முயற்சிகளை மேற்கொண்டோம். தற்போது அது நிறைவேறியுள்ளது.

பொருளாதார மையத்தில் தற்போது 40 வர்த்தகக் கூடங்கள் உள்ளன. இதில் 28 கூடங்கள் கிளிநொச்சி வர்த்தகர்களிடம் வழங்கப்பட்டுள்ளன. வர்த்தக நிலையம் ஒன்றுக்கு மாதாந்தம் 3ஆயிரத்து 500ரூபா முதல் வாடகை அறவிடப்படும் - என்றார். (ய-101)

## பரந்தன் சந்தைக்குள் தார் பரவியது மீனவர், வாடிக்கையாளர் சிரமத்தில்



கிளிநொச்சி, செப். 29
பரந்தன் மீன்சந்தையில் தார் காணப்படுவதால் மீனவர்களும் வாடிக்கையாளர்களும் சிரமத்தை எதிர்கொள்வதாக தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபை செயலாளர் பிரிவின் கீழ் உள்ள பரந்தன் சந்தையில் மீன் விற்பனைக் கட்டடத்திலேயே தார் பரவி காணப்படுகின்றது. இது தொடர்பாக மீன் வியாபாரிகளிடம் கேட்டபோது பிரதேச சபையினர் சந்தை பேருந்து நிலையத்தைச் சுற்றி சாலைக்கு ஊற்றுவதற்காக கொண்டு வந்த தார் பரல்களை எமது பகுதிக்குள் வைத்து விட்டுச் சென்றனர். நாள் செல்லச்செல்ல வெப்பம் ஏறி பரல்கள் வெந்து அதில் இருந்த தார் வெளியேறி சந்தையின் ஒரு பகுதிக்குள் பரவிக் காணப்படுகின்றது. இதனால் அனைத்து பரல்களையும் நாங்கள் வெளியே போட்டு விட்டோம் என்று தெரிவித்தனர்.

இது தொடர்பாக கரைச்சி பிரதேச சபை செயலாளருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது குறித்த பரல்கள் உடைந்துள்ளதாகத் தகவல் கிடைக்கப்பெற்றுள்ளது. உடனடியாக அதனை அகற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார். (4-6)

## மனித உரிமைகள் நிலையத்தினரால் சட்ட ஆலோசனைகள்

யாழ்ப்பாணம், செப். 28
மனித உரிமைகள் நிலையத்தால் பொது மக்களுக்கு சட்ட ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்தச் சேவையைப் பெறுவதற்கு வருகை தரும் மக்களின் தகவல்களின் இரகசியத்தன்மை பேணப்படும் என்று மனித உரிமைகள் நிலையத்தின் மேற்பார்வையாளர் தெரிவித்துள்ளார்.

மனித உரிமைகள் நிலையம் இலங்கையில் 1994 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அது இன்றுவரை மிக நலிவடைந்த மக்களின் தேவைகளை முன்னுரிமைப்படுத்தி சேவையாற்றி வருகின்றது. அந்தவகையில் பாதிக்கப்பட்ட பெண்கள், சிறுவர்கள் எனப் பல தரப்பினருக்கும் சட்ட ஆலோசனையை வழங்கிவருகின்றது.

இதுதொடர்பாக 0212240999, 0214927201, 0776537232, 0776452474, 0714871561 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு சேவைகளைப் பெற்றுக்கொள்ளமுடியும் என்று மனித உரிமைகள் நிலையத்தின் மேற்பார்வையாளர் மேலும் தெரிவித்துள்ளார். (ய-8)

## சிகை அலங்கரிப்பு நிலையங்களில் இரவில் ஏற்படும் பிரச்சினைக்கு சம்மேளனம் பொறுப்பு ஏற்காது

யாழ்ப்பாணம், செப்.29
வடக்கு மாகாணத்தில் இரவு 9மணிக்கு பின்னரும் சில சிகை அலங்கரிப்பு நிலையங்கள் திறந்திருக்கின்றன. அந்த நேரங்களில் அங்கு ஏற்படும் பிரச்சினைகளுக்கு வடக்கு மாகாண அழகக சங்கங்களின் சம்மேளனம் பொறுப்பு ஏற்காது என்று சங்கம் நேற்று அறிவித்தது.

இதுதொடர்பில் சங்கம் அனுப்பிய செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வடக்கு மாகாணத்தில் பல சட்டவிரோத செயல்கள் இடம்பெற்ற வருகின்றன. இதற்கு எமது சிகையலங்கார நிலைய உரிமையாளர்கள் இரவு 9 மணிக்குப் பின்னரும் கடைகளைத் திறந்திருப்பதும் ஒரு காரணமாகும்.

9 மணிக்கு பின்னர் கடைகள் திறந்திருப்பதால் கூட்டம் கூடுதல் அல்லது உள்ளே பூட்டப்பட்ட நிலையில் அங்கே மதுஅருந்தல் போன்ற பல்வேறு சமூகவிரோதச் செயல்கள் நடைபெற்று வருகின்றன என்று முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இரவு 9 மணிக்குப் பிறகு கடைகளைத் திறந்துவைக்க வேண்டாம் என்று நாம் கடந்த வருடத்தில் இருந்தே உரிமையாளர்களுக்குத் தெரியப்படுத்தி இருந்தோம்.

எனினும் சிலர் இதனைப் பின்பற்றாமல் கடைகளை நேரம் தாழ்த்தி மூடுகின்றனர். எனவே, இரவுநேரத்தில் 9 மணிக்குப் பின்னர் அழகக நிலையங்கள் திறந்திருந்தாலோ அல்லது சிகை அலங்காரம் செய்தாலோ ஏற்படும் பிரச்சினைகளுக்கு சம்மேளனம் பொறுப்பேற்காது.

சமூக விதிமுறைகள், பண்பாடுகளைப் பேணிப் பாதுகாப்பது எமது கடமை. இதற்கு நாம் பொலிஸாருக்கு ஒத்துழைப்பு வழங்குவோம். நேரக்கட்டுப்பாட்டை மீறி தொழில் புரியும் நிலைய உரிமையாளர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுத்தால் அதற்கு நாம் ஒத்துழைப்பு வழங்குவோம்.

ஆகவே உங்கள் கடைகளை இரவு 9 மணிக்குமுன்னர் பூட்டி சமூகவிரோத செயற்பாடுகளுக்கு இடமளிக்காமல் இருக்க வேண்டும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ய-ரி)

## மக்கள் பாதிப்பதைத் தவிர்க்கவே மீண்டும் பணிக்குத் திரும்பினோம்

### சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப்.29
நாடுமுழுவதும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் போராட்டம் தற்காலிகமாக முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. பொதுமக்களின் சேவைகளுக்கு பாதிப்பு ஏற்படுவதைத் தவிர்க்கும் முகமாகவே பணிக்குத் திரும்பியதாக வடக்கு மாகாண பொதுச்சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதுபற்றி சங்கம் மேலும் தெரிவித்ததாவது:

நடப்பு வருடத்தில் மாநகரசபையின் ஐந்து ஊழியர்கள் இடமாற்றம் செய்யப்பட்டனர். இந்த இடமாற்றம் முறையற்றது. இதனைக் கண்டித்து கடந்த 3 வாரங்களாகப் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டோம். இதற்கு நாடு முழுவதும் உள்ள பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கங்களும் ஒத்துழைப்பை வழங்கியிருந்தன.

எமது போராட்டத்தால் மக்களுக்கு செய்யும் சேவைகள் பாதிப்படைகின்றன என்ற காரணத்தால் கொழும்பு பொது பரிசோதகர்கள் சங்கம் இந்தப் போராட்டத்தை கைவிட்டுப் பணிக்குத் திரும்புமாறு அறிவுறுத்தல் வழங்கியுள்ளது. அதற்கு அமைவாக நாம் நேற்று முன்தினம் தொடக்கம் பணிக்குத் திரும்பியுள்ளோம்.

இந்த இடமாற்றம் தொடர்பான பிரச்சினைகள் பற்றி ஆராய்ந்து முடிவுகளைப் பெறுவதற்காக கொழும்பு பொதுச் சுகாதார சங்க அதிகாரிகள் மற்றும் இணைந்த துணை மருத்துவசேவை அதிகாரிகள் எதிர்வரும் 4ஆம்திகதி யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளனர்.

அவர்கள் வடக்கு மாகாணத்தில் உள்ள பொதுச் சுகாதார சங்க பிரதிநிதிகளுடன் கலந்துரையாடவுள்ளனர். அதன் பின்னர் ஒரு முடிவு எட்டப்படும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமது இடமாற்றம் தவறானது என்றுகோரி பணிக்குச் செல்லாமல் இருந்த யாழ்ப்பாணம் மாநகரசபையின் 5 ஊழியர்கள்களில் இருவர் நேற்றுமுன்தினம் பணிக்குத் திரும்பியுள்ளமை குறிப்பிடத் தக்கது. (ய-ரி)

# மியன்மார் முஸ்லிம்களை வடக்கில் தங்கவைப்போம்

## உறுப்பினர் சிவாஜிலிங்கம் இரு கரம் நீட்டி அழைப்பு

யாழ்ப்பாணம், செப்.29

கல்கிசைப்பகுதியில்தங்கவைக்கப்பட்டிருந்த மியன்மார் முஸ்லிம் அகதிகள் பௌத்த தீவிரவாதிகளால் தாக்கப்பட்டுள்ளனர். இதனை வன்மையாகக் கண்டிக்கின்றோம். அதேநேரம் அவர்களை வடக்கில் தற்காலிகமாகத் தங்கவைக்க நாம் தயாராக உள்ளோம்.

இவ்வாறுவடக்குமாகாணசபைஉறுப்பினர் .எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

வடக்குமாகாணசபையின்106ஆவது அமர்வு கைதடியில் உள்ள பேரவைச் செயலகத்தில்அவைத்தலைவர்தலைமையில் நேற்று இடம்பெற்றது.

இந்தஅமர்வில்சிறப்புவிடயமாகசபையில் சிவாஜிலிங்கம் மேலும் தெரிவித்ததாவது:

காங்கேசன்துறை கடற்பரப்பில் தத்தளித்துக்கொண்டிருந்த மியன்மார் அகதிகள் சிலரை இலங்கைக் கடற்படையினர்கைது செய்திருந்தனர். பின்னர் அவர்கள் மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

பின்னர்அவர்கள்ஐக்கியநாடுகள்சபையின் அலுவலகத்தின் ஊடாக கல்கிசையில் தங்கவைக்கப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் அங்கு சென்ற சில பௌத்த தீவிரவாதிகள் அந்த முஸ்லிம் மக்களைத் தாக்கியுள்ளனர். அவர்களை அங்கிருந்து வெளியேறுமாறும் அட்டகாசம் செய்துள்ளனர்.

பௌத்த தீவிரவாதிகளின் இந்த கொடூரமானசெயலைவடக்குமாகாணசபை கண்டிக்கின்றது. கல்கிசையில் தங்கவைக்கப்பட்டுள்ள அனைத்து மியன்மார் முஸ்லிம் மக்களையும் வடக்கு மாகாணசபை பொறுப்பேற்று அவர்களை எமது மண்ணில் தங்கவைக்க நாம் தயாராக இருக்கின்றோம் என்றார்.

இதன்போது, ஒருசில பௌத்த பேரினவாதிகள் நடந்துகொண்டமையை வைத்துஅனைவரையும்குறையாகச் சொல்லவேண்டாம் என்று வடக்கு மாகாணசபை உறுப்பினர் ஜெயதிலக கூறினார். (ய-08)

## செயற்கை அவயவங்களை உருவாக்கும் வேலைத்திட்டங்கள் வடக்கில் ஆரம்பம்

### சுகாதார அமைச்சர் குணசீலன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப்.29

மறுவாழ்வுஅமைச்சினால்பிராந்தியகுணமாக்கல்மையம் மற்றும் செயற்கை அவயவங்கள் உருவாக்கும் நிலையத்துக்கான உபகரணங்கள் மற்றும் மூலப் பொருள்களை வழங்கும் வேலைத்திட்டங்கள் இடம்பெற்று வருகின்றன என்று வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் குணசீலன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சுகாதார அமைச்சுக்கு வழங்கப்பட்ட வேலைத்திட்டத்தின்கீழ் இவை முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவவித்தார்.

வடக்குமாகாணசபையின்நேற்றையஅமர்விலேயேஅவர் இதனைத் தெரிவித்தார்.

போர் மற்றும் போதைப்பழக்கத்தால் உளநலம் பாதிக்கப்பட்டவர்களைஆற்றுப்படுத்துவதற்கானநிலையம் அமைப்பதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஊடாக வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளனவா என்று வடக்கு மாகாணசபைஉறுப்பினர்ஜெயசேகரம்மாகாணசுகாதார அமைச்சரிடம் கேள்வி எழுப்பினார்.

அதன்போதே அமைச்சர் குணசீலன் இதனைத் தெரிவித்தார்.

அவர்மேலும்தெரிவித்ததாவது:

மறுவாழ்வு அமைச்சிடமிருந்து வடக்கு மாகாண சுகாதார அமைச்சுக்குஇந்தவேலைத்திட்டங்கள்கிடைக்கப்பெற்றன.

யாழ்ப்பாணத்தில்சாவகச்சேரிஆதாரமருத்துவமனையில் இடஒதுக்கீடுசெய்யப்பட்டுவேலைஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கு30மில்லியன்ரூபாநிதிஒதுக்கீடுசெய்யப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் முருங்கன் மருத்துவமனையில் வேலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கு 30 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டத்தில் பூவரசங்குளம் பிரதேச மருத்துவமனையில் வேலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கு 30 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டிசுட்டான் பிரதேச மருத்துவமனையில் வேலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கு30மில்லியன்ரூபாநிதிஒதுக்கீடுசெய்யப்பட்டுள்ளது.

மேலும் செயற்கை அவயவங்கள் உருவாக்கும் நிலையத்துக்கான உபகரணங்கள் மற்றும் மூலப்பொருள் கள் கொள்வனவு செய்யப்படும்.

கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனையின் கீழ் பொருள்கொள்வனவுக்கானகட்டளைவழங்கப்பட்டுள்ளது. இதற்காக 7.60 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

வவுனியா பொது மருத்துவனையின் நிர்வாகத்தின் கீழ் இயங்கி வரும் மேற்படி நிலையத்துக்கான பொருள் கொள்வனவுக்கான கட்டளையும் வழங்கப்பட்டுள்ளது. இதற்காக 14 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றார். (ய-08)

## அக்கரை கடற்கரையை சுற்றுலாத்தளமாக்குங்கள்

### மாகாண சபை உறுப்பினர்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப்.29

அக்கரைகடற்கரையைஉரியமுறையில் பராமரித்தால் எமது காலசாரத்தை பாதுகாத்து அதனை சுற்றுலாத் தளமாகமாற்றிஅமைக்கமுடியும் என்று வடக்கு மாகாணசபை உறுப்பினர்கள் பலர் கருத்துகளை முன்வைத்தனர்.

வடக்கு மாகாணசபையின் 106ஆவதுஅமர்வுநேற்றையதினம் அவைத்தலைவர் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது அக்கரை கடற்கரைப் பகுதியை சுற்றுலாத்தளமாக மாற்றும் விடயம்தொடர்பாக உறுப்பினர் சுகிர்தன் சபையின் கவனத்துக்குக் கொண்டுவந்தார்.

அதன்போது திடீரென எழுந்த வடக்கு மாகாண எதிர்க்கட்சி உறுப்பினர் தவநாதன், "அக்கரை கடற்கரைப் பகுதியில் இடம்பெற்றுவரும் போராட்டத்துக்கும் ஈ.பி.டி.பிகட்சிக்கும்எவ்வித தொடர்பும் இல்லை" என்று தெரிவித்தார்.

வடமராட்சி அக்கரைக் கடற்கரையை சுற்றுலாத் தளமாக மாற்றுவதற்கு எதிராக பல நாள்களாக மக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். இந்தப் போராட்டத்தை ஈ.பி.டி.பி கட்சியினரேஒழுங்கமைத்துநடத்தி வருவதாக முதலமைச்சர் கடந்த சில தினங்களுக்கு முன்னர் கூறியிருந்தார். அவ்வாறு அவர் கூறியது போல எமது கட்சி அந்தப் போராட்டத்தைஏற்பாடுசெய்யவில்லை என்று அவர் மேலும் தெரிவித்தார்.

"அக்கரை கடற்கரைப் பகுதியைநானும்சிலமாகாண சபை உறுப்பினர்களும் நேரில்சென்று பார்வையிட்டோம்.

அங்கு சில இளைஞர்கள் எமக்கு முன்னாலேயே மதுபானம் அருந்திக்கொண்டு இருந்தனர். கடற்கரையை அண்டியமரங்களுக்குக்கீழே பல இளம்சோடிகள் வேண்டத்தகாத செயல்களிலும் ஈடுபட்டனர். இவ்வாறு எமது கலாசாரம்சீரழியும்நடவடிக்கையைநாம்ஏற்றுக்கொள்ள முடியாது. எனவேசுற்றுலாத் தளம் அமைக்கும்போது எமதுகலாசாரங்களைப்பாதுகாப்பதற்கு உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டும்" என்று உறுப்பினர் ச.சுகிர்தன் கருத்து முன்வைத்தார்.

அக்கரை கடற்கரைப் பகுதியில் பொலிஸ் காவலரண் அமைக்க வேண்டும் என்று வடக்குமாகாணமகளிர்விவகார அமைச்சர்ஆனந்திசசிதரன், உறுப்பினர் ஜெயசேகரம் ஆகியோர் கோரிக்கையை முன்வைத்தனர். (4,8)

## தனிச்சிங்களத்தில் படிவங்கள் நிரப்புவதில் மக்கள் சிரமம்

மரங்கள் கொண்டு செல்வதற்கான அனுமதிப் பத்திரம் தனிச்சிங்களமொழியில்வழங்கப்படுவதால்அவற்றைஉரியமுறையில் நிரப்பி வழங்க முடியாத நிலை காணப்படுவதாகப் பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

பிரதேசத்திலிருந்துமரங்கள்வாகனங்களில்கொண்டுசெல்வதற்கான படிவங்கள் பிரதேச செயலகத்தால் வழங்கப்படுகின்றன. அந்தப் படிவங்கள் தனிச் சிங்கள மொழியில் காணப்படுகிறன. படிவத்தில்என்னவிவரங்களைக்கேட்டுள்ளனர்என்ற விவரம் தெரியாமல் இதனைப் பூரணப்படுத்துவதில் சிரமங்களைஎதிர்நோக்கிவருவதாகவும்அவர்கள்தெரிவிக்கின்றனர்.

தமிழ்மக்கள் வாழும் பிரதேசத்தில் இவ்வாறான படிவங்கள் தமிழ் மொழியில் அல்லது தமிழும் சிங்களமும் இணைந்து பிரசுரித்த படிவங்கள் வழங்க பிரதேச செயலகத்தினர் நடவடிக்கைஎடுக்கவேண்டும்என்றுபொதுமக்கள்கோருகின்றனர்.

மரங்கள்ஏற்றிச்செல்லும்வேளையில்சோதனையிடும்பொலிஸாரின்நலன்கருதிசிங்களத்தில்உள்ளபடிவம்விநியோகிக்கப்படுகிறது என்று கூறப்பட்டாலும் சாதாரண பொதுமக்களே அதிகம் பாதிக்கப்படுகின்றனர் என்றும் அவர்கள் கூறுகின்றனர். (4-9)

## தொண்டர், ஒப்பந்தஅடிப்படையில்கடமையாற்றும் ஆங்கிலபாட ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம்

### வடக்கு மாகாணசபையில் தீர்மானம்

யாழ்ப்பாணம், செப்.29

வடக்குமாகாணத்தில்பணியாற்றிவரும் ஆங்கில பாட தொண்டர் ஆசிரியர்கள் மற்றும்ஒப்பந்தஅடிப்படையிலான ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கி மாகhணத்தில் நிலவும் ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறையை நீக்கவேண்டும் என்று வடக்கு மாகாணசபையில் பிரேரணை நிறைவேற்றப்பட் டுள்ளது.

குறித்த பிரேரணையை வடக்கு மாகாணசபைஉறுப்பினர்சுகிர்தன்முன்மொழிந்தார்.

மாகாணசபையின் 106 அவது அமர்வு கைதடியிலுள்ளபேரவைச்செயலகத்தில் அவைத்தலைவர்தலைமையில்நேற்று இடம்பெற்றது. இந்த அமர்விலேயே குறித்தபிரேரணையைஅவர்முன்மொழிந்தார்.

அவர் தனது பிரேரணையில் தெரிவித்துள்ளதாவது:

வடக்கு மாகாணத்தில் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்ட பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கும், ஒப்பந்த ஆசிரியர்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்படவேண்டும்.

வடக்குமாகாணத்தில்ஆங்கிலஆசிரியர்களுக்குக்காணப்படுகின்றவெற்றிடங்களைக் கருத்திற் கொண்டும், அவர்கள் ஆற்றிய சேவைகளைக் கருத்திற் கொண்டும் நிரந்தர நியமனம் வழங்கப்படவேண்டும். அதற்கான நடவடிக்கையை வடக்கு மாகாண கல்வி அமைச்சு, கொழும்பு கல்வி அமைச்சு ஊடாக உரியமுறையில் எடுக்கவேண்டும் என்று தனது பிரேரணையை முன்மொழிந்தார். இந்த பிரேரணையை வடக்குமாகாணசபைஉறுப்பினர் அஸ்மின் வழிமொழிய ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. (ய-08)

## சுகாதாரப் பரிசோதகர்களின் விடயத்தில் சுகாதார அமைச்சே முடிவெடுக்கட்டும்

### வடக்கு மாகாணசபையில் தீர்மானம்

யாழ்ப்பாணம், செப். 29

யாழ்ப்பாணம்மாநகரசபையின்பொதுச்சுகாதாரபரிசோதகர்களைஇடமாற்றம்செய்தமை தொடர்பாக வடக்கு மாகாண பொதுமக்கள் முறைப்பாட்டுக்குழுவோஅல்லதுவேறுதரப்பினரோ தலையிடுவதில்லை.

இதுதொடர்பாகமாகாணசுகாதாரஅமைச்சே நடவடிக்கை எடுக்கட்டும்.

இவ்வாறு வடக்கு மாகாணசபை தீர்மானித்துள்ளது. வடக்கு மாகாணசபையின் 106 ஆவது அமர்வு நேற்று அவைத்தலைவர் தலைமையில் நேற்று இடம்பெற்றது.

சுகாதார பரிசோதகர்களின் இடமாற்றம் முறையற்ற விதத்தில் இடம்பெற்றுள்ளதாகச் சபை அமர்வில் தெரிவிக்கப்பட்டது. சபை உறுப்பினர்விந்தன்குறித்தவிடயத்தைசபையின் கவனத்துக்குக் கொண்டுவந்தார்.

அவர் அங்கு தெரிவித்ததாவது:

யாழ்ப்பாண மாநகரசபையில் பணியாற்றிவந்த சுகாதாரப் பரிசோதகர்கள் வேண்டுமென்று இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். அவர்களை இடமாற்றம் செய்வதை நிறுத்துவதுடன்அவர்களுக்குமீளநியமனம்வழங்க வேண்டும் - என்றார்.

இதன் போது கருத்துத் தெரிவித்த அவைத்தலைவர்,

சுகாதாரப்பரிசோதகர்களுக்கு வழங்கப்பட்ட இடமாற்றம்தொடர்பில்பொதுமக்கள்முறைப்பாட்டுக் குழுவுக்கு முறைப்பாடு கிடைக்கப்பெற்றுள்ளது. அதுதொடர்பில்விசாரணைகள் இடம்பெற்று அவர்களை இடமாற்றம் செய்ததில் சில தவறுகள் உள்ளன என்று நாம் கண்டறிந்துள்ளோம்.

எனவே முறைப்பாட்டுக்குழு மாகாண சபைக்கு அனுப்பி வைத்துள்ள விசாரணை அறிக்கையைஅதிகாரிகள்மதிக்கவேண்டும். அவ்வாறு மதிக்காது தமக்கு ஏற்றவகையில் நடந்து கொண்டால் இந்தச் சபையின் உச்ச அதிகாரத்தை பிரயோகிக்க வேண்டிவரும் - என்றார். இதன்பின்னர் கருத்துத் தெரிவித்த வடக்கு சுகாதார அமைச்சர்,

இந்தவிடயம்நீதிமன்றில்இருக்கின்றது. நாம் நீதிமன்றின் தீர்ப்பு வந்தவுடன் கதைப்பது பொருத்தமாக இருக்கும் - என்றார்.

இதன்போது சில உறுப்பினர்கள், எமக்குள் இருக்கின்ற பிரச்சினைகளை நாமே பேசித் தீர்க்க முடியும். நாம் ஒற்றுமையாக அவற்றைத்தீர்த்தால்அதனைநீதிமன்றில்தெரிவிக்கலாம் என்றனர்.

இதனை ஏற்ற அவைத்தலைவர் மாகாண சுகாதார அமைச்சே இந்த விடயத்தைக் கையாளட்டும் - என்றார். (ய-08)

## அரசமைப்பை நிறைவேற்ற

# மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்கு ஜே.வி.பி. முட்டுக்கொடுக்கக் கூடாது

## கோரிக்கை விடுக்கிறார் விமல்

கொழும்பு, செப். 29
மக்கள் விடுதலை முன்னணியின் நிறுவுனர் ரோஹண விஜயவீரவின் கொள்கையை ஒரு வீதமேனும் இன்னும் பின்பற்றி வருகின்றீர்கள் என்றால் பிரிவினைவாத அரசமைப்பை எதிர்த்து நாடாளுமன்றத்தில் செயற்பட வேண்டும். அரசமைப்புக்கு எதிராக இவர்கள் வாக்களிக்க வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் இந்த நாட்டிற்கும் அதேபோல் மக்கள் விடுதலை முன்னணியின் கொள்கைக்கும் பெரிய அழிவை ஏற்படுத்தும். இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.
புதிய அரசமைப்புக்கு எதிராக துண்டறிக்கை விநியோகிக்கும் நிகழ்வு கொழும்பு புறக்கோட்டை தொடருந்து நிலையத்துக்கு முன்பாக இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
நாட்டின் விலைவாசியை குறைப்பதாகக் கூறிக்கொண்டு ஆட்சிக்கு வந்தவர்கள் இன்று தேங்காய் விலை, எரிவாயு விலை உள்ளிட்டு மக்களின் அன்றாட பொருள்களுக்



கான விலை உயர்வை மேற்கொண்டு வருகின்றனர். ஒருபுறம் நாட்டின் மக்களுக்கு வயிற்றில் அடிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுத்து வருகின்றனர். மறுபுறம் பிரிவினைவாதிகளுக்கு வாய்ப்புகளை உருவாக்கிக்கொடுக்கும் நகர்வுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.
இவற்றை எல்லாம் தடைகள் இல்லாது செயற்படுத்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பணம் கொடுக்கப்பட்டு விலைக்கு வாங்கப்பட்டுள்ளனர். மாகாணசபை சட்டத்தை நிறைவேற்ற சில அமைச்சர்களுக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் பெரிய அளவில் நிதி வழங்கப்பட்டுள்ளது.
இதே முறையில் தான் நாட்டை பிரிக்கும் பிரிவினைவாத அரசியல் அமைப்பும் நிறை வேற்றப்படவுள்ளது.
பிரிவினைவாத செயற்பாட்டைத் தடுத்த, கூட்டாட்சியின் விளைவுகளை நாட்டுக்குக் கற்பித்த, ஒற்றையாட்சியை உருவாக்க போராடிய ரோகண விஜயவீர உருவாக்கிய மக்கள் விடுதலை முன்னணியின் நிகழ்கால தலைவர்களிடம் நாம் கேட்பது ஒன்றேயாகும். ரோஹண விஜயவீரவின் கொள்கையை ஒரு வீதமேனும் இன்னும் பின்பற்றி வருகின்றீர்கள் என்றால் இந்தப் பிரிவினைவாத அரசமைப்பை எதிர்த்து நாடாளுமன்றத்தில் செயற்பட வேண்டும். அரசமைப்புக்கு எதிராக இவர்கள் வாக்களிக்க வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் இந்த நாட்டுக்கும் அதேபோல் மக்கள் விடுதலையின் கொள்கைக்கும் பெரிய அழிவை ஏற்படுத்தும். இதனை மறந்துவிடாது செயற்படவேண்டும் - என்றார்.
(5.31)

## வட–கிழக்கு இணைப்புக்கு உலமா கட்சி கடும் எதிர்ப்பு

கொழும்பு, செப். 29
வடக்கும் கிழக்கும் ஒரே மாகாணமாகக் கருதப்படும் என்ற இடைக்கால அறிக்கைக்கு கையை உயர்த்திவிட்டு வடக்கு கிழக்கு இணைப்புக்கெதிராக கிழக்கு இளைஞர்களை ஒன்று திரட்டி போராடுவோம் என்றும் கரையோர மாவட்டம் கிடைக்காவிட்டால் பிரதி அமைச்சு பதவி விலகுவேன் என்றும் முஸ்லிம் காங்கிரஸ் மூத்த உறுப்பினர் ஹரீஸ் பேசியிருப்பது அந்தக் கட்சியினரின் கையாலாகாத்தனம். இவ்வாறு கிழக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவரும், உலமா கட்சியின் தலைவருமான முபாரக் அப்துல் மஜீட் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
வடக்கு கிழப்பு இணைப்பு விடயத்தில் மகிந்த ராஜபக்ச தலைமையிலான அணியே தமக்கு நம்பிக்கை நட்சத்திரமாக உள்ளதாக ஹரீஸ் பேசியிருப்பது அவரது தாமதமான ஞானத்தைக் காட்டுகிறது. இதைத்தான் உலமா கட்சி 2015ஆம் ஆண்டு அரச தலைவர் தேர்தலில் மிகத்தெளிவாகக் கூறியது.
தென்னிலங்கை சிங்கள இனவாதிகள் முஸ்லிம்களுக்கெதிராக இனவாதத்தை முன்னெடுப்பதால் தென்னிலங்கை முஸ்லிம்கள் மகிந்தவுக்கெதிராக வாக்களித்தாலும் கிழக்கு முஸ்லிம்கள் எந்தவகையிலும் மகிந்தவால் பாதிக்கப்படாத நிலையில், மகிந்தவால் பல நன்மைகள் பெற்றுள்ள நிலையில் வடக்கு கிழக்கு முஸ்லிம்கள் மகிந்தவை ஆதரிக்க வேண்டும் என்று நாம் கூறியபோது முஸ்லிம் காங்கிரஸ்காரர்கள் எம்மை மேடை போட்டுத் தூற்றினர். இப்போது ஹரீஸ் போன்றோர் வெட்கமில்லாமல் மகிந்ததான் நம்பிக்கை நட்சத்திரம் என்கிறார்கள்.
கரையோர மாவட்டம் என்ற மிட்டாசுக்காக வடக்கு கிழக்கை இணைக்க அனுமதிக்க முடியாது. ஆகக் குறைந்தது கிழக்கு மாகாணத்தில் தமிழ்க் கூட்டமைப்புடன் இணைந்து ஆட்சி செய்யு முன் கரையோர மாவட்டத்துக்கு தமிழ்க் கூட்டமைப்பு ஆதரவைத் தந்தால் தான் கூட்டு என்று தெரிவித்திருக்க வேண்டும்.
கூட்டு அரசுடன் இணையும் போதாவது இந்தச் சின்ன விடயத்தை நிபந்தனையாக்கியிருக்க முடியும். அதனை விடுத்து பதவிகளுக்கு ஆசைப்பட்டு சமூகத்தின் பெறுமதியான வாக்குகளை விற்று விட்டு இப்போது வழமை போன்று முஸ்லிம்களை உசுப்பேற்றுகிறார்கள்.
கரையோர மாவட்டம் என்பது முஸ்லிம் மாவட்டம் அல்ல. அது தமிழ் பேசும் மாவட்டமாகும். இதனை மிக இலகுவாக தமிழர்களால் பெற்றுத்தர முடியும். முஸ்லிம் காங்கிரசை விட தமிழர்களை இது விடயத்தில் நம்ப முடியும். ஆனாலும் முஸ்லிம் காங்கிரஸ் முட்டாள்தனமாக கரையோர மாவட்டம் என்பது ஏதோ தனி நாடு என்பது போல் தூக்கிப்பிடிப்பதால் இந்த மிட்டாயை வைத்து கிழக்கு என்ற கிட்ணியை முஸ்லிம்களிடமிருந்து பறிப்பதற்காக தமிழ்க் கூட்டமைப்பும் முஸ்லிம் காங்கிரஸும் சேர்ந்து ஆடும் நாடகமே கரையோர மாவட்ட இழுபறியாகும்.
முஸ்லிம்களின் லட்சக்கணக்கான வாக்குகளைப்பெற்றும் இந்த சாதாரண விடயத்தைக் கூட செய்ய முடியாமல் பதவிக்காக சரணடைந்தவர்கள் இளைஞர்களை ஒன்று சேர்த்துப் போராடப்போகிறோம் என்பது மிகப்பெரிய ஏமாற்றும் நகைச்சுவையாகும். முஸ்லிம் காங்கிரஸை மக்கள் தேர்ந்தெடுத்தது அதன் மக்கள் பிரதிநிதிகள் ஜனநாயக ரீதியில் போராட வேண்டும் என்பதற்காகவே தவிர தாம் பதவிகளையும் பவிசுகளையும் அனுபவித்து சமூகத்தை அவற்றுக்காக விற்று விட்டுப் பின்னர் இளைஞர்களை போராட்டத்துக்கு அழைப்பதற்காக அல்ல என்பாதை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.
பிரதி அமைச்சர் ஹரீஸ் தனது பேச்சில் உண்மையானவராக இருந்தால் வடக்கும் கிழக்கும் ஒரு மாகாணம் என குறிப்பிட்டிருக்கும் இடைக்கால அறிக்கையை எதிர்க்குமுகமாக தனது தலைவர் ஹக்கீமையும் அழைத்துக்கொண்டு நாடாளுமன்றத்தில் எதிரணியில் தற்காலிகமாவது அமர்ந்து காட்ட வேண்டும் -என்றார். (5)

## வங்கிகள், கூட்டுத்தாபனத்தை தனியார் மயமாக்க எதிர்ப்பு

கொழும்பு, செப். 29
மக்கள் வங்கி, இலங்கை வங்கி மற்றும் இலங்கைக் காப்புறுதி கூட்டுத்தாபனம் ஆகியவற்றை பங்குச்சந்தையின் ஊடாக தனியார் மயப்படுத்துவதற்கு அரசு எடுத்திருக்கும் தீர்மானத்தை உடனடியாகக் கைவிட வேண்டும் என்று இலங்கை வங்கி ஊழியர்கள் சங்கம் எச்சரிக்கை விடுத்தது.
இது தொடர்பில் அந்தச் சங்கத்தின் தலைவர் டி. ஜி.டபுல்யு. குணவர்தன மேலும் தெரிவித்ததாவது:
1990ஆம் ஆண்டுகளில் அரச வங்கிகள், நீர், மின் ஆகிய நிறுவனங்கள் நட்டத்தில் இயங்குவதாக தெரிவித்து விற்பனை செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளை தொழிற்சங்கங்களும் சிவில் அமைப்புக்களும் ஒன்றாக இணைந்து மேற்கொண்ட எதிர்ப்பையடுத்துக் கைவிடப்பட்டது.
கூட்டு அரசு கடந்த 2016ஆம் ஆண்டு பன்னாட்டு நாணய நிதியத்தின் ஊடாகப் பெற்றுக் கொண்ட கடன்களுக்காக கைச்சாத்திடப்பட்ட நிபந்தனைகளுக்கமைய அரச நிறுவனங்களை விற்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.
இவ்வாண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் பரிந்துரையிலும் அரச நிறுவனங்களை விற்கின்ற முதலாவது படிமுறை வெளிப்படுத்தப்பட்டிருந்தது.
வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடுகளை மேற் கொள்வதில் அசமந்தப்போக்கைக் காட்டிவருவதால் லாப மீட்டு அரச நிறுவனங்களை விற்று அதில் 10 வீதத்தை பங்குச்சந்தைக்கு அரசு விடுவிக்கும். அதனடிப்படையிலேயே இலங்கை வங்கி, மக்கள் வங்கி மற்றும் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தை பங்குச் சந்தைக்குக் கொண்டு செல்வதாக பல்வேறு ஊடகங்களில் வெளியிட்ட கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு நாம் அரச தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர் கபீர் ஹாசிமிடம் தெளிவுபடுத்துதலை எதிர்பார்த்தோம். எனினும் இவரையிலும் அதற்கான பதில் கிடைக்கவில்லை.
இவையனைத்தையும் கருத்திற்கொண்டு அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்துவதற்கு அரசு எடுத்துள்ள தீர்மானத்துக்கு நாம் சகல தொழிற்சங்கங்களையும் இணைத்து பெரிய தொழிற்சங்கப் போராட்டத்தை முன்னெடுக்கவும் தயாராகவுள்ளோம் -என்றார்.
(5.31)

## புதிய அரசமைப்பு குறித்து அரசின் நிலைப்பாடு என்ன?

*அம்பலப்படுத்துமாறு எதிரணி வலியுறுத்து*

புதிய அரசமைப்பு தொடர்பில் தனது நிலைப்பாடு என்னவென்பதை அரசு முதலில் அறிவிக்க வேண்டும் என்று மகிந்த அணி வலியுறுத்தியுள்ளது.
சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவரும் முன்னாள் அயலுறவுத்துறை அமைச்சருமான பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
புதிய அரசமைப்பொன்றை உருவாக்குவதற்கான இடைக்கால அறிக்கையை அரசு நாடாளுமன்றில் சமர்ப்பித்துள்ளது.
சிறுபான்மைக் கட்சிகளின் கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. அதியுச்ச அதிகாரப் பகிர்வும் வழங்கப்படும் எனவும் அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.
புதிய அரசமைப்பு தொடர்பில் தமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தி ஐக்கிய தேசிய கட்சி இன்னும் அறிக்கை வெளியிடவில்லை. இது விடயத்தில் அரசின் நிலைப்பாடு என்னவென்பதை நாட்டு மக்களுக்கு அறிவிக்க வேண்டும். மாறாக சிறுபான்மையினக் கட்சிகளின் நிலைப்பாட்டை மட்டும் அறிவிக்கக்கூடாது - என்றார். (5)

## இடைக்கால அறிக்கையில்

# தமிழரின் வேணவாக்கள் முழுமைப்படுத்தப்படவில்லை

## கணேஸ்வரன் வேலாயுதம் தெரிவிப்பு

கொழும்பு, செப். 29
தமிழ் மக்களின் ஆகக்குறைந்த கோரிக்கைகளைக் கூட இடைக்கால அறிக்கை பூர்த்தி செய்யவில்லை. தமிழ் மக்களுக்கு ஏமாற்றத்தையே தந்துள்ளது. இவ்வாறு ரெலோ பரப்புரைச் செயலர் கணேஸ்வரன் வேலாயுதம் தெரிவித்தார்.
கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால அறிக்கை குறித்து ரொலோ இயக்கத்தின் கொள்ளை பரப்புச் செயலர் கணேஸ்வரன் இவ்வாறு இதனைத் தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
புதிய அரசமைப்பை உருவாக்குவதற்காக முழு நாடாளுமன்றமும் அரசமைப்பு நிர்ணய சபையாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. அரசமைப்புப் பேரவைக்குள் பல்வேறு உபகுழுக்கள் அமைக்கப்பட்டன. இதில் பிரதான உபகுழு 21 பேர் கொண்டதாக அமைந்திருந்தது. இது தவிர, ஏனைய பல்வேறு விடயங்கள் தொடர்பாக பல உப குழுக்கள் உருவாக்கப்பட்டன.
கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால அறிக்கை தமிழ் மக்களின் நீண்ட கால அரசியல் கோரிக்கைகளை ஆகக் குறைந்த பட்சமேனும் பூர்த்தி செய்யவில்லை.
அடுத்த சில வாரங்களில் இடைக்கால அறிக்கை குறித்து விரிவான கலந்துரையாடலொன்றை தமிழ் ஈழ விடுதலை இயக்கம் வவுனியாவில் ஒழுங்கு செய்துள்ளது -என்றார்.
(5)

5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
23
.
11
.
1951



இறப்பு
29
.
09
.
2012

நடராசா ஜெயராசா (விஜயகுமார்)

குடும்பத்தின் ஒளி விளக்காய்
எம் வாழ்வில் ஒளியேற்றிய தெய்வமே!
இப் பாரினில் எம்மைப் பரிதவிக்க விட்டுச்
சென்றாலும்ட என்றும் விடிவெள்ளியாய்
வழி நடத்தும் எங்கள் தந்தையே!
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

இல.7, சென்மேரிஸ்
முதலாம் ஒழுங்கை,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்.

# இலங்கை அகதிகளும் புலம்பெயர்ந்தனர் பௌத்தவாதிகளுக்கு ராஜித நினைவூட்டு

கொழும்பு, செப். 29

கடந்த காலங்களில் இலங்கையிலிருந்து 20 லட்சம் பேர் அகதிகளாக வெளியேற்றப்பட்டுள்ளனர். அதைத் தெரிந்து கொள்ளாத பௌத்தவாதிகளே ரோஹிங்ய அகதிகளுக்கு எதிராகக் கருத்துக்களை முன்வைக்கின்றனர். இவ்வாறு அமைச்சரும், அமைச்சரவை இணைப் பேச்சாளருமான ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.



தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அகதிகளைப் பௌத்த பிக்குகள் தாக்கியிருந்தால் அவர்களைக் கைது செய்ய வேண்டும். பொலிஸார் இந்தத் தாக்குதலை வேடிக்கை பார்த்தமை உண்மையானால் அவர்களுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இலங்கையின் இந்த ஆண்டில் ரோஹிங்ய முஸ்லிம்கள் தஞ்சம் கோரியுள்ளதாகக் கூறிக்கொண்டு இன்று எதிர்ப்பைத் தெரிவித்து வருகின்றனர். ஆனால் ரோஹிங்ய முஸ்லிம்கள் இலங்கையில் கடந்த 2008 ஆம் ஆண்டில் இருந்து அகதிகளாக வாழ்கின்றனர். அவர்கள் கடந்த 2012ஆம் ஆண்டு மீண்டும் திருப்பி அனுப்பப்பட்டனர். அதேபோல் 2013ஆம் ஆண்டு மீண்டும் மியன்மாரில் இருந்து 101 ரோஹிங்ய முஸ்லிம்கள் இலங்கைக்கு வந்தனர். அவர்கள் கடந்த 2015ஆம் ஆண்டே திருப்பி அனுப்பப்பட்டனர். இந்தக் காலத்தில் பௌத்த பிக்குகளுக்கு உண்மைகள் விளங்கவில்லையா? அப்போது முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் ஆதரவுடன் இவர்கள் பாதுகாக்கப்பட்டனர்.

இந்தச் செயற்பாடுகள் எதையும் எதிர்க்க எந்தவொரு தேரருக்கும் தைரியம் இருக்கவில்லை. இன்று ஒருசிலர் தூண்டுதலில் இனவாதத்தைப் பரப்பும் வகையில் சிலர் குழப்பங்களை விளைவித்து வருகின்றனர்.

இலங்கையில் உள்ள 30 ரோஹிங்ய முஸ்லிம்கள் குறித்து பௌத்த பிக்குகள் கூச்சல் இடுகின்றனர். ஆனால் இலங்கையில் இருந்து 20 லட்சம் மக்கள் உலகில் அனைத்து நாடுகளிலும் அகதிகளாக வாழ்ந்து வருகின்றனர். போர்க் காலத்திலும் அதற்கு முன்னராக முரண்பாட்டுக் காலத்திலும் நாட்டில் இருந்து அகதிகளாக வெளியேறிய நபர்களை ஐரோப்பிய நாடுகள் அகதிகளாக ஏற்றுக்கொண்டு அவர்களுக்கான சகல உதவிகளையும் வழங்கி வருகின்றனர். எமது நாட்டில் இருந்து அகதிகளை வெளியேற்றியவர்கள் தான் இன்று அகதிகள் குறித்து பேசுகின்றனர் - என்றார். (5.31)

## ரவி - மைக்கல் பெரேரா மோதலைத் தீர்க்க ரணில் களத்தில்

ரவி கருணாநாயக்கவுக்கும், ஜோசப் மைக்கல் பெரேராவுக்கும் இடையில் கடும் முறுகல் ஏற்பட்டுள்ளது. இருவருக்கும் இடையிலான முறுகலைத் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலையிட்டுத் தீர்க்க முற்பட்டுள்ளார். இந்த விடயம் தொடர்பில் தலைமை அமைச்சர் ரணில் நேற்றுமுன்தினம், நாடாளுமன்ற உறுப்பினர்களான ரவி கருணாநாயக்க மற்றும் காவிந்த ஜயவர்தன ஆகியோரை அலரி மாளிகையில் வைத்து சந்தித்து நீண்ட நேரம் பேச்சு நடத்தியுள்ளார். இந்த விடயம் தொடர்பாக முன்னாள் அமைச்சரும் ஜாஎல ஐக்கிய தேசியக் கட்சியின் தொகுதி அமைப்பாளருமான ஜோசப் மைக்கல் பெரேராவை நேரில் அழைத்து விசாரிக்கவுள்ளார். அடுத்த வாரமளவில் பிரச்சினைக்குத் தீர்வுகிட்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (5.31)

அம்மாவின் நினைவில்...
*****
18 மாதங்களின் பின், சரஸ்வதி பூஜையான இன்று, பகவத் கீதா என்ற புனித நூல் வெளியிடப்படுகின்றது.



மங்கையற்கரசி அருணாசலம்
13-12-1922 31-03-2016

என்னை அன்புடன் வளர்த்து என்னுடன்
இறுதி வரை வாழ்ந்த எனது அன்பான,
இனிமையான, கருணைமிக்க அம்மாவை
நன்றியுடன் நினைவுகூர்ந்து,

ஸ்ரீ க்ருஷ்ண பகவான் உபதேசித்த திருவாக்காகிய
பகவத் கீதா
கௌரவ ஸ்ரீ பொ. ராமநாதன் K.C., C.M.G.,
அவர்களால் தமிழில் இயற்றப்பட்ட
மொழிபெயர்ப்பும்,
விருத்தியுரையும்



என்ற 532 பக்கங்களைக் கொண்ட நூலினை,
எனது தாயின் நினைவாக, புத்தகங்கள் அழியா
வரம் பெற்றவை என்பதற்க்குச் சாட்சியாக,
நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்
என்பதற்கு அமைய, 103 ஆண்டுகளின் பின்
வெளியிட்டு,
அம்மாவின் பாதக்கமலங்களில் சமர்ப்பிக்கின்றேன்.

இந்நூல்,
எனது அம்மாவின் 1வது ஆண்டு நினைவு
தினத்தன்று வெளியிடப்பட்ட,
"You are the Pilot, Pilot your Life", "நீங்கள் தான்
விமானி, உங்கள் வாழ்க்கையை
நெறிப்படுத்துங்கள்"




என்ற நூல் விநியோகிக்கப்பட்ட முறைப்படி
வடக்கு-கிழக்கு மற்றும் மலையகத்திலுள்ள எல்லா
மாவட்டங்களிலும், கொழும்பு மாவட்டத்திலும்
உள்ள பாடலசாலைகள், நூலகங்கள்
என்பவற்றிற்கு
இலவசமாக வழங்கப்படும்.

எனது அம்மா தனது வாழ்நாள்களில்
எனக்கு அன்பளிப்பு செய்த இடங்களில்
வாழ்ந்து உயிர்நீத்த பிதிர்கள், என்னுடன் வாழ்ந்து உயிர்நீத்த
எனது அன்பான ஜீவன்கள் அனைவருக்கும் இந்நூலினை
சமர்ப்பிக்கின்றேன்.

அ. ஸ்கந்தராஜ் (மகன்) / A. Skandaraj (Son)
15 Fareed Place, Colombo 4
318 Navalar Road, Nallur Jaffna.
072-2220488; skanda@sltnet.lk

ஓலமிட்டு அலறியே ஒன்பதாவது ஆண்டில்

அன்னை
மடியில்
12
.
04
.
1961



ஆண்டவன்
அடியில்
29
.
09
.
2008

அமரர் உயர்திரு க.விக்னராஜேஸ்வரன்
(B.Sc. Dip.in Edu.ISA, SLPS
நிக்கவெரட்டிய கல்வி வலயம்)

"நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தோம்
நினையா தொருபோதும் இருந்தறியோம்"

எங்களை ஆறாத்துயரில் ஆழ்த்தி
மீளாத்துயில் கொண்ட உங்கள்
ஆத்மா சாந்தியடைய முன்னைநாதர்
சமேதவடிவாம்பிகையின் பாதார
விந்தங்களைப் பணிகின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

திதி: 19.09.2017

பன்னாலை,
தெல்லிப்பழை.

அன்பு மனைவி,
குடும்பத்தினர்.
3ஆம் வட்டாரம், நயினாதீவு.

# ஆட்சியைக் கவிழ்ப்பது பிரச்சினைக்குத் தீர்வாகாது

## ஹக்கீமின் அறிவுரை இது



கொழும்பு, செப். 29

"எமக்கு நிறையப் பிரச்சினைகள் இருக்கின்றன. ஆட்சியைக் கவிழ்ப்பது அதற்குத் தீர்வில்லை. இந்தக் கூட்டு அரசை யாராலும் கவிழ்க்க முடியாது" இவ்வாறு அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

பதுளையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கூட்டு அரசோடு எமது விடயங்களைப் பேசி சரிசெய்து கொள்கின்ற விதத்தில் நாம் இணக்கப்பாட்டுடன் செயலாற்றி வருகின்றோம். இதன் மீதான நம்பிக்கையை நாம் அண்மையில் நிரூபித்துக் காட்டினோம். இந்த மேடையில் வெவ்வேறு கருத்துக்களைப் பிரதிபலிக்கின்ற, கருத்து முரண்பாடுகளை உடைய பலர் இருக்கின்றனர். எங்களுக்குள் பெரிய கருத்து மோதல்கள் எழுந்துள்ளன. பல முரண்பாடுகள் எழுந்துள்ளன. ஆனால்கூட்டுஅரசைக்காப்பாற்றுகின்ற, அதனைத் தொடர்ந்தும் கொண்டு செல்கின்ற நடவடிக்கைகளில்நாம்ஒன்றுபட்டுஇணைந்தே செயலாற்றுகின்றோம். அதனை அண்மையில் நாங்கள் நிரூபித்துக் காட்டினோம்.

எமக்குப் பிரச்சினைகள் இருக்கின்றன. ஆட்சியைக் கவிழ்ப்பதன் மூலம் அதனைத் தீர்க்க முடியாது. சுமுகமான பேச்சுக்கள் மூலமே நாங்கள் சாதிக்க வேண்டும். உணர்ச்சி வசப்பட்டு எடுக்கின்ற எந்த முடிவும் வெற்றியளிக்காது.

நாம் எமது பிரச்சினைகளை உரிய மட்டத்துக்குக் கொண்டு சென்றுள்ளோம். அவற்றில் சிலவற்றுக்குத் தீர்வைப் பெற்றுக் கொள்ளும் வகையில் உடன்பாடு காணப்பட்டுள்ளது. இந்த நல்லாட்சியை இலகுவில் வீழ்த்திட முடியாது. அதற்கு நாங்கள் ஒத்துழைப்பு வழங்கப்போவதுமில்லை. சிறுபான்மை சமூகத்தின் ஒட்டுமொத்தமான பங்களிப்புக்கூடாக உருவாக்கப்பட்ட இந்த ஆட்சியின் மூலம் எமது உரிமைகளைக் காப்பாற்றிக் கொள்கின்ற பேச்சுக்கள் மூலம் பிரச்சினை களை தீர்த்துக் கொள்கின்ற நல்ல சகுனம் அமைந்துள்ளது - என்றார். (5)

உள்ளூராட்சித் தேர்தல்:

# அமைச்சரும் ஆணைக்குழுத் தலைவரும் சந்தித்துப் பேச்சு

கொழும்பு, செப். 29

தேர்தல் நடத்துவது தொடர்பில், தேர்தல் ஆணைக்குழுவின் தலைவருடன் முக்கிய சந்திப்பை நடத்தியதாக உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பு நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் பைசர் முஸ்தபா தெரிவித்ததாவது:

தேர்தல் நடத்தும்போது எமது அமைச்சு செய்ய வேண்டிய கருமங்கள் தொடர்பிலும், தேர்தல் ஆணைக்குழு மற்றும் அரசியல் கட்சிகளின் கடமைகள் தொடர்பிலும் ஆராயப்பட்டது. இந்தச் சந்திப்பு மிகவும் வினைத்திறனாக அமைந்திருந்தது - என்றார்.

தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய மற்றும் அதன் அதிகாரிகளும், நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டிருந்தனர். (5,33)

கிழக்கு மீதும் மகிந்த குறி

# சு.க. உறுப்பினர்கள் மூவர் மகிந்த அணி பக்கம் தாவல்

கொழும்பு, செப். 29

கிழக்கு மாகாண சபை நாளை நள்ளிரவுடன் கலையவுள்ள நிலையில், சுதந்திரக் கட்சியின் கிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள் மூவர் மகிந்த அணி பக்கம் தாவியுள்ளனர்.

அம்பாறை மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தும் டபிள்யூ.வீரசிங்க, எஸ்.தெவரப்பெரும, டி.எம்.ஜயசேகர ஆகிய மூவருமே இவ்வாறு சுதந்திரக் கட்சியிலிருந்து விலகி சிறிலங்கா பொதுஜன பெரமுனவில் இணைந்து அங்கத்துவத்தைப் பெற்றுள்ளனர்.

கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செல்வாக்கைத் தகர்க்கும் வகையிலேயே மகிந்த தலைமையிலான கூட்டு எதிரணி மேற்படி மூவரையும் தம்பக்கம் வளைத்துப்போட்டுள்ளது. (5)


## பெயர் மாற்றம்

புறாப்பொறுக்கி, ஆலடி கரணவாய் மேற்கு கரவெட்டி- எனும் முகவரியை வசிப்பிடமாக கொண்ட **அழகு தேவி தேவராசா** ஆகிய நான் இன்று முதல் எனது பெயரை **தேவராசா அழகராசதேவி** என பெயர் மாற்றம் செய்வதோடு இனிவருங் காலங்களில் சகல ஆவணங்களிலும் எனது புதிய பெயரையே பயன்படுத்-துவேன் என்று இத்தால் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசுக்கும் மக்களுக்கும் அறியத்தருகிறேன்.

**தே. அழகராசதேவி**

## HOTEL விற்பனைக்கு

யாழ் நகர் சுண்டுக்குழியில் ஐரோப்பிய பாணியில் ஐரோப்பிய கட்டடக் கலைஞரால் 6 பரப்பு 5 குளி அளவுள்ள காணியில் வடிவமைக்கப்பட்ட

**HOTEL, COTTAGE + RESTAURANT** (17 அறைகள்)

**வாகனத் தரிப்பிட வசதி**

மற்றும் அனைத்து உபகரணங்களுடன் விற்பனைக்கு உண்டு.

**077 783 4024, 0044 7503 098 204**

## Vacancy

**Receptionist (Female)**

யாழில் நான்கு வருடங்களாக சிறந்த சேவையாற்றிவரும் எமது நிறுவனத்திற்கு சிறந்த பேச்சாற்றலும் அடிப்படைக் கணினி அறிவும் கொண்ட **வரவேற்பாளர்** தேவை.

நேர்முகத் தேர்வு: 29.09.2017 - 30.09.2017
முற்பகல் 10.00 - பிற்பகல் 2.00

**Winstar Visa Consultants**
106, தபாற்பெட்டிச் சந்தி, திருநெல்வேலி.
021 300 4641


# ரோஹிங்ய முஸ்லிம்கள் விவகாரம்; இனவாதிகளை இயக்குவது யார்?

## உடன் கண்டறியுமாறு சாகலவிடம் ஹக்கீம் கோரிக்கை

கொழும்பு, செப். 29

அகதிகளாக இலங்கை வந்துள்ள மியன்மார் முஸ்லிம் மக்கள் மீது நடத்தப்பட்டுள்ள அராஜகம் குறித்து நல்லாட்சி அரசு வாளாவிருக்க முடியாதென்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பில் ரோஹிங்ய முஸ்லிம் மக்கள் மீது பிக்குமாரும், சிங்கள இனவாதிகளும் நடத்திய அராஜகச் செயற்பாடுகள் குறித்து சட்டம், ஒழுங்கு அமைச்சருடன் பேச்சு நடத்திய போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார் அமைச்சர் ஹக்கீம். மியன்மார் முஸ்லிம் மக்களுக்கு மனிதநேய அடிப்படையில் உதவுவதன் அவசியம் குறித்து இந்தச் சந்திப் பின்போது சுட்டிக்காட்டியுள்ள அமைச்சர், அந்த மக்களை அவர்கள் தங்குமிடத்திலிருந்து வெளியேற்ற முயன்ற ஆர்ப்பாட்டக்காரர்கள் ஏற்கனவே இனவாதச் செயற்பாடுகளை மேற்கொண்டதற்காகக் கைதுசெய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டவர்களென்றும் விவரங்களுடன் எடுத்துக் கூறியுள்ளார். இனவாதச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த அரசு கொள்கையளவில் தீர்மானம் எடுத்திருப்பதால், மேற்படி பிணையில் விடுவிக்கப்பட்ட நபர்களைப் பின்னனியிலிருந்து இயக்குவது யார் என்பதைக் கண்டறிய அரசு உடன் நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமெனவும் அமைச்சர் ஹக்கீம் சாகலவிடம் கேட்டுள்ளார் எனத் தெரியவருகின்றது. (5)


## தேவை

புங்குடுதீவு பிரதான வீதியில் காணி தேவை.

தொடர்பு :- 077 7295 428

## விற்பனைக்குண்டு

Atlas கொப்பிகள், No.2 கொப்பிகள், Counter Table, போட்டோகொப்பி இயந்திரம், Colour printer, கண்ணாடி அலுமாரிகள், இரும்பு ராக்கைகள் என்பன மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு :- 077 900 5856

## CANADA , USA study & work visa

**Minimum Qualification O/L**

- VISA Consulting and Online from filling.
- குறைந்த செலவில், விரைவில் பயணம்.
- Bank Balance 100%
- குறைந்த தகைமை O/L

**Swiss, France**
செல்ல வழிகாட்டல்

**Royal Visa Consultants & Education Service**

No.128, Jampettah Street,
Colombo -13
Email: rvces_consultants@yahoo.com
Haarini : 011 232 3975
Office : 077 721 6291

## பெரிய காண்டாமணி மற்றும் வெள்ளி உலோக பிளேற்றிங் வேலைகள்

கோவில் கொடிமரத்துக்குத் தேவையான வெள்ளி உலோகத்தில்தயாரிக்கப்பட்ட மறைப்புக் கவசம் மற்றும் அளவில்பெரியதான காண்டாமணி ஆகியன விற்பனைக்குண்டு.





மொரட்டுவையில் பாரம்பரிய உலோகத்தொழில் செய்வோரால் உருவாக்கப்பட்டதும் அளவில் பெரியதான மற்றும் பலதரப்பட்ட நிறைகொண்டதும் இனிமையான நாதமெழுப்பும் காண்டாமணிகள் எம்மிடம் விற்பனைக்கு உண்டு. தேவைப்படும் கோவில்களுக்கு கொண்டுவந்து விநியோகிக்கப்படும்.

பழுதடைந்த காண்டாமணிகள் மீண்டும் உருக்கி வார்த்து உருவாக்கிக் கொடுக்கப்படும். 25 வருடகால உத்தரவாதம் வழங்கப்படும்.

கோவிலின் கொடிமரம் மற்றும் அதன் மறைப்பு என்பவை இந்தியாவின் கும்பகோணம் சிற்பாச்சாரியர்களைக் கொண்டு கோவில் வளாகத்தில் வைத்தே இரு வாரகாலத்துள் வெள்ளி உலோகத்தில் விளிம்புகள் பூர்த்தியாக்கி கொடுக்கப்படும்.

கோவில்களுக்கு தேவையான சகல விக்கிரகங்கள் மற்றும் பூஜைக்குரிய உபகரணங்களும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு : லசந்த ஜயேந்திரபுள்ளே,
கே.வி.ஜி. றேட்சென்ரர்,
எல்.ஜி.9, பீப்பிள்ஸ் பார்க், கொழும்பு – 11
தொ. இல.:– 077 152 3370, 072 324 6581,
011 233 0922, 011 265 6066

# போலித் தங்க ஆபரணங்களை அடகுவைக்க முயற்சித்தோர் கைது

கொழும்பு, செப். 29



போலித் தங்க ஆபரணங்களை அடகு வைக்க முயற்சித்த மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வேறு வகை உலோகங்களிலான ஆபரணங்களுக்குத் தங்க முலாம் பூசி, அவற்றை அடகு வைப்பதற்கு முயற்சித்த இரண்டு பெண்களையும் ஆண் ஒருவரையும் காலிப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர்களிடமிருந்து சுமார் நான்கரை லட்சம் ரூபா பெறுமதியான 72 கிராம் எடையுடைய போலித் தங்க ஆபரணங்கள் மீட்கப்பட்டுள்ளன.

இந்தத் தங்க ஆபரணங்கள் அசாதாரண எடையைக் கொண்டிருந்த காரணத்தினால் சந்தேகம் ஏற்பட்டு வங்கி அதிகாரிகள் பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர்.

விசாரணைகளின்போது இந்தத் தங்க ஆபரணங்களில் வேறு வகை உலோகம் நிரப்பப்பட்டு, தங்க முலாம் பூசப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் காலிப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (5)

# ஆமை வேகத்தில் இலங்கை சாடுகிறது ஐரோப்பிய ஒன்றியம்

கொழும்பு, செப். 29

ஜிஎஸ்பி பிளஸ் வரிச்சலுகைக்காக இலங்கை அரசு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் சில விடயங்களில் மெதுவான முன்னேற்றங்களே இருப்பதாக ஐரோப்பிய ஒன்றியம் கவலை வெளியிட்டுள்ளது.

தனது வாக்குறுதிகளை நிறைவேற்றும் ஆற்றல் இலங்கை அரசுக்கு இருப்பதாகவும், ஐரோப்பிய ஒன்றியம் நம்பிக்கை தெரிவித்துள்ளது.

அயலுறவுத்துறை அமைச்சர் திலக் மாரப்பனவுடன் நடந்த சந்திப்பின்போது, ஐரோப்பிய ஒன்றிய ஆணையாளர் கிறிஸ்ரோஸ் ஸ்ரைலியனிடெஸ் இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

பிரசெல்சில் உள்ள ஐரோப்பிய ஒன்றியத் தலைமையகத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடந்த இந்தச் சந்திப்பில் இலங்கையின் தேசியக் கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரப் பிரதி அமைச்சர் ஹர்ச டி சில்வாவும், அயலுறவுத்துறை மற்றும் பாதுகாப்புக் கொள்கைகளுக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் உயர் பிரதிநிதியான பெடெரிக்கா மொக்ஹேரினியும் கலந்து கொண்டனர்.

புதிய அரசு பதவிக்கு வந்த பின்னர் இலங்கையில் ஏற்பட்டுள்ள முக்கியமான முன்னேற்றங்கள் குறித்து ஐரோப்பிய ஆணையாளர் இந்தச் சந்திப்பின்போது வரவேற்புத் தெரிவித்துள்ளார்.

இதன்போது, பன்னாட்டுத் தர நியமங்களுக்கு ஏற்ப சட்டரீதியாக மனித உரிமைகள் தரத்தை உயர்த்துவது மற்றும் ஐ.நா மனித உரிமைகள் சபையின் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

மனித உரிமைகளை மதிப்பதிலும், பன்னாட்டுக் கடப்பாடுகளை நடைமுறைப்படுத்துவதிலும் அரசு உறுதியுடன் இருப்பதாக, இந்தச் சந்திப்பின்போது, திலக் மாரப்பன உறுதியளித்துள்ளார். (5)

# ரோஹிங்யர்கள் தங்கியிருந்த வீட்டை முற்றுகையிட்ட பிக்குகளை நீதிமன்றில் முன்னிலையாகப் பணிப்பு

கொழும்பு, செப். 29

ஐ.நா. சபையின் அகதிகளுக்கான மனிதாபிமான முகவரகத்தின் பாதுகாப்பின் கீழ்க் கல்கிசைப் பொலிஸ் பிரிவில் தங்க வைக்கப்பட்டிருந்த முஸ்லிம் அகதிகளின் வசிப்பிடம் மீது அத்துமீறி அவர்களை வெளியேற்றுமாறு அச்சுறுத்தல் விடுத்து அடாவடியில் ஈடுபட்ட குழுவில் அங்கம் வகித்த இரு தேரர்கள் உட்பட மூவரை மன்றில் முன்னிலையாகக் கல்கிசை நீதிமன்றம் அறிவித்தல் அனுப்பியுள்ளது.

அக்மீமன தயாரத்ன தேரர் உள்ளிட்ட அடையாளம் காணப்பட்ட மூவருக்கே, பொலிஸார் தாக்கல் செய்துள்ள முதல் அறிக்கையை அடுத்து எதிர்வரும் திங்களன்று மன்றில் முன்னிலையாக நீதிமன்றம் இந்த அறிவித்தலை அனுப்பியுள்ளது.

பிக்குகள் தலைமையில் ரோஹிங்ய முஸ்லிம்கள் தங்க வைக்கப்பட்டிருந்த வீட்டுக்கு வந்துள்ள அக்மீமன தயாரத்ன தேரர் தலைமையிலான குழுவினர் வீட்டின் முன்பாக, அவர்களை வெளியேற்றுமாறு கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அவர்கள் வீட்டுக்குள் நுழையவும் முற்பட்ட நிலையில் சம்பவ இடத்துக்குக் கல்கிசைப் பொலிஸார் வரவழைக்கப்பட்டனர்.

அந்த நேரத்தில் பாடசாலைக்குச் சென்றிருந்த அகதிச் சிறுவர்கள் ஓரிருவர் தவிர ஏனையோரை பொலிஸ் ட்ரக் வண்டி ஊடாகக் கல்கிசைப் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அகதிகளின் பாதுகாப்பை உறுதி செய்ய அவர்களைப் பொலிஸார் பொறுப்பேற்றதாகக் கல்கிசை பிராந்தியப் பொலிஸார் தெரிவித்தனர். பாடசாலையில் இருந்த சிறுவர்களும் பின்னர் பாதுகாப்புக் கருதிப் பொலிஸ் நிலையம் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

> “பிக்குகள் தலைமையில் ரோஹிங்ய முஸ்லிம்கள் தங்க வைக்கப்பட்டிருந்த வீட்டுக்கு வந்துள்ள அக்மீமன தயாரத்ன தேரர் தலைமையிலான குழுவினர் வீட்டின் முன்பாக, அவர்களை வெளியேற்றுமாறு கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

அதன் பின்னர் நிலமையை சற்று ஆராய்ந்த பொலிஸார் அகதிகளை மீளவும் அவர்கள் வசித்த வீட்டில் பிற்பகல் வேளையில் மீளக் குடியமர்த்தினர்.

மீளவும் மாலை 5.30 மணியளவில் அந்தப் பகுதியில் கூடிய சுமார் 70 பேர் வரையிலான பிக்குகள் உள்ளிட்ட கடும்போக்குப் பெரும்பான்மை இனத்தவர்கள் கலகத்தை ஏற்படுத்தி வீட்டினுள் அத்துமீற முயற்சித்துள்ளனர். இதனால் அந்தப் பகுதியில் கடும் பதற்ற நிலை ஏற்பட்டது. இதன்போது அகதிகள் தங்கவைக்கப்பட்டிருந்த வீட்டுக்கும் சேதம் விளைவிக்கப்பட்டது.

அதனைத் தடுக்க முயன்ற இரு பொலிஸாரும் காயமடைந்தனர். இதற்கு மேலதிகமாக அவர்கள் பிரதான பாதையில் வாகனப் போக்குவரத்துக்கு இடைஞ்சல் ஏற்படும் வகையில் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

மாலை வேளையில் மீளவும் அகதிகளைப் பாதுகாக்கப் பொலிஸார் கடும் பிரயத்தனத்தை முன்னெடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. நிலமை மோசமடைவதை உணர்ந்த பொலிஸார் ரோஹிங்ய அகதிகளைத் தமது பொறுப்பில் எடுத்து பூசா முகாமிற்கு கொண்டு சென்றனர்.

இது தொடர்பில் நீதிமன்றுக்குக் கல்கிசைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சிறப்பு அறிக்கையினைத் தாக்கல் செய்துள்ள நிலையில் அதன்படியே அக்மீமன தயாரத்ன தேரர் உள்ளிட்ட இரு தேரர்கள் மற்றும் சிவில் நபர் ஒருவருக்கும் மன்றில் முன்னிலையாக அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. (5.31)

# மியன்மார் அகதிகளை மிரட்டிய விவகாரம் இலங்கை அரசுக்கு ஐ.நா. எச்சரிக்கை

கொழும்பு, செப். 29

மியன்மார் ரோஹிங்ய அகதிகளுக்குக் கல்கிசையில் நடந்த வன்செயல் குறித்து அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகம் இலங்கைக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஒரு நாட்டில் தங்கியிருக்கும் அகதிகள் தொடர்பான பொறுப்பு அந்த நாட்டுக்குரியது. வன்முறை மற்றும் சித்திரவதைகளுக்கு உள்ளான அகதிகள் பன்னாட்டுச் சமூகத்தின் பாதுகாப்பும் உதவியும் கிடைக்க வேண்டியவர்கள். இலங்கையில் தங்கியிருக்கும் அகதிகளுக்கு நிரந்தர தீர்வு வழங்கப்படும்வரை அவர்களின் பாதுகாப்புத் தொடர்பான பொறுப்பை இலங்கை அரசே ஏற்கவேண்டும்.

இந்த விடயம் தொடர்பாக அரசுடன் ஒருங்கிணைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இலங்கையில் ஏற்பட்டுள்ள இந்த நிலமை தொடர்பில் கொழும்பில் உள்ள கிளை அலுவலக அதிகாரிகளின் பாதுகாப்பு சம்பந்தமாகவும் கவனம் செலுத்தி வருகிறோம் - என்றுள்ளது. (5)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

திருமதி ஸ்ரீலேகா பேரின்பகுமார்
(B.A Hons)



தேசிய ரீதியிலான அரச ஊழியர்களுக்கிடையி லான ஆக்கத்திறன் போட்டிகளுக்கான பரிசு வழங்கும் நிகழ்வு கொழும்பு BMICH இல் இன்று வெள்ளிக்கிழமை (29.09.2017) நடைபெறுகின்றது.
இந்நிகழ்வில்
சிறுகதை - “நாற்று மேடை” 1 ஆம் இடம்
சிறுவர் ஆக்கம் - “கண்மணியே கவிபாடு” 2 ஆம் இடம்
பாடலாக்கம் - “பாடு பொருள் நீ எனக்கு” 5 ஆம் இடம்
ஆகியவற்றிக்கான விருதுகளை பெற்றுக் கொள்ளும்
எமது பாடசாலை ஆசிரியர் திருமதி. ஸ்ரீலேகா பேரின்பகுமார் அவர்களை மகிழ்வுடன் பாராட்டி வாழ்த்துகிறோம்.
Congratulations
வாழ்த்துவோர்: கல்லூரிச் சமூகம் யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.

ஓம் ஸ்ரீ சாய்ராம்
சீரடி சாயி நாதருடைய
இலங்கையின்
முதலாவது சித்திரத்தேர்
ஈழத்து சீரடியில்
வெள்ளோட்டம்
30.09.2017



அன்பான அடியார்களே!
நிகழும் ஏவிளம்பி வருடம் புரட்டாதி திங்கள் 14 ஆம் நாள் (30.09.2017) சனிக்கிழமை விஜயதசமி தினத்தன்று சாயிநாதரின் திருவருளோடும் பக்தர்களின் பங்களிப்போடும் அமைக்கப்பெற்ற 18 அடி உயரம் கொண்ட புதிய சித்திரத்தேர் வெள்ளோட்ட நிகழ்வானது மாலை 3.00 மணிதொடற்கம் 6.00 மணிவரையுள்ள சுவேளையில் நடைபெறவுள்ளது.

சிற்பத்தேர் நிர்மாணிப்பு
ரதகலா ஞானி ஸ்தபதி
விஸ்வபிரம்ம
ஸ்ரீ செல்லையா பாலசந்திரன்
குழுவினர்
ஸ்ரீகாளிகா சிற்பாலயம்
கே.கே.எஸ்.வீதி. யாழ்ப்பாணம்



“சீரடி சாயி மந்திர்”
314, நாவலர் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம், இலங்கை.
தொ.பே.இல. : 077 722 2568,
077 481 5336
ஆலயஸ்தாபகர்

எமது இதய பூர்வமான வாழ்த்துக்கள்




மட்டுவில் வடக்கைச் சேர்ந்த திரு.பொன்னையா தெய்வேந்திரன் அவர்கள் லண்டன் பக்கிங்காம் சியா நியூ பல்கலைக்கழகத்தின் (Buckinghamshire New University London) சிறப்புச் சட்டமாணி (LLB -HONS) பரீட்சையில் சித்தி பெற்றமைக்காக கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ( BMICH ) கடந்த 10.07.2017 அன்று நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் மேற்படி பல்கலைக்கழக பிரதிநிதியாகவும் நிகழ்வின் கௌரவ விருந்தினராகவும் கலந்துகொண்ட கலாநிதி லொறெய்ன் வற்கின்ஸ் மதீஸ் (Dr. Lorraine Wotkings - Mathys ) அவர்களால் பட்டமளித்துக் கௌரவிக்கப்பட்டதையிட்டு நாமும் எமது இதயபூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு மேலும் அவர் சட்டத்துறையில் மேன்மையடைய வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:- குடும்பத்தினர்
மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.

# மைத்திரி தலைமையில் நடந்த அவசர கூட்டத்தில் தீர்மானம்

★ 5 லட்சம் மெற்றிக் தொன் அரிசி உடனடி இறக்குமதி
★ சதொச விற்பனை நிலையங்கள் ஊடாக வெங்காயம், உ.கிழங்கு குறைந்த விலையில் விற்பனை
★ தேங்காய் விலை அதிகரிப்பைக் கட்டுப்படுத்த உடன் நடவடிக்கை

கொழும்பு, செப். 29
அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலை தொடர்பான சிறப்புக் கலந்துரையாடல் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் அரச தலைவர் செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

அரிசி இறக்குமதி செய்யும் வர்த்தகர்கள் கூடுதலான இலாபத்துடன் விலையை நிர்ணயிப்பதாகத் தெரியவந்தமையால் குறித்த வர்த்தகர்களுடன் கலந்துரையாடி விலைக் குறைப்பு செய்ய நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் ரிசாத் பதியுதீனுக்கு அரச தலைவர் ஆலோசனை வழங்கினார்.

அடுத்துவரும் மாதங்களில் பன்னாட்டுச் சந்தை விலைகளைக் கருத்திலெடுக்காமல் ஐந்து இலட்சம் மெற்றிக் தொன் அரிசியை அரசு மூலம் இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்குமாறும் ஆலோசனை வழங்கப்பட்டதுடன், சதொசவினால் விற்பனை செய்யப்படும் அனைத்து வகையான அரிசிகளினதும் விலைகளைக் குறைத்து அந்த விலைகளைப் பகிரங்கப்படுத்துமாறும் அரச தலைவர் ஆலோசனை வழங்கினார்.

பெரிய வெங்காயம், உருளைக் கிழங்கு ஆகியவை கிலோவொன்று 65 ரூபாவுக்கு இறக்குமதி செய்யப்பட்ட போதிலும் கூடுதல் இலாபத்துடன் விற்பனை செய்யப்படுவது தொடர்பில் விலைகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு நுகர்வோர் சேவை அதிகார சபைக்கு அரச தலைவர் மைத்திரிபாலவினால் ஆலோசனை வழங்கப்பட்டதுடன் சதொசவினால் விற்பனை செய்யப்படும் பெரிய வெங்காயம் மற்றும் உருளைக் கிழங்கின் விலைகளைக் குறைக்குமாறும் ஆலோசனை வழங்கப்பட்டது.

சந்தையில் தேங்காய் விலை அதிகரித்துள்ளமை தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறும், எதிர்வரும் திங்கட்கிழமையிலிருந்து வாகனங்கள் மூலம் தேங்காய்களை நுகர்வோருக்கு விற்பனை செய்யுமாறும் தென்னைப் பயிர்ச் செய்கைக் சபைக்கு அரச தலைவரால் ஆலோசனை வழங்கப்பட்டது.



அத்தியாவசிய உணவுப்பொருள் இறக்குமதிக்கு உரிய விலை மனுக்கோரல் நடைமுறை பின்பற்றப்பட வேண்டும் என்ற போதிலும் தேவையற்ற நிர்வாக மற்றும் சட்ட செயற்பாடுகளால் அலுவலர்கள் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியிருக்கும் என்று அச்சம் கொள்ளத் தேவையில்லை எனவும், உரிய செயற்பாடுகளைப் பின்பற்றி வினைத்திறனாகச் செயற்படுமாறும்அரசதலைவர்ஆலோசனை வழங்கினார்.

வர்த்தக மற்றும் விவசாய அமைச்சு அலுவலர்கள் அடங்கிய குழு வாராந்தம் கூடி அத்தியாவசிய உணவுப் பொருள்களின் அளவு மற்றும் விலை தொடர்பில் தீர்மானம் எடுக்க வேண்டுமெனவும் அரச தலைவர் ஆலோசனை வழங்கினார்.

அத்தியாவசியப் பொருள்களின் விலை அதிகரிப்புக்கு ஒருபோதும் இடமளிக்க முடியாதெனவும், இவ் விடயம் தொடர்பாக மேற்கொள்ளப்படும் தீர்மானங்களைச் செயற்திறனோடு நேரடியாக நடைமுறைப்படுத்துமாறும் அரச தலைவர் குறிப்பிட்டார். (5)

## கடல் வளத்தைப் பாதுகாக்க இலங்கையுடன் அமெ. கைகோர்ப்பு

கொழும்பு, செப். 29
கழிவு முகாமைத்துவத்தை மேம்படுத்துவதன் மூலம் கடல் வளத்தைப் பாதுகாக்க இலங்கை அரசுடன் அமெரிக்காகைகோர்த்துள்ளது.

பன்னாட்டு அபிவிருத்திக்கான அமெரிக்காவின் முகவர் நிறுவனம் காலி மாவட்டத்தில் கடற்பகுதிகளில் சேரும் கழிவுகளை மீள்சுழற்சிசெய்ய 3 உள்நாட்டு நிறுவனங்களுக்குச் சுமார் 97 மில்லியன் ரூபா நிதி உதவி வழங்கியுள்ளது.

3 நிறுவனங்களும் உள்ளூராட்சி சபையுடன் இணைந்து கடற்கரைப் பகுதிகளில் முறையற்ற விதத்தில் வீசப்படும் பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பொருள்கள் கடலில் சேர்வதைத் தடுப்பதற்கு உதவிசெய்யவுள்ளனர்.

அமெரிக்காவின் நிதி உதவியில் உள்ளூராட்சி சபை மற்றும் சிவில் சமூகத்துடன் இணைந்து முறையான கழிவு முகாமைத்துவம் தொடர்பில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. (5)

## ஆள்கடத்தலை தடுக்க ஆஸி.யுடன் ஒப்பந்தம்

கொழும்பு, செப். 29
நாட்டின் எல்லைப் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் பல்வேறு குற்றச்செயல்களைத் தடுப்பது தொடர்பில் ஆஸ்திரேலிய அரசுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திட இலங்கை அரசு தயாராகியுள்ளது. இவ்வாறு அமைச்சரவை இணைப்பேச்சாளரும் அமைச்சருமான கயந்த கருணாதிலக்க தெரிவித்தார்.

தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை வெளியிடும் செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை - ஆஸ்திரேலியாவுக்கிடையில் இடம்பெறும் மனித கடத்தல்கள் மற்றும் எல்லை மீறி முன்னெடுக்கப்படுகின்ற ஏனைய குற்றங்களைத் தடுப்பதற்காக ஏற்கனவே நடைமுறையில் இருக்கும் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் ஒப்பந்தமொன்று முன்மொழியப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்தில் இலங்கையின் பாதுகாப்பு அமைச்சு மற்றும் ஆஸ்திரேலிய அரசின் குடிவரவு மற்றும் எல்லைப் பாதுகாப்புத் திணைக்களத்துக்குமிடையில் கைச்சாத்திட யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சர் எனும் ரீதியில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் முன்வைக்கப்பட்ட இந்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது - என்றார். (5)

## பாட நூல்களுக்கும் வவுச்சர்

கொழும்பு, செப். 29
பாடசாலைப் பாடப் புத்தகங்களுக்காக வவுச்சர் முறையை அறிமுகம் செய்வது தொடர்பில் கல்வியமைச்சு அவதானம் செலுத்தியுள்ளது.

பாடப்புத்தகங்களை அச்சிடும்போது ஏற்படுகின்ற செலவைக் குறைக்கும் நோக்கில் இந்தத் திட்டத்தை அறிமுகப்படுத்தவுள்ளதாகக் கல்வியமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார். அதற்கான முதற்கட்ட நடவடிக்கைகள் தற்போது திட்டமிடப்பட்டுள்ளதாக அவர்மேலும் குறிப்பிட்டார். பாடசாலை சீருடைக்கும் வவுச்சர் நடைமுறை பின்பற்றப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (5)



## அரசியல்ல இதெல்லாம் சகஜமப்பா

கொழும்பு, செப். 29
முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவைக் கடுமையாக விமர்சித்து வரும் அமைச்சர் ராஜித சேனாரத்ன, மகிந்த ராஜபக்சவுடன் கைகுலுக்கி சிரித்துப் பேசிய நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

சீன மக்கள் குடியரசு உருவாக்கப்பட்ட 68 ஆண்டு நிறைவு நிகழ்வு சிறிமாவோ பண்டாரநாயக்க ஞாபகார்த்தக் கண்காட்சி மற்றும் மாநாட்டு நிலையத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. இதன்போதே, மகிந்த ராஜபக்சவும், ராஜித சேனாரத்னவும் நீண்ட நாள்களுக்குப் பின்னர் சந்தித்துக் கலந்துரையாடினர். மகிந்த ராஜபக்சவுக்கு எதிராக மைத்திரிபால சிறிசேன பொதுவேட்பாளராக நிறுத்தப்பட்ட போது, மகிந்த ராஜபக்ச அரசிலிருந்து அவருடன் வெளியேறிய முதலாவது நபராக ராஜித சேனாரத்ன இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (5)

American English

First time in Jaffna

வயது வேறுபாடின்றி ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும்

வகுப்புக்கள் :
வார நாட்கள், வார இறுதி மற்றும் இரவு நேரங்களில் நடைபெறும்.

மொத்தமாக 7 level கொண்ட இப் பாடநெறியானது மாணவர்களின் ஆங்கில அறிவை சரளமாக வளர்க்க கூடியது. வகுப்பறை பயிற்சி மற்றும் களப்பயிற்சிகள் உள்ளடங்கலாக நவீன கற்றல் சாதனங்களின் உதவியுடன் இலகுவாக மாணவர்கள் ஆங்கிலம் பயில்வது உறுதிசெய்யப்படுகின்றது.

Speaking
Listening
Reading
Writing
Skills 4



ஆங்கிலத்தில் ஆரம்ப அறிவு இல்லை என்றால் level 1 இனை தெரிவு செய்யுங்கள்.

BRC யில் நடாத்தப்படுகின்ற English Placement test இல் தோற்றி உங்கள் ஆங்கில அடைவு மட்டத்தை அறிந்து உங்களுக்குரிய கற்கை நெறியை தொடருங்கள்.

கொழும்பிலிருந்து வருகைதரும் ஆசிரியர் குழாமின் வழிகாட்டலில் தனிப்பட்ட கவனிப்பு. விரும்பிய கற்றல் நேரம் என மேலும் அதிகமான சலுகைகளுடன்.

Course Duration : Each stage - 1 - 1 1/2 month
Course Fees : Each stage Rs. 2900/=
Registration Rs. 1000/= (one time only)

076 584 22 22

சான்றிதழ் :- ஒவ்வொரு level இனையும் நிறைவு செய்பவர்களுக்கு தனித்தனி சான்றிதழ் வழங்கப்படும்.
(முழுமையாக நிறைவு செய்பவர்களுக்கு Diploma சான்றிதழ் வழங்கப்படும்.

BRC
BRITISH ROYAL COLLEGE
267, Power House Road, Jaffna.
T-021 221 4191
E-mail: collegebritishroyal@gmail.com
Web: www.britishroyalcollege.com


Facebook : UTHAYAN
Twitter : UTHAYANPR



## மனிதர்களைக் கொன்று உடலைச் சமைத்துண்ட தம்பதி ரஷ்யாவில் கைது

மொஸ்கோ, செப். 29
ரஷ்யாவில் சுமார் 30 பேரைக் கொன்று அவர்களது மாமிசத்தைச் சாப்பிட்டனர் என்ற குற்றச்சாட்டில் தம்பதியொன்றை பொலிஸார் கைது செய்தனர்.
ரஷ்யாவின் தென்மேற்குப் பகுதியில் உள்ள கிரஸ்னோதார் நகரில் சுமார் 7 லட்சத்து 50 ஆயிரம் மக்கள் வசிக்கின்றனர். இந்த நகரைச் சேர்ந்த சுமார் 40 பேர் மர்மமான முறையில் காணாமல் போயிருந்தனர். இதுகுறித்து பொலிஸார் வழக்குப் பதிவுசெய்து விசாரித்து வருகின்றனர்.
இந்த நிலையில், சாலையை சீரமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்கள், அங்கு கேட்பாரற்று கிடந்த ஒரு அலைபேசியை பொலிஸில் ஒப்படைத்துள்ளனர். அந்த அலைபேசியை ஆராய்ந்ததில், ஒருவர் மனித மாமிசத்தை சாப்பிடுவது போன்ற ஒளிப்படங்கள் இருந்தது தெரியவந்தது. இதையடுத்து முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் நடாலியா என்ற பெண்ணும் அவரது கணவரும் கைது செய்யப்பட்டனர்.
அவர்களிடம் மேற்கொண்ட விசாரணைகளில் அவர்கள் மனித மாமிசத்தை உண்ணும் பழக்கம் உடையவர்கள் என்பதும், இதுவரை சுமார் 30 பேரைக் கொன்று அவர்களின் உடல்களை அவ்வாறு உண்டுள்ளனர் என்பதும் தெரியவந்தது. (ம)

## ட்ரம்ப்பின் குற்றச்சாட்டை மறுத்தார் மார்க்



நியூயோர்க், செப். 29
முகநூல் வலைத்தளம் தனக்கு எதிராகச் செயற்படுகிறது என்று அமெரிக்க அதிபர் ட்ரம்ப், குற்றஞ்சாட்டியிருந்த நிலையில் இந்தக் குற்றச்சாட்டை மறுத்துள்ளார் முகநூலின் நிறுவுனரும், நிர்வாக இயக்குனருமான மார்க்.
ட்ரம்பின் பயணத்தடை திட்டங்களுக்கு மார்க் தனது எதிர்ப்பை வெளிப்படையாகவே தெரிவித்து இருந்தார். இதனால் முகநூல் இணையத் தளம் தனக்கு எதிராகப் பரப்புரை செய்கிறது என்று ட்ரம்ப் குற்றச்சாட்டை முன்வைத்தார். இதையடுத்து ட்ரம்பின் குற்றச்சாட்டை மறுத்துள்ளார் மார்க்.
"முகநூல் நிறுவனம் அனைத்து மக்களுக்குமான ஒரு சமூகத்தை கட்டியெழுப்பும் பணியில் தொடர்ந்து ஈடுபடும். தனி மனிதர்கள் எமது இலக்கு அல்லர்" என மார்க் மேலும் தெரிவித்தார். (ம)

அமெரிக்கப் பாதுகாப்புச் செயலாளர்

# ஜிம் மேட்டிஸை இலக்குவைத்து ஆப்கானிஸ்தானில் தாக்குதல்கள்



காபூல், செப். 29
ஆப்கானிஸ்தானில் அமெரிக்க பாதுகாப்புத்துறைச் செயலாளர் ஜிம் மேட்டிஸை இலக்குவைத்து ரொக்கட் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. இந்தத் தாக்குதல்களில் இருந்து மேட்டிஸ் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.
இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் செய்திருந்த அமெரிக்க பாதுகாப்புத்துறைச் செயலாளர் மேட்டிஸ், நேற்றுமுன்தினம் ஆப்கானிஸ்தானுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டார். அவர் காபூல் வானூர்தி
நிலையத்தை சென்றடைந்
போது ரொக்கட் தாக்குதல்க
நடத்தப்பட்டன. இந்தத் தாக்
தல்களில் அமெரிக்காவி
இரண்டு போர் வானூர்திகளு
ஆப்கானிஸ்தானின் வானூர்
ஒன்றும் சேதமடைந்தன.
பெண்ணொருவர் உயிரி
தார். சுமார் 10 பேர் காயம
எதிர்பாராத இந்தத் தாக்குதல்
டிஸின் பாதுகாப்பு பலமடங்
அவர் பாதுகாப்பாக வழியனுப்
தாக்குதல்கள் தம்மாலேயே ந
தலிபான் அமைப்பு தெரிவித்
இந்த அமைப்பு ஆப்கானிஸ்
ராகப் பல தசாப்தமாகப் போர

## 92 வீதமான குர்துக்கள் தனிநாட்டுக்கு ஆதரவு



பக்தாத், செப். 29
குர்திஸ்தான் சுதந்திர நாடு கோரி நடத்தப்பட்ட பொது வாக்கெடுப்பில் 92 சதவீத மக்கள் ஆதரவாக வாக்களித்துள்ளனர் என குர்திஷ் அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.
ஈராக்கின் வடபகுதியில் குர்து இன மக்கள் பெரும்பான்மையாக வாழும் குர்திஸ்தான் பகுதி ஈராக் ஆட்சியின் கீழ் தன்னாட்சி அதிகாரத்துடன் செயல்படுகிறது. ஈராக்கின் எண்ணெய் வளம் மிக்க இந்தப் பகுதியை குர்திஸ்தான் என்ற சுதந்திர நாடாக அறிவிக்கும்படி குர்து மக்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர்.
இதற்காக போராட்டங்களிலும் ஈடுபட்டனர். இந்த நிலையில், குர்திஸ்தான் பிராந்தியத்தில் சுதந்திர நாடு கோரி கடந்த திங்கட்கிழமை பொது வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.
இதில் சுதந்திரத்திற்கு ஆதரவாக பெருவாரியான மக்கள் வாக்களித்திருக்கலாம் எனக் கூறப்பட்டது. ஈராக் அரசின் கடும் எதிர்ப்பையும் மீறி நடத்தப்பட்ட இந்த வாக்கெடுப்பின் முடிவுகள் நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டுள்ளன.
92 சதவீத மக்கள் தனி நாட்டிற்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர் என அந்த வாக்கெடுப்பை நடத்திய குர்திஷ் அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.
இந்த வாக்கெடுப்பின் முடிவுகள், தனி நாடு தொடர்பான பேச்சைத் தொடங்குவதற்கு அழுத்தம் கொடுக்கும் என அந்த அமைப்பு மேலும் குறிப்பிட்டுள்ளது. (ம)

தாய்லாந்

## ஜிங்
## ஐந்

பாங்கொக், செ
தாய்லாந்து
தலைமை அ
வாட்டுக்குகிரா
அரிசி கொள்
யம் அளித்தத
ஐந்து ஆண்டு
வழங்கப்பட்டு
அந்த நாட்டு
அமெரிக்க டெ
டுத்திய அரிசி
தவறாக கை
மீதான குற்ற
தாய்லாந்து உ
துள்ளது. கட
இராணுவப்
வாரங்கள் மு
இருந்து அகர

## இஸ்
## அதி

டெல் அவி
இஸ்ரேலி
யில் பல
துப்பாக்கி
பொலிஸா
இதையடு
இஸ்ரேல்
வரம் வெ
என்ற அ
கட்டப் பா
அண்மை





மியன்மாரில் ரொஹிங்யர்களின் வாழ்விடங்கள் எரியூட்டப்பட்டுள்ள படங்களை பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ் வெளியிட்டுள்ளது. ரொஹிங்யர்களின் வீடுகள் எரியூட்டப்படவில்லை என்று மியன்மார் அரசு மறுத்துவரும் நிலையில் இந்தப் படங்கள் வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## மியன்மா

நைபிட்டோ, செ
மியான்மரி
மாவட்டத்தில்
28 இந்துக்கள
கண்டெடுக்க
இவர்களில் 2
கள். 8 பேர் கு
மியன்மாரின்
துக்கு எதிராக

# த்து
# கள



சென்றடைந்த
தாக்குதல்கள்
இந்தத் தாக்கு
மெரிக்காவின்
வானூர்திகளும்,
ரின் வானூர்தி
டைந்தன.
வர் உயிரிழந்
பேர் காயமடைந்தனர். சற்றும்
த் தாக்குதல்களை அடுத்து மேட்
ப்பு பலமடங்கு உயர்த்தப்பட்டு
க வழியனுப்பி வைக்கப்பட்டார்.
மாலேயே நடத்தப்பட்டன என்று
ப்பு தெரிவித்துள்ளது.
ஆப்கானிஸ்தான் அரசுக்கு எதி
மாகப் போராடி வருகிறது. ஆப்

கானிஸ்தான் அரசுக்கு ஆதரவாக அமெரிக்கா கைகொடுத்துள்ளது. ட்ரம்ப் அதிபராகப் பதவியேற்ற பின்னர் ஆப்கானிஸ்தானில் நிலைகொண்டுள்ள அமெரிக்கச் சிப்பாய்களின் எண்ணிக்கையை பல மடங்காக உயர்த்தியுள்ளார். இதற்குப் பதிலடி கொடுப்பதற்காகவே இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன என்று தலிபான் அமைப்பு மேலும் தெரிவித்தது. (ட)

# நவாஸ் ஷெரிப்பின் மனைவி மீண்டும் மருத்துவமனையில்

லண்டன், செப். 29

புற்றுநோய்க்காக லண்டன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுத் திரும்பிய பாகிஸ்தான் முன்னாள் தலைமை அமைச்சர் நவாஸ்ஷெரீப்பின்மனைவியின் உடல்நிலை மோசமடைந்ததால் மீண்டும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.



நவாஸ்ஷெரீப்பின் மனைவி பேகம் குல்சூம், குருதிப் புற்றுநோயால் பாதிக்கப்பட்டார். இதற்கு சிகிச்சை பெறுவதற்காக கடந்த மாதம் அவர் பிரிட்டனுக்குச் சென்றார். லண்டனில் அவருக்கு மூன்று முறை அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டதோடு, சிறப்பு கண்காணிப்பில் வைக்கப்பட்டிருந்தார். மூன்றாவது அறுவை சிகிச்சைக்கு பின்னர் அவர் உடல்நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டு நன்றாகத் தேறியதை அடுத்து கடந்த 22ஆம் திகதி மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்பட்டார். எனினும் நேற்றுமுன்தினம் இரவு அவரது உடல்நிலை மோசமடைந்தது. எனவே, அவர் மீண்டும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். (ம)

# விவசாயிகள் போராட்டம் தொடர்கிறது

சென்னை, செப். 29

பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி இந்தியத் தலைநகர் டெல்லியில் போராடி வரும் தமிழக விவசாயிகள், 73ஆவது நாளாக நேற்றும் போராட்டத்தில் ஈடுபட்டனர். மோடி, விவசாயிகளுக்கு மேல் படுத்திருப்பது போன்று நாடகமிட்டு அவர்கள் தமது போராட்டத்தை முன்னெடுத்தனர். (ம)



## தாய்லாந்து முன்னாள் தலைமை அமைச்சர்

# ஜிங்லக் சின்னவாட்டுக்கு ஐந்து ஆண்டுகள் சிறை

ாங்கொக், செப். 29

தாய்லாந்து நாட்டின் முன்னாள் தலைமை அமைச்சர் ஜிங்லக் சின்னவாட்டுக்குகிராமப்புற விவசாயிகளுக்கு அரிசி கொள்முதல் விலையில் மானியம் அளித்தது தொடர்பான வழக்கில் ஐந்து ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

அந்த நாட்டு அரசுக்கு 8 பில்லியன் அமெரிக்க டொலர் வரை இழப்பு ஏற்படுத்திய அரிசி மானியத் திட்டத்தைத் தவறாக கையாண்டதற்காக, அவர் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டதாக தாய்லாந்து உச்சநீதிமன்றம் அறிவித்துள்ளது. கடந்த 2014ஆம் ஆண்டு இராணுவப் புரட்சி நடப்பதற்கு சில வாரங்கள் முன்பு அவர் ஆட்சியில் இருந்து அகற்றப்பட்டார். பிறகு அவருக்கு எதிராக நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் மூலம் முறையாகப் பதவிநீக்கம் செய்யப்பட்டு, அரசியலில் ஈடுபட 5 ஆண்டுகள் தடை விதிக்கப்பட்டது. எனினும் தாய்லாந்து மக்கள் மத்தியில் வேறுபட்ட கருத்துகள் நிலவுகின்றன. அவர் இன்னும், கிராமப்பகுதிகளிலும், ஏழை மக்கள் மத்தியிலும் பிரபலமானவராகவே இருக்கிறார் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)





# ஜப்பானின் நாடாளுமன்றம் நேற்றுக் கலைக்கப்பட்டது

டோக்கியோ, செப். 29

ஜப்பான் நாட்டு நாடாளுமன்றத்தைக் கலைத்து நேற்று உத்தரவிட்டார் அந்த நாட்டின் தலைமை அமைச்சர் சின்சோ அபே.

அமெரிக்காவை மிரட்டுவதற்காக ஜப்பான் நாட்டின் குவாம் தீவில் உள்ள கடற்படைத்தளத்தைகுறிவைத்து வடகொரியா ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தி வருகிறது. வடகொரியா மீது உலக நாடுகள் விதித்துள்ள பொருளாதார தடைகளுக்கு ஜப்பான் தொடர்ந்து ஆதரவு தெரிவித்து வருகிறது. வடகொரியாவுக்கு எதிரான இராணுவ நகர்வுகளை ஜப்பான் வெளிப்படையாகவே ஆரம்பித்துள்ளது. ஜப்பானின் இந்த நகர்வு தொடர்பில் நடத்தப்பட்ட மாதிரி வாக்கெடுப்பில் சின்சோ அபேக்கு ஆதரவாக 44 சதவீதமானவர்கள் வாக்களித்தனர். வெறும் 8 சதவீதமானவர்கள் மட்டுமே அபேக்கு எதிராக வாக்களித்தனர். இவ்வாறு தனக்கு பெரும் ஆதரவு இருக்கின்ற போதே நாடாளுமன்றத் தேர்தலை நடத்தி விடத் திட்டமிட்டிருந்தார் அபே.

நாடாளுமன்றம் விரைவில் கலைக்கப்படும் என்று முன்னதாக அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்றுக் கலைக்கப்பட்டுள்ளது. அடுத்த மாதம் 22ஆம் திகதி நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ம)

# இஸ்ரேலின் மேற்குக் கரையில் அதி உச்சக்கட்டப் பாதுகாப்பு

டெல் அவிவ், செப். 29

இஸ்ரேலின் மேற்குக் கரைப் பகுதியில் பலஸ்தீனர் ஒருவர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் இஸ்ரேலியப் பொலிஸார் மூவர் உயிரிழந்தனர். இதையடுத்து அங்கு பலஸ்தீனர்கள் இஸ்ரேலியர்கள் இடையே கலவரம் வெடிக்கும் சாத்தியம் உள்ளது என்ற அபாயத்தால் அங்கு உச்சக்கட்டப் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. அண்மையிலும் இவ்வாறான ஒரு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இரண்டு பொலிஸார் உயிரிழந்தனர்.

இதையடுத்து அங்கு பலஸ்தீனர்களுக்கும், இஸ்ரேலியர்களுக்கும் இடையில் பெரும் கலவரங்கள் வெடித்தன. இவ்வாறான ஒரு சம்பவம் மீண்டும் இடம்பெறக்கூடாது என்றதன் அடிப்படையிலேயே பாதுகாப்புக் கெடுபிடிகள் அதிகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)




# மியன்மாரில் கொல்லப்பட்ட 28 இந்துக்களின் உடல்கள் மீட்பு

நெபிட்டோ, செப். 29

மியான்மரில் ரக்கைன் மாவட்டத்தில்கொல்லப்பட்ட 28 இந்துக்களின் உடல்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அவர்களில் 20 Nபுர் பெண்கள். 8 பேர் குழந்தைகள். மியன்மாரின் இராணுவத்துக்கு எதிராக கடந்த மாதம் 25ஆம் திகதி நடத்தப்பட்ட தாக்கதலில் 10 சிப்பாய்கள் கொல்லப்பட்டனர். இதன் பின்னர் ரொஹிங்யர்களுக்கு எதிராக இனச் சுத்திகரிப்பை பலமடங்காக அதிகரித்துள்ளது மியன்மார். இந்தக் கலவரத்தில் சுமார் 100 இந்துக்கள் காணாமல் போயுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர்களில் 28 பேரில் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. இந்த 28 பேரும் ரொஹிங்ய ஆயுதக் குழுக்களால் கொல்லப்பட்டிருக்கலாம் என்று மியன்மார் அரசு அறிவித்துள்ளது.



உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# வித்தியா கொலையும் சமூகத்தின் கடமையும்

பள்ளி மாணவி வித்தியா கொலை வழக்கு விசாரணைகள் முடிவுக்கு வந்திருக்கின்றன. சந்தேகநபர்கள் 9 பேரில் 7 பேர் குற்றவாளிகள் என்று மூன்று நீதிபதிகள் தீர்ப்பாயம் அறிவித்துள்ளது. அதிகபட்சத்தண்டனையாக அவர்களை இறக்கும் வரைதூக்கிலிடுமாறும், 30 ஆண்டுகளுக்கானகடூழியச்சிறைத் தண்டனையும் வழங்கப்பட்டுள்ளது. குற்றவாளிகள் ஒவ்வொருவரும் பாதிக்கப்பட்ட சிறுமியின் குடும்பத்துக்குத்தலா 10 லட்சம் ரூபா இழப்பீடு வழங்கவேண்டும் என்றும் தீர்ப்பாயம் உத்தரவிட்டுள்ளது.

கொலை இடம்பெற்று 29 மாதங்கள்கடந்துவிட்ட பின்னர்நீதி நிலைநாட்டப்பட்டிருப்பது குறித்து பரவலான மகிழ்ச்சி வெளிப்பாடு தெரிகிறது. வெடி கொளுத்திப் பொங்கல் பொங்கிக்கூடச் சிலர் மகிழ்ச்சியை வெளிப்படுத்திக் கொண்டனர்.

ஏனெனில்வித்தியாகொலைஒட்டுமொத்த இலங்கையையுமே உலுக்கிப் போட்ட ஒரு பயங்கரம். ஆனால், அதுவே வடக்கில் நடந்த இதுபோன்ற ஒரேயொரு சம்பவமோ இதற்கு முன்னர் அறிந்தே இருக்க முடியாத கொடூரமோ அல்ல. போர்க் காலங்களிலும்இதுபோன்றபலசம்பவங்கள்இடம்பெற்றிருக்கின்றன. போர் முடிந்த பின்னரும் பல சம்பவங்கள் இடம்பெற்றிருக்கின்றன.

கட்டுப்படுத்தமுடியாது பெருகிவந்த இத்தகைய குற்றங்களின் துன்பத்தைத்தாங்கமுடியாதவெடிப்புத்தான்வித்தியாகொலையுடன் அதிர்வலையை ஏற்படுத்தியது. தன்னெழுச்சியான போராட்டங்கள்முகிழ்த்தன. சரியானதலைமைத்துவம் இன்றி அது பின்னர் வன்முறையாக மாறியது. அதனைக்காரணமாகக் காட்டியே அத்தகையதன்னெழுச்சிப்போராட்டங்கள்அடக்கி ஒடுக்கப்பட்டுவிட்டன.

இப்போது வித்தியாகொலைச்சம்பவம் தொடர்பில் நீதி தனது கடமையை முடித்துவிட்டது. பெரும் எதிர்பார்ப்புக்கும் தேடலுக்கும் உரியதாக இருந்து வந்த இந்த விவகாரம் 7 பேருக்கு விதிக்கப்பட்ட சாவுத் தண்டனையுடன் ஒரு முடிவுக்கு வந்திருக்கிறது. இந்தத் தீர்ப்பை எதிர்த்து மேன்முறையீடு செய்யப்போகிறார்கள் என்று குற்றவாளிகளின் சட்டத்தரணிகள் அறிவித்திருக்கிறார்கள். என்றாலும், இந்த விடயத்தில் நீதி தனது பணியைச் செவ்வனே நிறைவேற்றிவிட்டது.

ஆனால், இந்தச்சம்பவம்தொடர்பில்சமூகம்தனதுகடமையைச் செவ்வனே ஆற்றியிருக்கிறதா? என்கிற பெரும் கேள்வி இருக்கிறது. வித்தியாவின் கொலை அதிர்வு எழுப்பிய சத்தத்தில் ஓங்கி ஒலித்த பெண்களின் பாதுகாப்பு, அவர்களுக்கு எதிரான வன்முறை குறித்த விடயங்கள் கொஞ்சநாள்களிலேயே அமுங்கிப் போய்விட்டன.

வித்தியாவின் கொலைக்குக் காரணமான குற்றவாளிகளைத் தூக்கிலிடச்சொன்னதும்இத்தகையகுற்றங்கள்குறைந்துவிடும், பெண்களும்சிறுமிகளும்பாதுகாப்பாகிவிடுவார்கள்என்றால், அது மாணவி கிரிசாந்தி வழக்கில் குற்றவாளிகளுக்கு, அதிலும் இராணுவத்தினரான குற்றவாளிகளுக்குச் சாவுத் தண்டனை விதிக்கப்பட்ட பின்னரே நிகழ்ந்திருக்கவேண்டும். வித்தியாவின் கொலை நடந்தே இருக்கக்கூடாது.

எனவே தண்டனைகள் மட்டுமே குற்றங்களைக் குறைத்துவிட மாட்டா. பெண்கள் தொடர்பான அணுகுமுறையே இந்தச்சமூகத்தில்நிறையமாறவேண்டியிருக்கிறது. வித்தியாகொலைக்குப் பின்னரும்கூட அத்தகையமாற்றங்களைநோக்கி இந்தச்சமூகம் முன்னேறியதற்கான ஆதாரங்கள் ஏதுமில்லை.

குடும்பத்தில் ஆண், பெண் குழந்தைகளை வளர்ப்பதில் காட்டப்படும் வித்தியாசத்தில் இருந்து, பல்வேறு மட்டங்களிலும்சிறுமிகளும்பெண்களும்நடத்தப்படும்விதம்வரைக்கும் ஏற்றத்தாழ்வுகளைஇயல்பாக்கிவிடும்பொறிமுறையைத்தான் நாம் இன்னமும் கொண்டிருக்கிறோம்.

ஆண்களுக்கு நிகராகச் சாதனை படைத்த பெண் விடுதலைப் போராளிகளைக் கொண்டதாகக் கூறிக்கொண்டாலும்கூட போருக்குப்பின்னர்அவர்களையும்அடக்கி, ஒடுக்கிமூலையில் முடங்க வைக்கக்கூடிய பலம் வாய்ந்த அந்தச் சமூகப் பொறிமுறையை மாற்றியமைக்காத வரையில் வித்தியாக்களைப் பாதுகாப்பது இந்தச் சமூகத்தில் சாத்தியமானது அல்ல.

**வித்தியா கொலையில் நீதி தனது பணியை நிறைவு செய்துவிட்டது. சமூகம் எப்போது தனக்கான பணியை – கடமையைத் தொடக்கப்போகிறது? இனிமேலும் வித்தியாக்கள் உருவாக்கப்படாமல் இருப்பதற்கான ஒரே வழி அதுதான்.**

# 2020 வரை நீடிக்குமா கூட்டு அரசு?



எம்.ஐ.முபாறக்

**2015** அரச தலைவர் தேர்தலில் மகிந்தவின் அரசு கவிழ்க்கப்பட்டு மைத்திரி- ரணில் தலைமையிலான கூட்டு அரசு உருவானபோது. இந்த நாட்டு மக்கள் மத்தியில் ஒரு புதுவித உற்சாகமும் நம்பிக்கையும் பிறந்தன.

இத்தோடு ஊழல், மோசடிகள் ஒழிந்து விடும்; வாழ்க்கைச் செலவினம் குறைந்துவிடும்; பொருளாதார ரீதியில் நாடு அபிவிருத்தி அடையப் போகிறது என்றெல்லாம் மக்கள் கனவு காணத் தொடங்கினர். போர் முடிவுக்கு வந்த வேளையில் கண்ட கனவு போன்றதே அதுவும்.

### வீழ்ச்சி காண ஆரம்பித்துள்ள ஐ.தே.கட்சியின் மதிப்பு

ஐக்கியதேசியக்கட்சிஆட்சிக்கு வந்தாலே மக்களின் கைகளில் பணப்புழக்கம் அதிகரித்துவிடும்; திருட்டுக்கள் குறைந்துவிடும் என்ற நம்பிக்கை காலாதிகாலமாக பொதுமக்கள் மத்தியில் இருந்து வருகின்றது. ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவின் கை சுத்தமானது. ஏனைய அரசியல்வாதிகளைப்போல் திருட்டில் ஈடுபடாதவர். நாட்டை மேற்கு நாடுகள்போல் அபிவிருத்தி செய்யக்கூடியவர்.

ஏனைய தலைவர்களைவிட பன்னாட்டுத் தொடர்புகளை அதிகம்கொண்டவர் என்றெல்லாம் ரணில் பற்றிப் பதிவுகள் உள்ளன. அந்த அடிப்படையில்தான் அவர் 'மிஸ்டர் கிளீன்' என்று அழைக்கப்படுகின்றார். இவ்வாறான பதிவுகள் ஏற்படுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் கடந்தகால வரலாறுகள்தான் காரணம். ஆனால், அந்த நிலை இப்போது மாறிவிட்டது என்றும், மகிந்தவின் அரசுடன் ஒப்பிடுகையில், ஐக்கிய தேசிய கட்சி அரசு எந்தவகையிலும் வேறுபட்டதல்ல என்றும் மக்கள் நினைக்கும் அளவுக்கு இப்போது நிலைமை மாறியுள்ளது என்றே கொள்ள வேண்டியுள்ளது. ஆட்சியைப்பொறுப்பேற்று ஒரு மாதத்திலேயே இடம்பெற்ற மத்திய வங்கி பிணைமுறி ஊழலே இதற்கு முக்கிய காரணமாக அமைந்தது. ஐக்கிய தேசியக் கட்சிமீது மக்கள் வைத்திருந்த நல்லெண்ணத்தை அந்த ஊழல் விவகாரம் சிதைக்கத் தொடங்கியது. அதனோடுஇணைந்ததாக மேலும் பல ஊழல்கள் குறித்த விவரங்கள் ஒன்றன்பின் ஒன்றாக வெளிவரத்தொடங்கின. குறிப்பாக, முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவால் மேற்கொள்ளப்பட்டபல ஊழல்கள் அம்பலப்படுத்தப்பட்டன. வாகன இறக்குமதியின் போது 1000 கோடி ரூபா வரி விலக்களிக்கப்பட்ட சம்பவம், அதேபோன்று கார்கள் இறக்குமதியில் 650 கோடி ரூபா வரி விலக்கு, ரவியின் மனைவி மற்றும் மகளது பெயர்களில் உள்ள நிறுவனங்கள் புரிந்த ஊழல்கள் மற்றும் 'பெர்பேச்சுவல்' நிறுவன உரிமையாளர் அர்ஜுன அலோசியஸிடம் லஞ்சமாக வீடு வாடகைக்குப் பெற்றமை போன்ற ரவி கருணாநாயக்கவுடன் தொடர்புபட்ட பல ஊழல்கள் அம்பலப்படுத்தப்பட்டன.

> திரும்பும் பக்கமெல்லாம் அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் மற்றும் வேலை நிறுத்தப் போராட்டங்கள். இவை மக்களை மேலும் அசௌகரியகத்துக்குத் தள்ளியுள்ளன. இந்த அரசை உருவாக்குவதற்கு வாக்களித்த மக்களில் அதிகமானவர்கள் இப்போது இந்த அரசுக்கு எதிரான மனோநிலையிலேயே இருக்கின்றனர்.

### கூட்டு அரசின் ஊழல்களை அம்பலப்படுத்தும் மகிந்த தரப்பு

மகிந்த அணியினர் 'டொப் 10' என்ற பெயரில் இந்த ஊழல்களை அம்பலப்படுத்தத் தொடங்கினர். மத்திய வங்கி ஊழலைத் தவிர்த்து இரண்டு வருடங்களுக்குள் இடம்பெற்ற ஏனைய ஊழல்களால் 13 ஆயிரம் கோடி ரூபா இந்த நாட்டுக்கு நட்டம் ஏற்பட்டுள்ளது என்று மகிந்த தரப்பினர் கூறுகின்றனர். மத்திய வங்கி ஊழலால் ஒரு லட்சம் கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது என்று அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபயவர்தன தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் அர்ஜுன அலோசியஸிடம் ரவி கருணாநாயக்க வீடுவாடகைக்குப்பெற்ற குற்றச்சாட்டின் கீழ் மகிந்த அணியினர் ரவிக்கு எதிரான நம்பிக்கையில்லாப்பிரேரணையைக் கொண்டு வந்ததும், அவர் தமது அமைச்சுப் பதவியைத்தாமாக முன்வந்து துறந்தார். இந்த விவகாரம் ஐக்கிய தேசியக் கட்சிக்குப் பலத்த அவமானத்தை ஏற்படுத்தி விட்டிருந்தது. கட்சிக்கு இருந்த நல்ல பெயர் அற்றுப் போனது. ஐக்கிய தேசியக் கட்சியும் ஊழல்வாதிகள் உள்ள கட்சி

தான் என்று மக்கள் கணக்குப்போடும் நிலை தோன்றியது. அது கட்சிக்குப் பின்னடைவைக் கொடுத்துள்ளது.

**கூட்டு அரசின் மீது அதன் ஆதரவாளர்களே அதிருப்தி அடையும் நிலை**

ஊழல், மோசடிகள் தொடர்பில் மக்கள் அதிருப்தி அடைந்தமை போதாதென்று, போதுமான அபிவிருத்தியின்மை, முதலீடு இன்மை, விலைவாசி அதிகரிப்பு மற்றும் நாட்டின் சொத்துக்களை வெளிநாடுகளுக்கு விற்றல் போன்றவற்றால் மக்கள் இந்த அரசின்மீது மேலும் அதிருப்தியடையத் தொடங்கிவிட்டனர்.

திரும்பும் பக்கமெல்லாம் அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் மற்றும் வேலை நிறுத்தப் போராட்டங்கள். இவை மக்களை மேலும் அசௌகரியகத்துக்குத் தள்ளியுள்ளன. இந்த அரசை உருவாக்குவதற்கு வாக்களித்த மக்களில் அதிகமானவர்கள் இப்போது இந்த அரசுக்கு எதிரான மனோநிலையிலேயே இருக்கின்றனர்.

இந்த நிலை தொடர்ந்தால், கூட்டு அரசை நடத்திச் செல்கின்ற ஐக்கிய தேசிய கட்சிக்கும் சுதந்திரக் கட்சிக்கும் தேர்தல்களை எதிர்நோக்குவது சிரமமாகப் போய்விடும். மகிந்த தரப்பின் செல்வாக்கு அதிகரித்துவிடும். இரண்டு முதன்மைக் கட்சிகளும் கூட்டு அரசைத் தக்கவைப்பதன் மூலம்தான் மகிந்தவின் எழுச்சியைத் தடுக்க முடியும். கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் சுதந்திரக் கட்சிக்கும் மக்கள் மத்தியில் நல்லெண்ணம் நிலவியபோதிலும், அந்தக் கட்சிகள் எவையும் தனித்து ஆட்சி அமைப்பதற்கு மக்கள் ஆணை கிட்டியிருக்கவில்லை.

**தனித்தனியாக பயணிக்க முயன்றால் இரு தரப்புகளுக்கும் சிக்கல்**

கடந்த பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சிக்கு 106 ஆசனங்களும், சுதந்திரக் கட்சிக்கு 95 ஆசனங்களும் கிடைத்தன. ஆனால், இதே செல்வாக்கு மக்கள் மத்தியில் இப்போதும் உண்டு என்று சொல்ல முடியாது. இந்த இரு கட்சிகளின் செல்வாக்கும் சரிந்து மகிந்த அணியின் செல்வாக்கு உயர்ந்தே உள்ளது. மேற்குறிப்பிடப் பட்டுள்ள ஊழல், மோசடிகள்தான் இதற்குக் காரணம்.

இந்த நிலையில் தேர்தல் ஒன்றை எதிர்கொண்டாலோ அல்லது கூட்டு அரசை கவிழ்த்துவிட்டு தனித்தனியே பயணிக்க முற்பட்டாலோ இரண்டு கட்சிகளும் சிக்கலையே எதிர்நோக்கும். குறிப்பாக, மைத்திரி தரப்பின் நிலைதான் மிக மோசமாகிவிடும். மைத்திரி அணியைவிட மகிந்த அணியில்தான் உறுப்பினர்கள் அதிகம். அதுபோக மைத்திரி அணியில் உள்ளோரில் 50 வீதமானவர்கள் மகிந்தவின் விசுவாசிகளாவர். மகிந்தவை நாட்டின் தலைமை அமைச்சராக நியமிக்க வேண்டும் என்று மைத்திரிக்கு அழுத்தங்கொடுப்பவர்களும் அவர்கள்தான். அரசில் இருந்து விலகப் போகிறோம் எனக் கூறுபவர்களும் அவர்கள்தான். ஒப்பந்தத்தின்படி இந்த வருடம் டிசெம்பர் மாதம் கூட்டு அரசின் ஒப்பந்த காலம் முடிவடைகிறது. அவ்வாறு முடிவடைந்தால் ஐக்கிய தேசிய கட்சியே தனித்து ஆட்சி அமைக்கும். ஆட்சி அமைப்பதற்கு மகிந்த அணியே ஐக்கிய தேசியக் கட்சிக்கு உதவும்.





“

2025 வரை இந்தக் கூட்டு அரசு பதவியில் இருக்குமாக இருந்தால், மகிந்த அணி தலை தூக்குவது கஷ்டம்தான். ஐக்கிய தேசியக் கட்சியினதும் சுதந்திரக் கட்சியினதும், வாக்கு வங்கியைத் தாண்டிய ஒரு வாக்கு வங்கியை மகிந்தவால் ஒருபோதும் கட்டியெழுப்ப முடியாது.
சுதந்திரக் கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து ஆட்சி அமைத்தால், அந்தத் தேர்தலில் மகிந்த அணி தனித்துப் போட்டியிட்டால், முக்கிய எதிர்க்கட்சியாக வருவதற்கு அதற்கு வாய்ப்பு உண்டு.

அவ்விதம் இடம்பெற்றால், மைத்திரி தரப்பின் நிலைமைதான் மோசமாகிவிடும். எதிர்க்கட்சியில் அமர வேண்டியேற்படும். ஆனால், மகிந்தவுடன் இணைந்து செல்வதற்கு மைத்திரி இணங்கமாட்டார். மகிந்தவும் இணங்கமாட்டார். இதனால் மைத்திரி அணி தனியாகவும் மகிந்த அணி தனியாகவும் எதிர்க்கட்சி வரிசையில் அமரும். அப்படி நடந்தால் மகிந்தவை மைத்திரியால் பலவீனப்படுத்த முடியாமல் போகும். அரச தலைவர் பதவியை மாத்திரம் வைத்துக்கொண்டு மகிந்தவை வீழ்த்துவ து கடினம். அமைச்சுக்கள் அடங்கலான அரச அதிகாரம் கையில் இருந்தால்தான் மைத்திரி அணியால் எழுந்து நிற்க முடியும்.

**கூட்டு அரசின் தேவை சுதந்திரக் கட்சிக்கே மிக அவசியம்**

அதுபோக, மைத்திரி அணி எதிர்க்கட்சியில் அமர்ந்தால் அவரது அணியில் உள்ள மகிந்த விசுவாசிகள் மகிந்தவுடன் இணைந்துகொள்வர். அப்போது சுதந்திரக்கட்சியின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை மகிந்தவுக்குக் கிடைத்துவிடும்.

மூன்றில் ஒரு பங்கை வைத்துக்கொண்டு மகிந்தவை வீழ்த்துவது மைத்திரிக்குச் சாத்தியப்படாது. அப்படி மூன்றில் ஒரு பங்காக இருந்தாலும் அரச அதிகாரத்துடன் இருக்க வேண்டும். அப்போதுதான் மகிந்தவை வீழ்த்துவதைப் பற்றி யோசிக்கலாம். அதுவும் கூட்டு அரசாக இருக்க வேண்டும்.

ஆகவே, கூட்டு அரசின் தேவை, ஐக்கிய தேசிய கட்சியை விடவும் சுதந்திரக் கட்சிக்கே அதிகமாக உண்டு. இதன் காரணமாக 2020 வரை மாத்திரமல்ல அதற்கு அப்பாலும் தற்போதைய கூட்டு அரசைக்காப்பாற்றுவதற்கு மைத்திரி நடவடிக்கை எடுப்பார் என்று நம்பலாம்.

**கூட்டு அரசின் நிர்வாகம் தொடருமானால் மகிந்த அணி தலைதூக்க இயலாது**

2020இல் தனித்து ஆட்சி அமைத்தல் என்ற திட்டத்தோடு ஐக்கிய தேசியக் கட்சியும், சுதந்திர கட்சியும் இருக்கின்றபோதிலும், அப்போதைய தேர்தலில் கிடைக்கும் முடிவுகள் இந்தத் திட்டத்தில் மாற்றத்தை ஏற்படுத்தும்.

நாங்கள் 2025 வரையும் கூட்டு அரசைப் பாதுகாப்பதற்கு விரும்புகிறோம் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் கபீர் ஹாசிம் கூறியமை இதை மனதில் வைத்துக் கொண்டுதான்போலும். அவ்வாறு 2025 வரை இந்தக் கூட்டு அரசு இருக்குமாக இருந்தால் மகிந்த அணி தலை தூக்குவது கஷ்டம்தான். ஐக்கிய தேசியக் கட்சியினதும் சுதந்திரக்கட்சியினதும், வாக்குவங்கியைத்தாண்டிய ஒரு வாக்கு வங்கியை மகிந்தவால் ஒருபோதும் கட்டியெழுப்ப முடியாது.


சுதந்திரக் கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து ஆட்சி அமைத்தால், அந்தத் தேர்தலில் மகிந்த அணி தனித்துப் போட்டியிட்டால் முக்கிய எதிர்க்கட்சியாக வருவதற்கு அதற்கு வாய்ப்பு உண்டு.

**கூட்டு அரசைக் கவிழ்க்கும் தேவை மகிந்தவுக்கு அவசியமாகியுள்ளது**

இந்த உண்மையை உணர்ந்தமையால்தான் கூட்டு அரசில் இருந்து விலகி எதிர்க்கட்சி வரிசையில் அமருமாறு மைத்திரி அணியில் உள்ள மகிந்த விசுவாசிகள் மைத்திரிக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றனர்.

கூட்டு அரசைக் கலைத்து ஆட்சியை ஐக்கிய தேசிய கட்சியிடம் ஒப்படைத்தால் மைத்திரி அணி எதிர்க்கட்சியாக மாறிவிடும். அந்த எதிர்க்கட்சியில் உள்ள மகிந்தவின் விசுவாசிகள் மகிந்தவுடன் போய் இணைந்துகொள்வர். பலமான ஓர் எதிர்க்கட்சியாக இருந்து இனிவரும் தேர்தல்களில் போட்டியிட்டு ஆட்சியைப் பிடிக்க முடியும் என்று இவர்கள் கணக்குப் போடுகின்றனர். கூட்டு அரசு தொடர்ந்தால் இவர்களின் வெற்றி சாத்தியப்படாது என்று அவர்களுக்குத் தெரியும்.

கூட்டு அரசின் இருப்பு மைத்திரிக்கும் அதன் கவிழ்ப்பு மகிந்தவுக்கும் தேவைப்படுகின்றது. இதனால் 2020 வரை தேசிய அரசை தக்கவைப்பதற்கு மைத்திரி நடவடிக்கை எடுப்பார் என்று சொல்லலாம்.






**நாம் சமூகப் பொறுப்புடன் செயற்படுவது எப்போது?**

கடந்த சனிக்கிழமை உதயன் பத்திரிகையில் வெளிவந்த செய்தி ஒன்றை வாசித்து எமது அரச அதிகாரிகளின் அலட்சிப் போக்கை எண்ணி வேதனைப்பட்டேன்.

கடந்த பல நாள்களாக நுணாவில் மற்றும் அயல் ஊர்மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்திவந்த மலைப்பாம்பொன்று பொறுப்புள்ள இரு இளைஞர்களின் கண்களில் பட்டு பிடிக்கப்படுகிறது. பாம்பைக் கண்டு பயந்து ஓடாமல் – வேடிக்கை பார்க்காமல், சக நண்பர்களுடன் இணைந்து அதனைப் பிடித்துக் கட்டி வைத்தும் அதனைப் பொறுப்பேற்க எவரும் இல்லாத நிலையில் சரசாலை வடக்குப் பகுதியில் உள்ள பற்றைக்காட்டில் அவர்கள் அதனை அவிழ்த்துக் காட்டுக்குள் செல்லவிட்டுள்ளனர்.

உண்மையில் அந்த இளைஞர்களின் துணிச்சலும் சமூகப் பொறுப்பும் பாராட்டப்பட வேண்டியதே. அதே வேளை, அவர்கள் குறித்த விடயத்தை பொலிஸாருக்கு அறியத் தராதமை ஏன் என்ற கேள்வி எழுகிறது. பொலிஸாருக்கு அறிவித்திருந்தால், நிச்சயம் அந்தத் தகவல் வன இலாகாத் துறையினருக்கு தெரியப்படுத்தப்பட்டு, உரிய இடத்திற்கு அல்லது உயிரியல் பூங்காவுக்கேனும் அந்தப் பாம்பு அனுப்பப்பட்டிருக்கும்.

பாம்பு பிடிக்கப்பட்ட செய்தி இன்றைய நவீன தொடர்பாடல் வசதிகள் வாய்த்துள்ள நிலையில், அரச அதிகாரிகள், கிராம சேவையாளர் உட்பட அவ்வூர் கல்வி, நிர்வாகத்துறைகளில் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் காதுகளுக்குச் சென்று சேர்ந்திருக்கும். இருந்தும் 'நமக்கேன் இதுவெல்லாம்' என்ற அலட்சியப் போக்கில் சமூகத்தின் பொறுப்புள்ள தரப்பினர்கள் இது குறித்து அக்கறை செலுத்தவில்லை என்பது பல்வகை பாதிப்புக்களை ஏற்படுத்தவல்ல குறித்த பாம்பு உயிருடன் விடப்பட்டதன் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

தென்மராட்சி– சாவகச்சேரி, கச்சாய் பகுதியில் சில நாள்களுக்கு முன்னர் நீளமான முதலையொன்று பிடிக்கப்பட்டிருந்தது. இப்போது நுணாவிலில் மலைப்பாம்பு பிடிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் வடமராட்சியில் காட்டு யானையின் அட்டகாசத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். சங்கிலித் தொடராக இந்தச் சம்பவங்கள் நடந்தும், எமது வனத்துறை அதிகாரிகள், அரச திணைக்களங்களின் அதிகாரிகள் இந்த விடயங்களில் காட்டும் அலட்சியம் வேதனைக்குரியதல்லவா?

நா.துஷாந், வரணி

# உயர் தொழில்நுட்பத்துடன் கூடிய பொருளாதார அபிவிருத்தியே அரசின் இலக்கு

*மத்திய வங்கி ஆளுநர் இந்திரஜித் குமாரசாமி தெரிவிப்பு*



உயர் தொழிநுட்பம் மற்றும் டிஜிட்டல் மயமாக்கப்பட்ட பொருளாதாரத்துடன் கூடிய அபிவிருத்தியை உருவாக்குவதே அரசின் நோக்கம் என்ற கருத்தை மத்தியவங்கிஆளுநர் இந்திரஜித் குமாரசாமி வெளிப்படுத்தியுள்ளார்.

டி.எவ்.சி.சி வங்கி அண்மையில் முன்னெடுத்த 'வினைத்திறன் அமர்வு' நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு கருத்துரைக்கும் போதே அவர் இந்த விடயத்தைச் சுட்டிக்காட்டியுள்ளார். அரசு மேற்கொண்டுள்ள தேசத்திற்கான 'விசன் 2025' செயற்றிட்டம் குறித்து விரிவாக அவர் எடுத்துரைத்தார்.

இது குறித்து கருத்துரைத்த அவர்,

"தனிநபர் வருமானத்தை வருடந்தோறும் 5 ஆயிரம் அமெரிக்க டொலரினால் உயர்த்துதல். ஒரு மில்லியன் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குதல். நேரடித் தன்மை வாய்ந்த முதலீட்டினை வருடந்தோறும் 5 பில்லியன் அமெரிக்க டொலர்களினால் உயர்த்துதல். வெளிநாட்டு ஏற்றுமதியினை வருடந்தோறும் 5 ஆயிரம் அமெரிக்க டொலரினால் அதிகரித்தல் போன்றவற்றுக்கு வழிவகுக்கும் முழுமையான பொருளாதார மூலோபாயத் திட்டங்களை உருவாக்கும் முயற்சியில் அரசு ஈடுபட்டுள்ளது.


இந்து சமுத்திரத்தில் இலங்கையை மைய அரங்காக உருவாக்குவதன் மூலமே இந்த முதன்மை இலக்கினை அடைய முடியும். வெளிநாட்டு சந்தைகளை ஏற்றுமதிகள் ஊடாக அடைவதும் முக்கியத்துவம் வாய்ந்த செயற்பாடாகக் காணப்படுகிறது.

அதேவேளை புதிய வர்த்தகக் கோட்பாடுகள் மற்றும் தேசிய உற்பத்தி மூலோபாயங்கள் பரந்த கொள்கை மிகுந்த. எளிய வெளிப்படைத்தன்மை மிகுந்த. கணிக்கத்தக்க வர்த்தக நிலைத்திருப்பினை உருவாக்குவதற்கு உதவியளிக்கும். இந்தக் கொள்கை மாற்றங்கள் ஏற்றுமதி சார்ந்த நேரடித் தன்மை வாய்ந்த முதலீடுகளை ஈர்க்கும். அத்துடன் வர்த்தகப் போக்குவரத்தினை மேம்படுத்தல். நிறுவனங்களின் ஆற்றல்களை உலகளாவிய சந்தையில் போட்டியிடும் வகையில் ஊக்குவித்தல் போன்றவற்றினை முன்னெடுத்துச் செல்லவும் உதவும்" - என்றார்.

மேலும் அரசு முன்னெடுத்துள்ள தேசத்திற்கான 'விசன் 2025' செயற்றிட்டம் குறித்துக் கருத்துத். தெரிவித்த மத்திய வங்கியின் முன்னாள் துணை ஆளுநர் று. யு. விஜேவர்த்தன,

"அத்தியாவசியமான பொருளாதார மீள்திருத்தங்களை நாம் உருவாக்க வேண்டும். பொது மற்றும் தனியார் துறையினரின் பங்குடமையானது பொருளாதார வளர்ச்சியினை மேம்படுத்தும் ஊக்கியாக பயன்படுத்தப்படும். கல்வி மற்றும் சுகாதார சேவைகள் மீது முக்கியத்துவம் செலுத்தப்படும். பெருநகரத்திட்டமிடல் ஊடாக இயற்பியல் சார்ந்த உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல். பொருளாதாரத் தாழ்வாரங்கள். மேம்படுத்தப்பட்ட போக்குவரத்து வசதிகள் ஏற்படுத்தப்படும்.

கட்டமைத்தல்.செயற்படுத்தல்.பரிமாற்றல் மாதிரிகள் ஊடாக முழு நாடும் அபிவிருத்தியை நோக்கிப் பயணிக்கும். செயற்திறனை அதிகரித்தல் மற்றும் போக்குவரத்து வலையமைப்பினை விஸ்தரித்தல் போன்றசெயற்பாடுகளின்வழியேவிவசாயத்தினை மேம்படுத்துவது குறித்து கவனம் செலுத்தப்படும்" - என்றார். (ஓ)




# கொள்கை வட்டி வீதங்களில் மாற்றங்கள் எதுவுமில்லை

*சமனிலையை பேணுவதற்கு மத்திய வங்கி தீர்மானம்*

சந்தைக்கான வட்டி வீதங்களை தீர்மானித்துக்கொள்வதில் நேரடியான தாக்கங்களை செலுத்த கூடிய கொள்கை வட்டி விகிதங்களை மாற்றமின்றி தொடர்ந்தும் சமனிலைத்தன்மையோடு பேணிக்கொள்வதற்கு இலங்கை மத்திய வங்கியின் நிதிச்சபை தீர்மானித்துள்ளது.

நடைமுறையிலுள்ள நிதிக் கொள்கைகளில் நீடித்த உறுதித் தன்மை காணப்படும் தகவல்களும் தீர்மானமாக்கப்பட்டுள்ளது. குறிப்பாக இலங்கை மத்திய வங்கியில் நிலையான வைப்புகள் மற்றும் நிலையான கடன் வசதிகளுக்கான விகிதாசாரங்கள் முறையே 7.25 மற்றும் 8.75 என்ற நிலைபேறான மட்டங்களில் தொடர்ந்தும் மாற்றமின்றி நடைமுறைப்படுத்தப்படும் என மத்தியவங்கி தெரிவித்துள்ளது.

அதேவேளை யாப்பு ரீதியான கையிருப்புகளுக்கான விகிதாசாரம் என்பது 7.50 சதவிகிதமாக பேணப்படும் என மத்திய வங்கி அறிவித்துள்ளது. (ஓ)

# நகரும் சராசரி பணவீக்கம் அதிகரித்துள்ளது

## நடப்பாண்டின் ஓகஸ்ட் மாத காலப்பகுதியில் பதிவு

நடப்பு வருடத்தின் ஓகஸ்ட் மாத காலப்பகுதிக்கான நகரும் சராசரி பணவீக்கம் 6.5 வீதமாக அதிகரித்துள்ளது. அதேவேளை ஜூலை மாதத்துக்கான நகரும் சராசரி பணவீக்கப் பெறுமானம் 6.2 சதவீதமாக அமைந்துள்ளமை குறித்து நோக்கத்தக்கது. நுகர்வோர் விலைச்சுட்டெண் மற்றும் ஆண்டு ரீதியான பணிவீக்கம் என்பவற்றுக்கிடையேயான ஒப்பீட்டு ரீதியான அசைவாக இவை அமைந்துள்ளன. (ஓ)

# சிறந்த பொருளாதார முதலீட்டு வலயமாக இலங்கை கணிப்பீடு



ஆசிய பசுபிக் வலயத்தில் இலங்கையே சிறந்த பொருளாதார முதலீட்டு வலயமாகக் கணிக்கப்பட்டுள்ளது. இந்தத் தகவலை தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க வெளிப்படுத்தியுள்ளார்.

இது குறித்து மேலும் கருத்துரைத்துள்ள அவர், "சீனா, ஜப்பான் போன்ற முன்னணி நாடுகள் இலங்கையில் முதலீடு செய்வது குறித்து அதிக ஆர்வம் காட்டிவருகின்றன. இலங்கையில் பன்னாடுகளின் முதலீட்டுச் செயற்பாடுகளை ஊக்குவிப்பதற்கு அரசும் தனது பன்னாட்டுப் பொருளாதாரக் கொள்கைகளை மேம்படுத்தி வருகின்றது" - என்றார்.

அண்மையில் பீஜிங்கில் இடம்பெற்ற பொருளாதார மாநாட்டில் கலந்துகொண்ட அவர் உலக நாடுகளின் பிரதிநிதிகள் இலங்கையில் முதலீடு செய்வதில் ஆர்வம் காட்டிவருகின்ற தன்மைகள் குறித்து கருத்துரைக்கும் போதே மேற்படி விடயங்களைச் சுட்டிக் காட்டியுள்ளார். (ஓ)

# அங்கர் 'இலட்சியப் பயணம்' செயற்றிட்டம் ஆரம்பம்

எதிர்கால மாணவ சந்ததியின் கனவுகளை நனவாக்கி அவர்களது இலட்சியங்களை அடைவதற்கான வழிகாட்டலை வழங்கும் அங்கரின் 'இலட்சியப் பயணம்' செயற்றிட்டத்தின் முதற்கட்ட நிகழ்வு யாழ். மத்திய கல்லூரியில் கடந்த 23 ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டது.



மேன்மைகள் பெற வழிகாட்டும்

இந்தச்செயற்றிட்டம் வட மாகாணத்தில் 3 மாத காலப் பகுதி. கிழக்கு மாகாணத்தில் 3 மாத காலப்பகுதி என மொத்தமாக 6 மாதங்களுக்கு நடைபெறவுள்ளன.

பாடசாலைகளுடன் ஒன்றிணைந்து நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள இந்தச் செயற்றிட்டம் கல்வியின் முக்கியத்துவம், வெற்றிக்கான வழிகள் போன்ற முக்கியமான விடயங்களை துறைசார்ந்த விரிவுரையாளர்களின் உதவி கொண்டு மாணவர்களுக்கு எடுத்துக்கூறவுள்ளது. அத்தோடு கல்வித்திறனை அதிகரிக்கக்கூடிய தனித்துவமான பயிற்சிச் செயற்பாடுகளும் நடைபெறவுள்ளன.

மன வரைபு (மைன்ட் மேப்பிங்) போன்ற மாணவர்களின் மூளைக்கு வேலை தரும் செயற்பாடுகள் நடைபெறவுள்ளன. வரைகலை முறையினூடு கருத்துக்களையும் எண்ணங்களையும் வெளிப்படுத்தும் ஓர் முறையாக மன வரைபு காணப்படுகிறது. அதாவது தகவல்களை சிறப்பான முறையில் கட்டமைப்பதற்கும், பகுப்பாய்வு செய்வதற்கும், கிரகித்துக் கொள்வதற்கும், ஒன்றிணைப்பதற்கும், நினைவு கூர்வதற்கும் மூளையை சிறப்பான முறையில் பயிற்றுவிக்கும் ஓர் உன்னத செயற்பாடாக விளங்குகிறது. (ஓ)

CSE COLOMBO STOCK EXCHANGE


கொழும்பு பங்குப்பரிவர்த்தனை - 147-2/3, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் - 0212221455

28/9/2017
www.cse.lk

பங்குச்சந்தைத் தகவல்கள்

| சுட்டிகள் | | | இன்று | நேற்று |
|---|---|---|---|---|
| ASPI | ↑ | 14.07 | 6,433.54 | 6,419.47 |
| S&P SL20 | ↑ | 10.50 | 3,682.89 | 3,672.39 |
| வியாபாரப்புரள்வு | | | 801,015,170 | 738,265,790 |
| உள்நாடு:- கொள்வனவு | | | 285,092,256 | 588,380,610 |
| விற்பனை | | | 395,595,200 | 675,322,620 |
| வெளிநாடு:- கொள்வனவு | | | 515,922,944 | 149,885,184 |
| விற்பனை | | | 405,420,000 | 62,943,148 |

| கம்பனி-அதிகூடிய பங்குப்பரிமாற்றம் | குறியீடு | இறுதிவிலை | பங்குகள் | புரள்வு (Rs) |
|---|---|---|---|---|
| சிலோன் ஹோல் ஸ்ரோஸ் | CCS.N | 825 | 332,606 | 284,393,381 |
| ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் | JKH.N | 163 | 897,503 | 146,292,162 |
| கொமர்சியல் வங்கி | COMB.N | 138.5 | 299,156 | 41,431,283 |
| அக்ஸஸ் இஞ்சினியறிங் | AEL.N | 25.7 | 1,177,052 | 30,537,355 |
| டோக்கியோ சிமெண்ட் | TKYO.N | 70 | 422,631 | 29,579,205 |
| சம்பத் வங்கி | SAMP.N | 303.90 | 69,621 | 21,021,036 |
| ஹற்றன் நஷனல் வங்கி | CTBL.N | 5.4 | 3,755,288 | 19,790,996 |
| லங்கெம் டெவெலப்மென்ட்ஸ் | LDEV.N | 10.1 | 1,640,179 | 15,876,822 |
| ஹற்றன் நஷனல் வங்கி | HNB.N | 233.1 | 51,446 | 11,986,933 |
| ஈ-சேல்லிங் | ECL.N | 8 | 1,453,431 | 11,405,805 |




அறிவித்தல்கள் -

பங்குலாபம்

மெர்க்கன்டைல் முதலீடுகள் (MERC)- Rs. 7.00
பி.ஆர்எசி லங்கா பினான்ஸ் (NIFL)- Rs. 0.04

| சந்தைக் குறிகாட்டிகள். | | |
|---|---|---|
| கம்பனிகள் | ↑ | 295 |
| பரிமாற்றத்தில் | ↑ | 236 |
| விலை உழைப்பு | ↓ | 10.7 |
| புத்தகப்பெறுமதி | ↓ | 1.4 |
| பங்குலாப விளைவு | ↓ | 2.9 |

இரா. நிஷாந்தன்

# 'ஹயக்ரீவர்'

## வேதங்களைக் காத்தருளிய விஷ்ணு அவதார மகிமை



கல்வியில் மாணவர்கள் முன்னேற்றம் காண அவர்களுடைய முயற்சி முதன்மையான விடயமாகக் கொள்ளப்படுகின்ற போதும் மறுபுறம் இறை அருள் வேண்டும் என்பதும் முக்கியத்துவம் பெறுகிறது. அந்தவகையிலே கல்விச் செல்வத்தின் அதிபதியாக விளங்கும் சரஸ்வதி தேவிக்கு நாம் வழிபாடு இயற்றுகிறோம். சிறப்பாக நவராத்திரி காலப் பகுதியில் போற்றித் துதிக்கின்றோம். ஆனால் கல்விக்கடவுளாகத் திகழும் சரஸ்வதிதேவிக்கே ஞானம் போதித்த ஒருவர் இருக்கின்றார். அவர் 'ஹயக்ரீவர்' என்ற திவ்ய நாமம் கொண்டு சிறப்பிக்கப்படுகிறார். இவரைப் 'பரிமுகன்' எனவும் அழைப்பர். பகவான் விஸ்ணுவின் ஓர் அவதாரமாக விளங்குகிறார்.

**பரிமுகன் தோன்றிய வரலாறு**

பரிமுகன் தோன்றிய வரலாறு ஓர் புராணக் கதையுடன் தொடர்புடையதாக விளக்கிக் கூறப்படுகிறது. நான்கு வேதங்களின் துணை கொண்டே பிரம்ம தேவன் படைப்புத் தொழிலை ஆற்றி வருகின்றார். ஒரு முறை பிரம்மாவிடம் இருந்து வேதங்களை இரு அசுரர்கள் கவர்ந்து பாதாள உலகுக்குக் கொண்டு சென்று விடுகின்றனர். வேதங்கள் இன்றி பிரம்மாவால் படைப்புத் தொழிலைச் செய்ய முடியவில்லை. தன் குறையை, காத்தல் தொழில் புரியும் நாராயணனிடம் எடுத்துரைத்தார். நாராயணனும் வேதங்களை மீட்டுத் தருவதாக உறுதியளித்தார். குதிரை முகமும், மனித உருவமும் தாங்கிய வடிவில் பாதாள உலகம் சென்று அசுரர்களோடு போர் புரிந்தார்.

அவர்களைப் போரில் வென்று வேதங்களை மீட்டெடுத்தார். இவ்வாறு குதிரை முகமும் மனித உருவமும் கலந்த வடிவம் கொண்டு நாராயணன் தோன்றியமையால் அவர் 'ஹயக்ரீவர்' எனும் பெயர் பெற்றார். அதாவது குதிரை முகம், ஆயிரம் கோடி சூரியன்கள் தரும் ஒளியை மிஞ்சும் பிரகாசமுடைய பார்வை, சங்கு சக்கரம் தாங்கிய திருக்கரங்கள், திவ்ய தேகம் கொண்டு தோன்றினார். அசுரக் கரங்களின் பிடியில் கட்டுண்டு இருந்தமையால் வேதங்கள் புனிதத் தன்மையை இழந்திருந்தன. இதனால் அவ் வேதங்களை 'ஹயக்ரீவர்' தன் மூக்கினால் நுகர்ந்தார். வேதங்கள் புனிதம் அடைந்தன. அவற்றை பிரம்மாவிடம் ஒப்புவித்தார். படைத்தல் தொழிலைத் தொடர்ந்து செய்ய வழி வகை செய்தார்.

**திருப்பாசுரங்களில் அவதாரச் சிறப்பு**

இத்தகைய அவதாரச் சிறப்பினை ஆழ்வார்கள்; தம் திருப் பாசுரங்களில் குறிப்பிடும் போது,

**"வசையில் நான்மறை கெடுத்த**
**அம்மல ரயற்க்கு அருளி முன் பரிமுகமாய்**
**இசைகொள் வேத நூலென்றிவை**
**பயந்தவனே எனக்கருள் புரியே...!"**

எனவும்

**"முன் இவ் உலகம் ஏழும் இருள் மண்டியுண்ண**
**முனிவரோடும் தானவர்கள் திகைப்ப வந்து**
**பன்னு கலை நூல் வேதப் பொருளை எல்லாம்**
**பரி முகமாய் அருளிய எம் பரமன் காண்மின்.....!"**

எனவும் பாடுகின்றனர்.

**கலைத் தெய்வம்**

இவ்வாறு 'ஹயக்ரீவர்' வேதங்களை நுகர்ந்தமையால் அங்கு நிறைவு கொண்டிருந்த அனைத்து விடயங்களும், தத்துவங்களும் அவரிடம் குடி கொண்டன. இதன் காரணம் கொண்டு முதன் முதலில் ஞானத்தையும், கலை ஆதாரங்களையும் அறிந்து கொண்ட வராக இவர் திகழ்கிறார். சரஸ்வதி தேவிக்கு குருவாக இருந்து வேத ஞானம் மற்றும் சகல கலைகளையும் உவந்தளித்தவராக இவர் அறியப்படுகின்றார்.

'லலிதா சகஸ்ர நாமத்தை' இவ் உலகுக்கு அளித்த பெருமையும் இவரையே சாரும். அனுமன் சஞ்சீவி மலையை சுமந்து வரும் வழியில் ஹயக்ரீவரை வழிபட்டார் என்ற வரலாறுகளும் உண்டு. தன் மடியில் லக்சுமி தேவியை அமரச் செய்துள்ள திருவுருவத்தின் தனித்துவம் கொண்டு 'லக்சுமி ஹயக்ரீவர்' ஆகவும் வணங்கப்படுகின்றார்.

**வழிபாட்டுச் சிறப்பும் நூல்களும்**

இத்தகைய சிறப்புக்குரிய 'ஹயக்ரீவருக்கு' பாடசாலை மாணவர்கள் வழிபாடு இயற்றுவதன் மூலம் கல்வி ஞானத்தையும், கலை ஞானத்தையும் நிறைவாகப் பெற்றுக்கொள்ளலாம். இது மட்டுமன்றி கல்வியில் மந்தமான மாணவர்கள், பேச்சாற்றல் குறைந்தவர்கள் என எத்தகைய குறைகள் உடையவர்களும் 'ஹயக்ரீவருக்கு' வழிபாடு இயற்றித் தம் குறைகளில் இருந்து விடுபட முடியும். இந்தியாவில் ஹயக்ரீவருக்குரிய ஆலயங்கள் அமையப்பெற்றுள்ளன.

மகாபாரதம், உபநிடதம், ஹயக்ரீவ கல்பம், தேவி பாகவதம் என்பன 'ஹயக்ரீவர்' அவதாரச் சிறப்பினையும் பெருமையையும் எடுத்துக்கூறும் நூல்களாக விளங்கு கின்றன.

**ஹயக்ரீவ தியானம்**

ஹயக்ரீவ வழிபாட்டின் போது ஹயக்ரீவ தியான காயத்திரி மந்திரத்தைக் கூறி வழிபாடு இயற்றுவது சிறப்பு. ஹயக்ரீவ தியான காயத்திரி மந்திரம் பின் வருமாறு அமையும்.

**"ஓம் வாகீஸ்வராய வித்மஹே ஹயக்ரீவாய தீமஹி**
**தன்னோ ஹம்சப் பிரசோதயாத்"**


**ஹயக்ரீவ தியான துதி**

ஹயக்ரீவ தியான துதியைப் பாடுவதும் நன்மை தரும். அத் துதி பின்வருமாறு அமையும்.

**"ஞானனந்த மயம் தேவம் நிர்மலம் ஸ்படிகாக்ருதிம்**
**ஆதாரம் சர்வ வித்யானம் ஹயக்ரீவம் உபாஸ்மகே"**

**பொருளும் அருளும்**

ஞானத்தின் இருப்பிடமானவரும், ஆனந்த மயமானவரும், படிகம் போன்ற நிர்மலமான குணம் படைத்தவரும், எல்லாக் கலைகளுக்கும் ஆதாரமாக விளங்குபவருமான ஹயக்ரீவரை வழிபட்டு, வணங்குகின்றேன் என்பதாக ஹயக்ரீவ தியான துதியின் பொருள் தரல் அமைவு பெறும். ஆக, இத்தகைய அவதாரச் சிறப்பும் பெருமையும் உடைய ஹயக்ரீவரை வழிபட்டு, மாணவர்கள் மட்டுமன்றி நாம் அனைவரும் பக்தியோடும், நம்பிக்கையோடும் வழிபாடு இயற்றுவோம். ஞானத்தின் அருட்கடாட்சத்தைப் பெற்று நலம் பல கண்டு வாழ்வோமாக.



இந்து வெள்ளி

"ஹயக்ரீவர் மனித உருவமும் குதிரை முகமும் தாங்கிய வடிவில் பாதாள உலகம் சென்று அசுரர்களோடு போர் புரிந்தார். அவர்களைப் போரில் வென்று வேதங்களை மீட்டெடுத்தார். இவ்வாறு குதிரை முகமும் மனித உருவமும் கலந்த வடிவம் கொண்டு நாராயணன் தோன்றியமையால் அவர் 'ஹயக்ரீவர்' எனும் பெயர் பெற்றார். அதாவது குதிரை முகம், ஆயிரம் கோடி சூரியன்கள் தரும் ஒளியை மிஞ்சும் பிரகா சமுடைய பார்வை, சங்கு சக்கரம் தாங்கிய திருக்கரங்கள், திவ்ய தேகம் கொண்டு தோன்றினார்.

# பத்தி எழுத்து

## வடக்கு - கிழக்கு இணைப்பு வெறும் கனவு மட்டும்தானா ?

புதிய அரசமைப்பு உருவாக்கத்தின் முதல் படிநிலையான இடைக்கால அறிக்கை வெளிவந்துள்ளது. முன்னரே எதிர்வுகூறப்பட்டதைப்போன்று, வடக்கு - கிழக்கு மாகாணங்களின் இணைப்புக்கு அதில் பச்சைக்கொடி காண்பிக்கப்படவில்லை.

வடக்கு - கிழக்கு மாகாணங்களின் இணைப்பில்லாத இடைக்கால அறிக்கையை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி வரவேற்றுள்ளது. ஏற்றுக் கொண்டுள்ளது. இந்தக் குற்றச்சாட்டு பல தரப்புக்களாலும் முன்வைக்கப்படுகின்றது. ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் தலைவர் சுரேஸ் பிரேமசந்திரன், வடக்குமாகாணமுதலமைச்சர்சி.வி.விக்னேஸ்வரன் உள்ளிட்டவர்கள் அதில் முதன்மையானவர்கள். இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி மீது குற்றம் சுமத்தி சுட்டுவிரல் நீட்டும் தரப்புக்கள், வடக்கு கிழக்கு இணைப்புக்கு என்ன செய்யலாம் ? அதை எப்படி கொண்டு வரலாம் என்ற எந்த ஆலோசனைகளையும் முன்வைக்கவில்லை. வெறுமனே அரசியல் ஆதாயத்துக்காக குற்றம் சுமத்துகின்றார்கள். அவர்களிடம், வடக்கு - கிழக்கு இணைப்பு எப்படி முன்னெடுப்பது என்ற திட்டம் எதுவும் இல்லாமல் இருக்கலாம்.

வடக்கு -கிழக்கு இணைப்புக்கான முன்மொழிவை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, இடைக்கால அறிக்கையுடன் பின்னிணைப்பாகக் கொடுத்துள்ளது. அத்துடன் இடைக்கால அறிக்கையினுள்ளும் அதனை முன்வைத்துள்ளது.

இரு மாகாணங்களின் இணைப்புத் தொடர்பாக வடக்கு கிழக்கு இணைப்புத் தொடர்பில். இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி தவிர்ந்த ஏனைய கட்சிகள் (வழிநடத்தல் குழுவில் உள்ள) ஓரணியில் உள்ளமை இடைக்கால அறிக்கையின் ஊடாகவும் அதன் பின்னிணைப்பின் ஊடாகவும் அறிந்து கொள்ள முடியும்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி, வடக்கு கிழக்கு இணைப்பை எதிர்ப்பதுடன் மாத்திரமல்லாது, இரு மாகாணங்களின் இணைப்புக்கு தற்போதைய அரசமைப்பில் உள்ள ஏற்பாட்டையும் நீக்க வேண்டும் என்று கோருகின்றது. மக்கள் விடுதலை முன்னணி, ஹெல உறுமய, மகிந்த அணி என்பவற்றுடன், டக்ளஸ் தேவானந்தா, மனோகணேசன், ஹக்கீம், ரிசாட் பதியுதீன் ஆகிய நால்வரும் இணைந்து சமர்பித்த அறிக்கையும் வடக்கு-கிழக்கு இணைப்புக்கு எதிராகவே உள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலர் கபீர் ஹாசீம் சில தினங்களுக்கு முன்னர், வடக்கு கிழக்கு இணைப்பில் தமது கட்சிக்கும் உடன்பாடில்லை என்று பகிரங்கப்படுத்தி விட்டார்.

தற்போதுள்ள அரசமைப்பின் ஏற்பாடுகளுக்கு அமைய வடக்கு கிழக்கு மாகாணங்களின் இணைப்புக்கு அந்த மாகாண மக்களின் சம்மதத்தைப் பெற்றுக் கொள்வது என்பது முடியுமா என்ற அடுத்த கேள்வி எழுகின்றது. வடக்கு - கிழக்கு இணைப்புக்காக இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உள்ளிட்ட முஸ்லிம் தரப்புக்களுடன் பேச்சு நடத்தியுள்ளது.

ஆனால், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மூத்த உறுப்பினர் ஹரீஸ் சில தினங்களுக்கு முன்னர் நாடாளுமன்றத்தில் வைத்துத் தெரிவித்த கருத்து அவதானிக்கதக்கது. தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு மீது முஸ்லிம் சமூகம் அதிருப்தியில் உள்ளது என்றும், வடக்கு கிழக்கு இணைப்புக்கு எந்தவொரு முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினரும் ஆதரவளிக்க மாட்டார்கள் என்பதையும் பகிரங்கமாகச் சொல்லிவிட்டார். ஆக கூட்டமைப்பின் பேச்சுமுயற்சியும் பிசுபிசுத்து விட்டதையே இது காட்டுகின்றது. அப்படியானால் வடக்கு கிழக்கு இணைப்பு என்பதும், அது எமது அடிப்படை அபிலாசை என்பதையும் வார்த்தைகளில் மாத்திரம் சொல்லிக் கொண்டிருக்கப் போகின்றோமா ? இதைச் சாத்தியமாக்குவதற்கான சகல வழிகளையும் கண்டறிவதே இன்றைய தேவை.

# புரட்டாதி மாத ராசிபலன்

(17.09.2017 – 17.10.2017) **உங்களுக்கு எப்படி?**



## கும்பம்

**சண்டைகள் தீரும்**

எதிலும் புரட்சிகரமாகச் சிந்தித்து யதார்த்தமான முடிவுகள் எடுக்கும் நீங்கள், பண்பாடு கலாசாரத்தை மீறாதவர்கள். குருபகவான் 9ஆம் வீட்டில் அமர்ந்திருப்பதால் உங்கள் செயலில் வேகம் கூடும். நேர்மறை எண்ணங்கள் தோன்றும். அறிஞர்களின் நட்பால் சாதிப்பீர்கள்.

திருமணம், சீமந்தம், கிரகப் பிரவேசம் போன்ற சுப நிகழ்ச்சிகளால் வீடு களைகட்டும். குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும். தங்க ஆபரணம் வாங்குவீர்கள். வாகனப் பழுது நீங்கும். நீண்ட நாள் கனவாக இருந்த வீடு வாங்கும் ஆசை இப்போது நிறைவேறும். யோகாதிபதி புதன் சாதகமான நட்சத்திரங்களில் சென்று கொண்டிருப்பதால் பிள்ளைகளின் திறமைகளை இனங்கண்டறிந்து வளர்ப்பீர்கள். நட்பு வட்டம் விரியும். உறவினர்கள் ஆதரவாக இருப்பார்கள். வெளி வட்டாரத்தில் புகழ், கௌரவம் கூடிக் கொண்டே போகும்.

சூரியன் உங்கள் ராசிக்கு 8ஆம் வீட்டில் நுழைந்திருப்பதால் திடீர் பயணங்கள் உண்டு. அயல்நாடு செல்லும் வாய்ப்பு வரும். வழக்கு சாதகமாகும். பங்குச் சந்தை மூலமாக பணம் வரும். பழைய கடன் பிரச்சினையில் ஒன்று தீரும். செவ்வாய் சாதகமாக இல்லாததால் எதிலும் ஒருவித பயம் இருக்கும்.

எங்குச் சென்றாலும் எதிர்ப்புகள் அதிகரித்ததைப்போல உணர்வீர்கள். உங்களுக்கு தலைக்கனம் அதிகமாகி விட்டதாக முணுமுணுப்பார்கள். மனைவிக்கு மருத்துவச் செலவுகள் வரக்கூடும். சகோதரங்களுடன் கருத்து மோதல்கள் வரக்கூடும்.

உங்கள் ராசிநாதன் சனிபகவான் ராசிக்கு 10 இல் நிற்பதால் பெரிய பதவிகளுக்கு உங்கள் பெயர் பரிந்துரைக்கப்படும். புது வேலைக்கு முயற்சி செய்தீர்களே! நல்ல பதில் வரும்.

அரசியல்வாதிகளே! உங்களின் பொறுப்பு ணர்வை மேலிடம் பாராட்டும்.

கன்னிப் பெண்களே! கசந்த காதல் இனிக்கும். பள்ளி, கல்லூரி காலத் தோழியைச் சந்திப்பீர்கள்.

மாணவ, மாணவிகளே! விளையாட்டு, படிப்பு என்று அனைத்திலும் ஆர்வம் காட்டுவீர்கள். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். வேலையாட்களை தட்டிக் கொடுத்து வேலை வாங்குவீர்கள். தொழில் ரகசியங்கள் கசியாமல் பார்த்துக் கொள்ளுங்கள். பங்குதாரர்களால் அவ்வப்போது குடைச்சல் இருந்தாலும் பிரச்சினைகள் பெரிதாக இருக்காது. பெற்றோல், டீசல், செங்கல் வகைகளால் இலாபமடைவீர்கள்.

உத்தியோகத்தர்களே! உத்தியோகத்தில் தொல்லைகள் அகலும். உங்களைத் தரக்குறை வாக நடத்திய அதிகாரிகளின் மனம் மாறும். உங்களிடம் பொறாமைப்பட்டுக் கொண்டிருந்த சக ஊழியர்கள் உங்களின் பரந்த மனசை புரிந்து கொள்வார்கள். குறைக் கூறியவர்களுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் சில வேலைகளை விரைந்து முடிப்பீர்கள். கலைத்துறையினரே! வதந்திகள் ஒருபுறம் இருந்தாலும் மற்றொரு புறம் உங்களின் விடா முயற்சியால் சாதித்துக் காட்டுவீர்கள்.

விவசாயிகளே! புதிதாக நிலம் வாங்குமளவிற்கு வருமானம் உயரும். வாய்க்கால் வரப்புச் சண்டை தீரும். திடீர் யோகங்களையும், அதிரடி முன்னேற்றங்களையும் சந்திக்கும் மாதமிது.

# வரலாற்றில் இன்றைய தினம் 29.09.2017

1911 - ஒட்டமான் பேரரசு மீது இத்தாலி போரை அறிவித்தது.

1923 - பலஸ்தீனத்தின் மீதான பிரிட்டனின் அதிகாரம் நடைமுறைக்கு வந்தது.

1923 - சிரியா மற்றும் லெபனான் மீதான பிரான்ஸின் அதிகாரம் நடைமுறைக்குவந்தது.

1949 - மக்கள் சீனக் குடியரசின் எதிர்காலத்துக்கான திட்ட வரைபு சீன கம்யூனிஸ்ட் கட்சியால் மேற்கொள்ளப்பட்டது.

1960 - ஓமான், அரபு நாடுகளின் அமைப்பில் இணைந்து கொண்டது.

1972 - ஜப்பான் சீனாவுடனான ராஜதந்திர உறவை மீண்டும் ஏற்படுத்திக் கொண்டது.

2007 - உலகின் முதலாவது வர்த்தக ரீதியிலான அணுசக்தி உலையான கல்டர் ஹோல் வெடி வைத்துத் தகர்க்கப்பட்டது.

2013 - போகோ ஹராம் உறுப்பினர்களால் நைஜீரியா குஜ்பா விவசாயக் கல்லூரியில் 42 இற்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்.

2002 - பாதுகாப்புத் துறையைப் புனரமைக்கும் யோசனைகள் இலங்கை அரச தலைவரால் நிராகரிப்பு.



2006 - சொல் ட்றான்போட்டேஸ் எயரோஸ் வானூர்தி சேவைவிமானம்-1907 விபத்துக்கு உள்ளானதில் 154 பேர் உயிரிழந்தனர்.

## நாளை

**30.09.2017**

சனிக்கிழமை

**புரட்டாதி 14**

திதி: தசமி மு.இ. 11.57 வரை
நட்சத்திரம்: உத்தராடம் மா.05.39 வரை
சுபநேரம்: 03.02–04.32 வரை
ராகுகாலம்: 09.02–10.32 வரை

**விஜயதசமி**
**கேதார கௌரி விரதாரம்பம்**




## டோக்கியோ விழாவில் 'விக்ரம் வேதா'

மாதவன், விஜய் சேதுபதி, கதிர், வரலட்சுமி, ஷ்ரதா ஸ்ரீநாத் ஆகியோர் நடிப்பில் வெளியான 'விக்ரம் வேதா' திரைப்படம் டோக்கியோ திரைப்பட விழாவுக்குத் தெரிவாகியுள்ளது.

அண்மையில் வெளியான 'விக்ரம் வேதா' படம், தமிழ்நாட்டில் மட்டுமில்லாமல் உலகெங்கிலும் உள்ள ரசிகர்களைக் கவர்ந்தது. விமர்சன ரீதியில் மட்டுமன்றி, வசூல் ரீதியிலும் பெரும் வரவேற்பைப் பெற்றது. இந்த நிலையில் 'விக்ரம் வேதா' படத்திற்கு மற்றுமொரு அந்தஸ்துக் கிடைத்துள்ளது. ஜப்பானில் நடைபெறும் டோக்கியோ திரைப்பட விழாவில் திரையிட 'விக்ரம் வேதா' தேர்வு செய்யப்பட்டுள்ளது. இந்த வாய்ப்பு 16 படங்களுக்கு மட்டமே வழங்கப்படும். அந்த வரிசையில் ஒன் றாக உள்ளது 'விக்ரம் வேதா'. (ம)

## வாழ்வின் படிகள்

| | |
|---|---|
| மிக மிக நல்ல நாள் | – இன்று |
| மிகப் பெரிய வெகுமதி | – மன்னிப்பு |
| மிகவும் வேண்டியது | – பணிவு |
| மிகவும் வேண்டாதது | – வெறுப்பு |
| மிகப் பெரிய தேவை | –சமயோசிதபுத்தி |
| மிகப்பெரிய கொடிய நோய் | – பேராசை |
| மிகவும் சுலபமானது | – குற்றம் காணல் |
| மிகவும் கீழ்த்தரமானது | – பொறாமை |
| நம்பக்கூடாதது | – வதந்தி |
| ஆபத்தை விளைவிப்பது | – அதிக பேச்சு |
| செய்ய வேண்டியது | – உதவி |
| விலக்க வேண்டியது | – விவாதம் |
| உயர்வுக்கு வழி | – உழைப்பு |
| நழுவ விடக் கூடாதது | – வாய்ப்பு |
| பிரியக் கூடாதது | – நட்பு |
| மறக்கக் கூடாதது | – நன்றி |



இந்த உலகில் விலை மதிப்பில்லாதது அன்பு மட்டும்தான்; ஏனோ அது விலையில்லாமல் கிடைப்பதால்தான், அதன் மதிப்பை யாரும் உணர்வதில்லை...



## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:** பெருந்தன்மையுடன் எதிரியையும் மன்னிப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் ஊழியர்களுடன் ஆதரவுடன் செயல்படுவர்.

**இடபம்:** எதிர்கால வளர்ச்சி குறித்து ஆலோசிப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் உயரும். பணியாளர்கள் பணிச்சுமையைச் சமாளிக்க முடியாமல் திணறுவர்.

**மிதுனம்:** புதியவர்களின் நட்பால் நன்மை கிடைக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால் பணவரவு அதிகரிக்கும். பணியாளர்கள் சலுகை பெற்று மகிழ்வர்.

**கடகம்:** திட்டமிட்ட பணி நிறைவேற விடாமுயற்சி தேவைப்படும். தொழிலில் இலாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் நிலுவைப்பணியை விரைந்து முடிப்பர்.

**சிங்கம்:** பேச்சு செயலில் நிதானம் பின்பற்றுவது அவசியம். தொழிலில் விடாமுயற்சி தேவைப்படும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாக நேரிடும்.

**கன்னி:** நல்லவர்களின் அறிமுகமும் உதவியும் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்ததை விட இலாபம் அதிகரிக்கும். பாராட்டு வெகுமதி வந்து சேரும்.

**துலாம்:** திறமையை வெளிப்படுத்தி முன்னேறுவீர்கள். தொழில் வியாபார வளர்ச்சியால் புதிய சாதனை உருவாகும். தாராள பணவரவு கிடைக்கும்.

**விருச்சிகம்:** மனதில் குழப்பம் ஏற்பட்டு விலகும். தொழில், வியாபாரத்தில் சுமாரான வருமானம் கிடைக்கும். பெற்றோரின் உடல்நிலை சீராக இருக்கும்.

**தனுசு:** அவசரப் பணியால் சிரமத்திற்கு ஆளாகலாம். தொழில் வியாபாரத்தில் மூலதனம் அதிகம் தேவைப்படும். பணியாளர்கள் பணிவிஷயமாக வெளியூர் செல்வர்.

**மகரம்:** நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் இலாபம் திருப்திகரமாக இருக்கும். பணியாளர்கள் ஒத்துழைப்புக் கிடைக்கப் பெறுவர்.

**கும்பம்:** குடும்பத்தினரின் கருத்துக்கு மதிப்பளிப்பது நல்லது. பெண்கள் பிறருக்காக பணப் பொறுப்பு ஏற்க வேண்டாம். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும்.

**மீனம்:** வளர்ச்சிக்கான புதிய வாய்ப்பு கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்ததை விட இலாபம் அதிகரிக்கும். பணியாளர்கள் பணியை விரைந்து முடிப்பர்.

அறியாமையை விட ஆபத்தானது அதனை அறியாமையே...

எவ்வளவு அழுக்கான பணத்தையும் ஏற்றுக் கொள்கிறது மனம்

எவ்வளவு அழுக்கான மனதையும் போய் சேர்கிறது பணம்.

ஞாபகம் வைப்பது மூளை உள்ள வர்களுக்கு சுலபம்! மறப்பதுதான் இதயம் உள்ளவர்க்கு கடினம்!



விட்டுக் கொடுங்கள் விருப்பங்கள் நிறைவேறும்
தட்டிக் கொடுங்கள் தவறுகள் குறையும்
மனம் விட்டுப் பேசுங்கள் அன்பு பெருகும்




இது எல்லாத்தையும் நான் மட்டுமே செய்யணும். மற்றவன் மதிக்கக் கூட மாட்டான். அப்படித்தானே...

உங்க பொண்ணு கிளி மாதிரின்னு சொல்லி எனக்குக் கட்டி வைச்சீங்க.. இப்போது அரிவாள் எடுத்து வெட்ட வாறா




இது 'வெட்டுக்கிளி' மாப்பிள்ளை அப்படித்தான் இருக்கும்.

### கணவர்கள்

வெளியில் வீட்டில்



வீட்டில் வெளியில்

### மனைவிகள்

எவ்வளவு பேசினாலும் கடைசியில் ஆரம்பித்த இடத்திலேயே இறுதியபடி இருப்பதற்குப் பெயர்தான் விவாதம்!



## சுடோக்கு
என் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | |
| 8 | | | 4 | | 6 | | | 1 |
| | 7 | 5 | | 1 | | 4 | 6 | |
| | 4 | | 3 | | 8 | | 9 | |
| | | 3 | | | | 1 | | |
| | 5 | | 1 | | 4 | | 7 | |
| | 8 | 7 | | 4 | | 9 | 1 | |
| 3 | | | 9 | | 7 | | | 2 |
| | | | | | | | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 9 | 2 | 6 | 5 | 7 | 3 | 4 | 8 |
| 8 | 3 | 6 | 4 | 9 | 2 | 5 | 7 | 1 |
| 7 | 5 | 4 | 3 | 1 | 8 | 9 | 2 | 6 |
| 6 | 1 | 5 | 8 | 4 | 9 | 7 | 3 | 2 |
| 2 | 4 | 3 | 7 | 6 | 5 | 1 | 8 | 9 |
| 9 | 7 | 8 | 2 | 3 | 1 | 4 | 6 | 5 |
| 5 | 6 | 7 | 9 | 8 | 4 | 2 | 1 | 3 |
| 4 | 8 | 1 | 5 | 2 | 3 | 6 | 9 | 7 |
| 3 | 2 | 9 | 1 | 7 | 6 | 8 | 5 | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக் கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை.

# எது நல்ல சொத்து?

ஒரு பணக்காரன் தன் வீட்டுக்கு குரு ஒருவரை அழைத்து வந்தான். அது ஒரு பெரிய வீடு. அவர்கள் இருவரும் அந்த இரண்டு தட்டு மாடி வீட்டின் மேற் தட்டில் நின்றிருந்தார்கள். பணக்காரனோ "தன்னிடம் நிறையச் சொத்து இருந்தும் நிம்மதி இல்லையே" எனக் கூறிக் கொண்டிருந்தான்.

"குருவே வடக்குப் பக்கம் பாருங்கள். அதோ அங்கே தூரத்தில் ஒரு பனை மரம் தெரிகிறதே! அதுவரை என்னுடைய நிலம்தான். நான் அவற்றைக் கவனித்து வருகிறேன். இதோ தெற்குப் பக்கம் தெரிகிறதே மாமரம் அது வரைக்கும் என் இடம் தான். மேற்குப் பக்கம் பாருங்கள். தூரத்தில் ஒரு கொடிக் கம்பம். அது வரையும் உள்ள நிலம் என்னது தான். வீட்டின் எதிரில் கிழக்குப் பக்கம் தெரிவதும் முழுமையாக என்னுடையதுதான்" இவ்வாறு வீட்டைச் சுற்றியுள்ள இடங்களையெல்லாம் தனது சொத்துக்கள் என அவன் சுட்டிக் காட்டிக் கொண்டிருந்தான்.


குருவே, 'இவையெல்லாம் நான் கஷ்டப்பட்டுச் சம்பாதித்தவை. இத்தனை வசதிகள் இருந்தும் எனக்கு நிம்மதி இல்லாமல் இருக்கிறதே.



அது ஏன்" என்று கேட்டான் பணக்காரன்.

குரு அவனை அமைதியாகப் பார்த்தார். பின்னர் அவர் "எல்லா இடங்களிலேயும் சொத்து சேகரித்து வைத்திருக்கிறாய். இங்கே ஏதாவது சேர்த்து வைத்திருக்கிறாயா? என்று அவன் நெஞ்சைச் சுட்டிக்காட்டினார். பணக்காரனுக்கு புரியவில்லை. உடனே குரு அவரிடம் "அன்பு, பாசம், நட்பு போன்ற நல்ல சொத்துக்களையே நீ அங்கு சேர்த்து வைக்க வேண்டும். அவைதான் நிம்மதி தரும் சொத்துக்கள்" என்றார்.

# பெருந்தன்மையான விஞ்ஞானி




நிறை குடம் போன்ற நிறைந்த அறிவும் நிறைவான மனமுடைய விஞ்ஞானி ஒருவர் தம்மால் செய்ய முடியாத சாதனையொன்றைச் செய்து முடித்த, தம்மை விட இளையவரான விஞ்ஞானி ஒருவரை வீடுதேடிச் சென்று பாராட்டிய பெருந்தன்மைக்கு விஞ்ஞானத்தின் வரலாற்றில் சான்றுகள் உள்ளன.

லூயி பாஸ்டியர் என்ற விஞ்ஞானி டார்டாரிக் அமிலம் பற்றிய பல உண்மைகளைக் கண்டறிந்து வெளியிட்டார்.

உலகப் புகழ்பெற்ற பிரெஞ்சு விஞ்ஞானியான பையட் என்பவர், அதே டார்டாரிக் அமிலத்தைப் பற்றி அதற்கு முன்னர் பல ஆண்டுகளாக ஆராய்ந்து வெற்றி பெறாமல் இருந்தார். லூயி பாஸ்டியரின் வெற்றியும் அவர் கண்டுபிடித்த உண்மைகளும் அவரை வியப்பிலாழ்த்தின. நிறை குடமான அவர் "தன்னால் முடியாததை இன்னோர் இளைஞர் செய்து விட்டாரே" என்று பொறாமை கொள்ளவில்லை. மாறாக மகிழ்ச்சியே அடைந்தார்.

லூயிபாஸ்டியரைத் தாமே நேரில் சென்று சந்தித்து கட்டித் தழுவி தன் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்தார். "என்னால் கண்டு பிடிக்க முடியாதிருந்த அறிவியல் உண்மைகளை நீங்கள் கண்டு பிடித்திருப்பது எனக்கு மட்டற்ற மகிழ்ச்சியை அளிக்கிறது. உங்களுடைய இந்த வெற்றி விஞ்ஞான உலகுக்கும், மனித குலத்துக்கும் கிடைத்த பெரிய வெற்றியாகும்" என்று பாராட்டினார். அந்த முது பெரும் விஞ்ஞானியான பையட் என்ற புகழ் பெற்ற விஞ்ஞானி தன்னை நேரில் வந்து பாராட்டியதால் உள்ளம் உருகிப்போன லூயிபாஸ்டியர் "தங்களைப் போன்ற பேரறிஞர்கள் காட்டிய பாதையில் தான் இளைஞர்களாகிய நாங்கள் செல்கிறோம். எப்பொழுதும் தங்கள் வழிகாட்டுதலும் வாழ்த்துகளும் எங்களுக்குத் தேவை" என்றார்.

## புள்ளிகளை இணைத்து உருவத்தைப் பூர்த்தி செய்யுங்கள்




## 'க'கர உயிர் மெய்ப்பாட்டு

கப்பல் கடலில் செல்லுதே
காகம் மேலே பறக்குதே
கிளியும் கீ...கீ... என்குதே
கீரியும் கோழி பிடிக்குதே
குயிலும் கீதம் இசைக்குதே
கூவிக் கூவிப் பறக்குதே
கெண்டி கையில் கொண்டுமே
கேணி நீரை அள்ளுவோம்
கைகள் இரண்டு உடலிலே
கைளில் பத்து விரல்களாம்
கொன்றை மாலை கட்டுவோம்
கோவிலுக்குச் செல்லுவோம்
கௌரி அன்னை கோயிலில்
மணியின் ஓசை கேட்டுகுதே
கௌரி விரத நாளிலே
கௌரித் தாயை வணங்குவோம்

## நரி மேற்கொண்ட சதி




ஒரு மரத்தின் அடியில் ஒரு பழம் கிடந்தது. அதைச் சுவைத்த நரி "ஆஹா மாம்பழம் இவ்வளவு தித்திப்பாக இருக்கிறதே!" என்று மகிழ்ந்து மரத்தை அண்ணாந்து பார்த்து. அங்கு நிறையப் பழங்கள் இருப்பதைக் கண்டு மேலும் மகிழ்ந்தது. நரிக்கு அந்தப் பழங்களைச் சுவைக்க வேண்டும் என்ற ஆசை பிறந்தது. அப்போது மரத்தில் ஒரு காகம் இருப்பதை அவதானித்தது. நரிக்கு அதன் தந்திரப் புத்தி வேலை செய்தது. காகத்தைப் புகழ்ந்து பேசினால் காரியம் சாதித்துக் கொள்ளலாம் என்று கணக்குப்போட்டது. அந்தக் காகத்தைப் பார்த்து "தங்கம் போன்று பொன்னிறமாக இருக்கும் அன்புக் காகமே! நல்ல மயிலின் அழகும் குயிலின் குரலும் கொண்டு விளங்குகிறாயே"என்று தொடர்ந்து புகழ்ந்து தள்ளியது. இதனைக் கேட்ட காகம் மகிழ்ந்து "உத்தமமான குலத்தில் பிறந்திருப்பதால் உனக்கு என் அருமை பெருமை எல்லாம் தெரிந்திருக்கிறது. பாவம் நடந்து வந்த களைப்பும் அயர்வும் உன் முகத்தில் தெரிகிறது. வயிறு நிறையப் பழங்களைச் சாப்பிடு" என்று சொல்லி மாம்பழங்களை நரிக்குக் கிடைக்கும் படி கொத்திக் கீழே போட்டது. நரியோ "இப்போது என்ன நாம் சொல்லி விட்டோம். மயில், குயில் என்று புகழ்ந்து பேசினோம். அவ்வளவு தானே! அதற்கு நம்மை உத்தம குலம், பசிக்கு மாம்பழம் என்று காகம் அமர்க்களம்படுத்தி விட்டதே!" என்று எண்ணியவாறே அந்த மாம்பழங்களைச் சுவைத்துச் சாப்பிட்டது. இப்படித்தான் 'காரியம் ஆக காக்கா பிடிக்கிறார்கள்' சிலர் ஆனால் இவையெல்லாம் நிரந்தரமான வெற்றியைத் தராது.

## படத்துக்குப் பொருத்தமான சொல்லின் கீழ் கோடிடுவோம்



1. அணில்
2. ஆடு
3. ஆந்தை



1. எறும்பு
2. மயில்
3. காகம்



1. குதிரை
2. கட்டில்
3. கதிரை



1. எலி
2. கிளி
3. கொக்கு



1. பூனை
2. யானை
3. பானை



1. தொப்பி
2. செருப்பு
3. போத்தல்

# நெல்லிக்காயை தேனில் ஊற வைத்து சாப்பிடுவதால் கிடைக்கும் நன்மைகள்

நெல்லிக்காய் சாப்பிடுவதால் கிடைக்கும் நன்மைகள் பற்றியும், தேன் சாப்பிடுவதால் கிடைக்கும் நன்மைகள் பற்றியும் அறிந்திருப்போம். ஆனால் அந்த நெல்லிக்காயை தேனுடன் சேர்த்து ஊற வைத்து சாப்பிடுவதால் கிடைக்கும் நன்மைகள் பற்றித் தெரியுமா? தேனுடன் சேர்த்து தினமும் ஒன்று சாப்பிட்டால், கிடைக்கும் நன்மைகளோ அதிகம்.



**பயன்**

1. தேனில் ஊற வைத்த நெல்லிக்காயை தினமும் ஒன்று என சாப்பிட்டு வந்தால், குருதி சுத்தமாவதோடு, குருதி அணுக்களின் அளவு அதி கரிப்பதுடன், குருதிச் சோகையும் நீங்கும்.
2. தினமும் தேனில் ஊற வைத்த நெல்லிக்காயை சாப்பிட்டு வருவதன் மூலம், இதயத் தசைகள் வலிமையடைந்து இதய நோய்கள் வருவது தடுக்கப்படும்.
3. கண் பிரச்சினை உள்ளவர்கள், தினமும் தேனில் ஊற வைத்த நெல்லிக்காயை சாப்பிட்டு வந்தால், கண்களில் ஏற்படும் எரிச்சல், கண்களில் இருந்து நீர் வடிதல், கண்கள் சிவப்பாதல் போன்றவை குணமாகும்.
4. பசியின்மையால் அவஸ்தைப்படுபவர்கள், தேனில் ஊற வைத்த நெல்லிக்காயை தினமும் உட்கொண்டு வருவதன் மூலம் பிரச்சினையை சரிசெய்யலாம்.
5. சிலருக்கு அடிக்கடி சளி பிடிக்கும். அதுமட்டுமின்றி தொண்டையில் புண்ணும் வரும். அத்தகையவர்கள் தேனில் ஊற வைத்த நெல்லிக்காயை சாப்பிட்டு வந்தால், உடலில் தேங்கிய சளி அனைத்தும் வெளியேறிவிடுவதோடு, தொண்டைப்புண்ணும் குணமாகும்.
6. சில பெண்களுக்கு வெள்ளைபடுதல் அதிகம் இருக்கும். அத்தகைய பெண்கள் தேனில் ஊற வைத்த நெல்லிக்காயை தினமும் சாப்பிட்டு வருவதன் மூலம் வெள்ளைபடுதலைத் தடுக்கலாம்.
7. முக்கியமாகத் தேனில் நெல்லிக்காயை ஊற வைத்துச் சாப்பிட்டால், சிறுநீர் மற்றும் சிறுநீரகம் தொடர்பான பிரச்சினைகள் வருவது தடுக்கப்படுவதோடு, அப்பிரச்சினைகள் இருந்தாலும் குணமாகிவிடும்.
8. அசிடிட்டி பிரச்சினை உள்ளவர்கள், தேனில் ஊறிய நெல்லிக்காய் சாப்பிட்டு வந்தால் நல்ல நிவாரணம் கிடைக்கும்.
9. தேனில் ஊற வைத்த நெல்லிக்காயைத்தினமும் காலையில் சாப்பிட்டால் முகத்தின் பொலிவு அதிகரித்து, சருமம் அழகாகவும், ஆரோக்கியமாகவும் காணப்படும்.
10. நெல்லிக்காய் மற்றும் தேனில் நிறைந்துள்ள மருத்துவ குணங்களால், இதுவரை அதிகமாக இருந்த முடி கொட்டும் பிரச்சினை தடுக்கப்பட்டு, மயிர்க்கால்கள் வலிமையடைந்து, முடியின் வளர்ச்சி அதிகமாகும்.




கம்சப்பிரியா இசைக்கல்லூரி
வடஇலங்கை சங்கீத சபைப் பரீட்சை

**தரம் 1,2 இல் முதலாம்பிரிவில் சித்தியடைந்தோர் :-**
அ.மீராசாய், அ.நிலோஷன்குரூஸ், சு.சுயாத்தன், க.கிறிஸ்ரன், பி.மதீஷன், த.மொ.ஞா.ஆன்டயானி, த.மொ.ஞா.ஆன்தயானி, கி.வேனுகா, ச.சிவானுகா, இ.வைஷ்ணவிகா.
**இரண்டாம் பிரிவில் சித்தியடைந்தோர் :-**
உ.அனந்திகா, கி.சோபிகா, வா.லக்ஷினி
இவர்கள் அனைவரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

விஜயதசமி நாள் வகுப்புக்கள் - நாளை (30.09.2017)
சனிக்கிழமை பி.ப. 5.00 - 7.00 மணிவரை நடைபெறும்.

**இல.30, கிருஷ்ணபிள்ளை வீதி, ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம்.**

## மரண அறிவித்தல்

### சின்னையா மகாதேவன்

*(இலங்கை மின்சார சபை ஓய்வுபெற்ற ஒப்பந்த அடிப்படையான ஊழியர்)*



தோற்றம் 20.02.1946 மறைவு 28.09.2017

தெல்லிப்பழை, வித்தகபுரத்தைப் பிறப்பிடமாகவும் இணுவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா மகாதேவன் நேற்று (28.09.2017) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - தையல்முத்து தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் லக்ஷ்மிபிள்ளை தம்பதியரின் மருமகனும் சி.பத்மநாதன், தி.பேபி சறோஜா (திருகோணமலை) ஆகியோரின் சகோதரனும் ப.சிவயோகநாயகி யின் அன்புக் கணவரும் ஸ்ரீதரன் (இ.மி.ச), ஸ்ரீதேவன், மணிமாறன் (பிரான்ஸ்), ஜெயராணி (ஆசிரியர் - கிளி/புள்ளை நீராவி அ.த.க.பா), தயாபரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் பா.செல்லக்குமாரின் (ஆசிரியர் - கிளி/அம்பிகை வித்.) மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.09.2017)வெள்ளிக்கிழமை இணுவில் மேற்கில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர். 076 635 6909**

## மரண அறிவித்தல்

**மண்ணில்** 13 . 08 . 1946



**விண்ணில்** 27 . 09 . 2017

### திருமதி சோதி வடிவேலு

கைதடியைப் பிறப்பிடமாகவும், நவக்கிரி, புத்தூர் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சோதி வடிவேலு (2017.09.27) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கைலாயர் வெள்ளையம்மா தம்பதியரின் அன்புமகளும் வடிவேலு அவர்களின் அன்புமனைவியும் மேகலாவின் அன்புத்தாயும் றமணனின் அன்புமாமியும் திலக்ஷனா, சுஜானா ஆகியோரின் அம்மம்மாவும் காலஞ்சென்றவர்களான கமலம் (லண்டன்), கிருஸ்ணன் (வவுனியா) மற்றும் சற்குணதேவி, இராமலிங்கம், சறோஜினிதேவி, றஞ்சனாதேவி, வசந்தாதேவி, மாலினிதேவி (நோர்வே), மனோகரலிங்கம் (லண்டன்), மல்லிகாதேவி, மஞ்சுளாதேவி (டென்மார்க்) ஆகியோரின் அன்புச்சகோதரியும் காலஞ்சென்றவர்களான மரியரெத்தினம், செல்லையா, கோகுலதீபம், நவயுகன் மற்றும் ஞானமணி, கனகரத்தினம், றங்கராஜ், தவசீலன் (நோர்வே), சுமதி (லண்டன்), பிறேமானந், பாக்கியசீலன் (டென்மார்க்) ஆகியோரின் அன்புமைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.09.2017) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது மகளது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நிலாவரை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சரஸ்வதி வீதி,
நவக்கிரி, புத்தூர் மேற்கு.
077 899 8749 (றமணன்)**

**தகவல்:
குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### திருமதி சிவசோதி துரைசிங்கம்

**(ஓய்வுநிலை ஆசிரியர் - யா/ இராமநாதன் கல்லூரி)**



சுன்னாகம், மயிலணியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவசோதி துரைசிங்கம் நேற்று (28.09.2017) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் சுன்னாகம் காலஞ்சென்ற குமாரசுவாமிப் புலவரினதும் காலஞ்சென்ற வழக்கறிஞர் தி. குமாரசுவாமி (J.P. ஸ்தாபகர் மயிலணி சைவ மகா வித்தியாலயம்) ஆகியோரின் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை (B.A.முன்னாள் அதிபர்) - கமலாம்பிகை தம்பதியரின் கனிஷ்டபுதல்வியும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற வே.துரைசிங்கம் (முன்னாள் இறைவரி திணைக்கள அலுவலர்) இன் அன்பு மனைவியும் வாகீசனின் அன்புத் தாயாரும் மங்களேஸ்வரியின் அன்பு மாமியும் காலஞ்சென்ற மங்கையற்கரசி (முன்னாள் விரிவுரையாளர் - கோப்பாய் ஆசிரியர் கலாசாலை, அதிபர் - யா/இராமநாதன் கல்லூரி) மற்றும் குமாரசுவாமி (ஓய்வுநிலை அலுவலர் - கிழக்கிலங்கை, கடதாசிக் கூட்டுத்தாபனம்), காலஞ்சென்ற சந்திரசேகரம் (சட்டமாதிபர் திணைக்களம்), ஆகியோரின் சகோதரியும் காலஞ் சென்ற திருச்சிற்றம்பலம் (ஓய்வுநிலை அரச அலுவலர்) மற்றும் பரமேஸ்வரி, இராஜேஸ்வரி (லண்டன்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.09.2017) வெள்ளிக் கிழமை மு.ப. 11.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம், கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**புலவரகம்
மயிலணி, சுன்னாகம்.**

**தகவல்: து.வாகீசன் (மகன்)
021 224 3901**

## விஜயதசமி ஓகன் இசை வகுப்பு

ஸ்ரீகுகன் ஆசிரியரின் புதிய ஓகன் இசைவகுப்புகள் (KEY BOARD) விஜய தசமியன்று மாலை 3 மணி தொடக்கம் ஆரம்பிக்கப்படும் குறிப்பிட்ட அளவு மாணவர்களே அனுமதிக்கப்படுவர். பதிவினை மேற்கொள்ளவும்.

**ஸ்ரீகுகன் ஸப்தஸ்வரம் இசைக்கலையகம்**
**விநாயகர் வீதி, நல்லூர் வடக்கு. 077 698 0573**

## பகிரங்க ஏலவிற்பனை
## போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம்.

எதிர்வரும் 2017.10.02 ஆம் திகதி நடைபெறவிருந்த பகிரங்க ஏலவிற்பனையானது தவிர்க்க முடியாத காரணத்தினால் 2017.10.09 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் போதனா வைத்தியசாலையின் 24 ஆம் விடுதிக்கு அருகில் நடைபெறும்.

**பணிப்பாளர், போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம்.**

## கண்ணீர் அஞ்சலி



ஊர்காவற்றுறை கிழக்கைப் பிறப்பிடமாகவும் 2 ஆம் வட்டாரம், சரவணை மேற்கையும் தற்போது திருநாவற்குளம் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்டவரும் சரவணை ஸ்ரீ செல்வக்கதிர்காம முருகன் ஆலய தேர்த்திருப்பணிச்சபை, ஆலய பரிபாலன சபையின் சர்வதேச செயற்பாட்டாளர் **சங்கரன் மகேந்திரன்** (சுவிஸ்) அவர்களின் பாசமிகு தாயார்

### சங்கரன் கண்மணி

பிறப்பு 08.08.1938
இறப்பு 27.09.2017

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**சரவணை ஸ்ரீ செல்வக்கதிர்காம முருகன் ஆலய தேர்த்திருப்பணிச் சபை, ஆலய பரிபாலன சபை.**

## SUPER BALL

உத்தியோகபூர்வ முடிவுகள் சீட்டிழுப்பு வாரம் 708
சீட்டிழுப்பு திகதி 28.09.2017 வியாழக்கிழமை

C 21 22 46 50

சுப்பர் ஜக்பொட் ரூ. 40, 505, 704/=

இரண்டாவது சீட்டிழுப்பு வெற்றி இலக்கங்கள் 03 12 30 47

நீல நிற டிக்கட்டுகள் 2017.09.30 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றிபெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

2 இலக்கங்கள் பொருந்துமாயின் ரூ.25ம், 3 இலக்கங்கள் பொருந்துமாயின் ரூ.500ம் மற்றும் 4 இலக்கங்களும் பொருந்துமாயின் ரூ.50,000 வெல்லமுடியும்.

தொ.பே : 011 4062002 / 011 4062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்

## உத்தியோகபூர்வ முடிவுகள்

Development Fortune

சீட்டிழுப்பு வாரம் 078
சீட்டிழுப்பு திகதி 28.09.2017 வியாழக்கிழமை

வெற்றி இலக்கங்கள்: 14 26 31 49
சுப்பர் இலக்கம்: 01
அதிர்ஷ்ட மாதம்: ஜூன்

| அடுத்த மிகப்பெரிய ஜக்பொட் | அடுத்த சுப்பர் ஜக்பொட் | அடுத்த ஜக்பொட் |
|---|---|---|
| ரூ. 17, 315, 566/= | ரூ. 38, 42, 462/= | ரூ. 31,41, 060/= |

இரண்டாவது சீட்டிழுப்பு வெற்றி இலக்கங்கள் 03 04 55 58

2 இலக்கங்கள் பொருந்துமாயின் ரூ.20ம் 3 இலக்கங்கள் பொருந்துமாயின் ரூ.500ம் மற்றும் 4 இலக்கங்களும் பொருந்துமாயின் ரூ 50,000ம் வெல்ல முடியும்

2017.09.30 ஆம் திகதி சனிக்கிழமை இளஞ்சிவப்பு நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர்.டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி 011 333 546-47 துரித அழைப்பு 0114 824 824 www.dlb.lk

## சிறுநீர் வெளியேறும் போது கவனிக்க வேண்டியவை



உங்கள் உடலுறுப்பில் மிகவும் முக்கியமான பாகம் சிறு நீரகம். ஏனெனில் இதுதான் உங்கள் உடலில் உள்ள கழிவுகளை வெளியேற்ற உதவுகின்றது. உங்களுக்கு உடல்நிலை சரியாக இல்லை அல்லது உங்கள் உடலில் ஏதேனும் மாற்றம் ஏற்பட்டு வருகிறது என்பதை உங்களுக்கு ஏற்படும் இயற்கை உபாதையை வைத்தே கண்டுபிடித்து விடலாம். (healthy urinate tips) பொதுவாக உங்கள் சிறுநீரில் ஏற்படும் மாற்றத்தை வைத்து உங்கள் உடல்நல மாற்றத்தை எளிதாகக் கண்டறிந்து விடலாம். உடல்நிலை சரியில்லை எனும் போது முதலில் சிறுநீர் பரிசோதனை செய்வதற்கு காரணமும் இதுதான். நாட்டு மருத்துவம் செய்பவர்கள் கூட சிறுநீரின் நிறத்தை வைத்தே என்ன பாதிப்பாக இருக்கக்கூடும் என்பதைக் கணித்துவிடுவார்கள்.

எனவே, நீங்கள் சிறுநீர் கழிக்கும் போது அண்ணாந்து விட்டத்தைப் பார்ப்பதைத் தவிர்த்து சிறுநீரின் நிறம் சரியாக இருக்கிறதா என்பதைஅவதானிக்க வேண்டியது அவசியம்.

**மந்தமாக வெளியாகுதல்**

உங்கள் சிறுநீர் மந்தமாக வெளிப்படுகிறது என்றால் அது உங்களுக்கு பக்றீரியாத் தொற்று ஏற்பட்டிருக்கிறது என்பதற்கான முன்னறிவிப்பு ஆகும். வெள்ளை குருதி அணுக்கள் பக்ரீரியாக்களுடன் சண்டையிட்டு கொண்டிருந்தால் தான் இந்த மாதிரி சிறுநீர் வெளிப்படும்.

**குருதிக் கசிதல்**

சிறுநீர் கழிக்கும் போதும் சிவப்பு நிறமாகவோ அல்லது குருதி கசிவது போலவோ இருந்தால் உங்கள் சிறுநீரகத்தில் கட்டிகள் இருக்கின்றன என்று அர்த்தம். உடனடியாக பரிசோதனை செய்து கொள்வது நல்லது.

**நுரை போன்று வெளிப்படுதல்**

சிறுநீர் கழிக்கும் போதுநுரை போன்று வெளிபடுதல். நீரிழிவு அல்லது சிறுநீரகக் கோளாறுகள் ஏற்படுவதற்கான அறிகுறி ஆகும். இது ஏற்படுவதற்கு காரணம் சிறுநீரகம் சரியாக புரதச்சத்தை வடிகட்டாது செயற்படுவதுதான் எனக்கூறப்படுகிறது.

**பழுப்பு நிறத்தில் சிறுநீர் வெளியேறல்**

கல்லீரலில் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதன் முன்னறிவிப்புத் தான் சிறுநீர் பழுப்பு நிறமாக வெளிப்படுவது என்று கூறப்படுகிறது. மற்றும் பித்தச்செம்பசையின் (bilirubin) காரணமாகக் கூட இருக்கலாம். இவ்வாறான நிற மாற்றங்கள் சிறுநீரில் காணப்பட்டால் உடனடியாக மருத்துவரிடம் பரிசோதனை செய்து கொள்ளுங்கள்.

## புதிய நிர்வாகத் தெரிவும் பொதுக்கூட்டமும்

எதிர்வரும் 30.09.2017 ஆம் நாள் சனிக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு கிளிநொச்சி கூட்டுறவுமண்டபத்தில் பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும் நடைபெறவுள்ளதால் இக் கூட்டத்திற்கு சங்கத்தின் அங்கத்தவராக பதிவில் உள்ளவர்கள் மட்டும் சமூகம் தருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**முச்சக்கர மோட்டார் ஊர்தி உரிமையாளர் சங்கம், கிளிநொச்சி மாவட்டம்.**

## அறிவித்தல்
## V.S.S. நல்லெண்ணெய்

எமது நல்லெண்ணெய் உற்பத்திக்குத் தேவையான மூலப் பொருளான எள்ளின் விலை அதிகரித்த காரணத்தால் எமது V.S.S. நல்லெண்ணெய்யின் விலையினை அதிகரித்துள்ளோம் என்பதனை பாவனையாளர்களுக்கும் வாடிக்கையாளர்களுக்கும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**750 ml - புதிய விலை - 600/-**
**350 ml -புதிய விலை - 300/-**
**200 ml - புதிய விலை - 180/-**

**VS. சுந்தரலிங்கம் சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை**

## BUTTERFLY PRE SCHOOL & DAY CARE CENTRE

| Pandateruppu | Manipay | Vaddukoddai |
|---|---|---|
| 077 243 6737 | 077 890 7229 | 077 850 0320 |

## ENGLISH MEDIUM SCHOOL

யாழ்ப்பாண மாவட்டத்தில் தரமான கல்வியினால் தரமான சமூகத்தை உருவாக்கும் முன்னணி ஆங்கிலமொழி மூலமான பாலர் பாடசாலைகளுக்கு 2017 - 2018 ஆம் ஆண்டிற்கான புதிய மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**Play Group** வயது - 3
**Montessori** வயது - 4
**Pre School** வயது - 5

புதய வகுப்புக்கள் 25.09.2017 அன்றிலிருந்து ஏற்றுக்கொள்ளப்படும். புதிய வகுப்புக்கள் அனைத்தும் விஜயதசமி அன்று 30.09.2017 சனிக்கிழமை ஆரம்பமாகும். விஜயதசமி அன்று ஏடு தொடக்கும் நிகழ்வு காலை 8.30 மணி தொடக்கம் 12 மணி வரை மூன்று பாடசாலைகளிலும் இடம்பெறும். பதிவுகளை முன்கூட்டியே உறுதி செய்து கொள்ளுங்கள்

**அனுமதி மட்டுப்படுத்தப்பட்டவை இன்றே முந்துங்கள்.**

**T.P: 077 618 4250 Director : T. Sivakumar (MEd)**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 17 . 10 . 1942
மறைவு 10 . 10 . 2016

### அமரர் திருமதி கமலாம்பிகை இராசலிங்கம்

திதி – நவமி

அன்பினால் எம்மையெல்லாம் ஆட்கொண்டு
பாசத்தினால் பிணைத்து வாழ்ந்தீரே
மண்ணை விட்டு மறைந்தாலும்
எங்கள் மனதை விட்டு மறைந்திடுவீரோ...
ஆண்டொன்று சென்றாலும் மீளாத் துயருடன்
உம் நினைவுடன் வாழ்கின்றோம் - இப்புவி மீதில்
இறைவனடியில் என்றும் நீர் வாழ
இறையருளை வேண்டுகின்றோம்.

இல. 27/06, துரையப்பா வீதி,
ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம்.

மக்கள், மருமக்கள்,
சகோதரர்கள், பேரப்பிள்ளைகள்.

## கண்ணீர் அஞ்சலி

மண்ணில் 20 . 05 . 1947



விண்ணில் 27 . 09 . 2017

**சோமசுந்தரக்குருக்கள் பரமேஸ்வரன் (சிவம் ஐயா)**

போர்க்கால சூழலிலும் கடமையை கண்ணாகக் கொண்டு 35 ஆண்டுகளுக்கு மேலாக எமது ஆலயத்தில் அம்பிகைக்கு பணிசெய்து அவள் பாதம் பணிந்த சிவம் ஐயாவை அவர் சேவையை ஒருகணம் நினைவுகூர்ந்து அவர் ஆத்மா சாந்தியடைய அம்பிகையை வேண்டி நிற்கும்,

**தொண்டர் சபையினர்**
**வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் ஆலயம்**

# மாகாணத் தேர்தல் திருத்தத்தை நீக்கக் கோரி உரிமைமீறல் மனு

## முன்னாள் தலைமை நீதியரசர் சரத் என். சில்வா தாக்கல்

கொழும்பு, செப். 29

மாகாண சபைகள் தேர்தல் சட்டத்தில் கடந்த 20ஆம் திகதி சேர்க்கப்பட்ட திருத்தங்களை நடைமுறைப்படுத்த தடை உத்தரவைப் பிறப்பிக்குமாறும் நடைமுறையில் உள்ள சட்டத்தின் கீழ், கலைக்கப்பட்டுள்ள, கலைக்கப்படும் மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்த தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவருக்கு உத்தரவிடுமாறும்கோரி, முன்னாள் தலைமை நீதியரசர் சரத் என் சில்வா உயர் நீதிமன்றத்தில் நேற்று வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

சபாநாயகர் கரு ஜயசூரிய, சட்ட மா அதிபர் மற்றும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய ஆகியோரை பொறுப்புக் கூறத்தக்க தரப்பாகப் பெயரிட்டே, அடிப்படை உரிமை மீறல் மனுவாக வழக்கை அவர் தாக்கல் செய்துள்ளார்.

2009ஆம் ஆண்டு ஜூலை 7ஆம் திகதி தலைமை நீதியரசர் பதவியில் இருந்து ஓய்வுபெற்றுச் செல்லும் போது, இனிமேல் உயர் நீதிமன்றுக்கு வரமாட்டேன் என்று கூறிச் சென்ற முன்னாள் தலைமை நீதியரசர் சரத் என். சில்வா நேற்றுக் காலை 10 மணியளவில் புதுக் கடையில் உள்ள உயர் நீதிமன்ற கட்டடத் தொகுதிக்கு வருகை தந்து தனது அடிப்படை உரிமை மீறல் மனுவை தாக்கல் செய்தார்.

அதன் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் கருத்துத் தெரிவித்தார்.

மாகாண சபைகள் தேர்தல் திருத்தச் சட்டத்தை அவசர அவசரமாகக் கொண்டு வந்து நாடாளுமன்றில் அரசு நிறைவேற்றியது. அவசரமாக சேர்க்கப்பட்ட திருத்தங்களை நீதிமன்றம் முன் சவாலுக்கு உட்படுத்த பொது மக்களுக்கு அரசு கால அவகாசத்தை வழங்கவில்லை. இந்தச் சட்டவரைவின் முதலாம் வாசிப்பில போதும், இரண்டாம் வாசிப்பின் போதும் முற்றிலும் மாறுபட்ட விடயங்களே உள்ளடக்கப்பட்டிருந்தன. இது மாகாண சபைத் தேர்தலைப் பிற்போடும் நோக்குடன் திட்டமிட்டு முன்னெடுக்கப்பட்ட சதி.

நான் 1999ஆம் ஆண்டு முதல் 10 வருடம் தலைமை நீதியரசராக இருந்து மகிழ்ச்சியுடனேயே சென்றேன். அதனாலேயே உயர் நீதிமன்றுக்கு வரமாட்டேன் என்று தெரிவித்துச் சென்றேன். நான் 42 வருட அரச சேவை அனுபவத்தைக் கொண்டவன். இந்த அரசு மாகாண சபைத் தேர்தல்களைத் தாமதப்படுத்துவதாலும், உரிய நடை முறைகளை பின்பற்றாமல் சட்ட வரைவுகளை நிறைவேற்றுவதாலும் பொது மக்கள் பாதிக்கப்படுகின்றனர். பொது மக்கள் சார்பாக நான் இன்று (நேற்று) திருத்தச் சட்ட வரைவுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்துள்ளேன் - என்றார். (வ-5.31)

யாழ்ப்பாணம் வந்த கல்வி இராஜாங்க அமைச்சர்

# தேசிய தமிழ்மொழித் தின விழா ஒழுங்குகள் தொடர்பில் ஆராய்வு

யாழ்ப்பாணம், செப். 29

தேசிய மட்ட தமிழ்மொழித் தினப் போட்டிகள் எதிர்வரும் 14ஆம் திகதி தொடக்கம் மூன்று தினங்கள் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் இடம்பெறவிருக்கின்றன. இதன் ஆரம்ப நிகழ்வில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன முதன்மை அதிதியாகக் கலந்துகொள்கின்றார்.



இந்த நிகழ்வுகளுக்கான ஏற்பாடுகள் தொடர்பில் கல்வி இராஜாங்க அமைச்சர் பொ.இராதாகிருஸ்ணன் தலைமையில் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் நேற்று கலந்துரையாடல் இடம்பெற்றது.

அதில் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், யாழ்ப்பாண மாவட்டச் செயலாளர், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், வட மாகாண ஆளுநரின் செயலாளர் , படை அதிகாரிகள் , பிரதேச செயலாளர்கள், பொலிஸார் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

தேசிய தமிழ்மொழித் தின விழாவுக்கான ஏற்பாடுகள் , அதற்கான தேவைகள் , பாதுகாப்பு நடவடிக்கைகள் ஆகியவற்றுடன் கலை நிகழ்வுகள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது. தொடர்ச்சியாக 3 தினங்கள் இடம்பெறும் விழாவில் ஆரம்ப நிகழ்வில் அரச தலைவர் கலந்து கொள்வார். ஏனைய இரு நாள்களும் கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளதாகத் தீர்மானிக்கப்பட்டது.

கலை நிகழ்வுகளை வடக்கு மாகாண கல்வி அமைச்சுடன் கலாசார அமைச்சின் திணைக்களங்களும் இணைந்து முன்னெடுக்கவுள்ளன. (வ -101)

## வன்கொடுமைக்...

தியா, கூட்டு வன்புணர்வின் பின்னர் கொடூரமாகப் படுகொலைசெய்யப்பட்டார். இந்தப் படுபாதகச் செயலைப் புரிந்த காமுகர்கள் 7 பேருக்கும் மேல் நீதிமன்ற நீதிபதிகள் மூவரடங்கிய சிறப்புத் தீர்ப்பாயம் தூக்குத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது.

அப்பாவி மாணவியான வித்தியா கொடூரமாகக் கொலை செய்யப்பட்டதையடுத்து அவரின் படுகொலைக்கு நீதி கோரி பல போராட்டங்கள் நடத்தப்பட்டிருந்தன. இந்தப் படுகொலைக்கு நீதி வேண்டும் என்று அரசிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரிக்கையையும் விடுத்திருந்தது.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன யாழ்ப்பாணம் சென்று வித்தியாவின் தாயாரை நேரில் சந்தித்துப் பேசியிருந்தார். சிறப்புத் தீர்ப்பாயம் (ட்ரயல் அட் பார்) அமைக்கப்பட்டு உங்கள் மகளின் படுகொலைக்கு நீதியைப் பெற்றுத்தருவேன் என்று வித்தியாவின் தாயாரிடம் அரச தலைவர் வாக்குறுதியளித்திருந்தார்.

அவர் வழங்கிய வாக்குறுதிக்கமைவாக சிறப்புத் தீர்ப்பாயம் அமைக்கப்பட்டது. பக்கச்சார்பின்றி நடுநிலையான விசாரணைகள் நடைபெற்றன. உலகமே இந்த விசாரணைக்கான தீர்ப்பை எதிர்பார்த்திருந்தது.

வித்தியாவின் படுகொலைக்கு இரண்டு வருடங்களின் பின்னர் நீதி கிடைத்துள்ளது. குற்றவாளிகள் 7 பேருக்கும் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இது சரியான தீர்ப்பாகும். வன்கொடுமைகளில் ஈடுபடும் நபர்களுக்கு வித்தியா வழக்குத் தண்டனை நல்ல பாடமாக அமைந்துள்ளது. வன்கொடுமைகளில் ஈடுபட்ட அனைவரும் தராதரம் பாராது சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டுத் தண்டிக்கப்படவேண்டும் - என்றார். (வ-5)

## 9 பொருள்களின்...

சதொச நிறுவனத்தின் தலைவர் டி.எம்.கே.பி. தென்னக்கோன் தெரிவித்தார்.

பொருள்களின் புதிய விலைகள்

வெள்ளை நாடு ரூபா 74, வெள்ளைப் பச்சை அரிசி ரூபா 65, சம்பா அரிசி ரூபா 84, சிவப்பு அரிசி ரூபா 75, சிவப்பு நாடு ரூபா 80, வெள்ளைச் சம்பா அரிசி ரூபா 90, சிவப்புச் சம்பா ரூபா 88, நெத்தலி (தாய்லாந்து) ரூபா 525 பெரிய வெங்காயம் 125 ரூபா, உருளைக்கிழங்கு 130 ரூபா, டின் மீன் 400 கிராம் 130 ரூபா, லங்கா சதொச பால் மா 400 கிராம் 305 ரூபா, லங்கா சதொச பால் மா ஒரு கிலோ கிராம் 760 ரூபா, சீனி 107 ரூபா, பருப்பு 152 ரூபா, கோதுமை மா 86 ரூபா. (வ-5,33)

## வட மாகாண...

ஞானம் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் 106ஆவது அமர்வு கைதடியிலுள்ள பேரவைச் செயலகத்தில் அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் நேற்று நடைபெற்றது. இதன்போதே அவைத்தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மாகாணசபை உறுப்பினர்கள் தம்பிராஜா குருகுலராஜா, திருமதி அனந்தி சசிதரன், பாலசுப்ரமணியம் டெனீஸ்வரன், பத்மநாதன் சத்தியலிங்கம், சின்னத்துரை தவராசா, அரியகுட்டி பரஞ்சோதி, இம்மானுவேல் ஆனோல்ட், கந்தையா சிவநேசன், சுப்ரமணியம் பசுபதிப்பிள்ளை, பிரிமுஸ் சிராய்வா, அயூப் அஸ்மின், ரிப்கான் பதியுதீன், கந்தர் தாமோதரம்பிள்ளை லிங்கநாதன், துரைராஜா ரவிகரன், கணபதிப்பிள்ளை தர்மலிங்கம் மற்றும் சிவக்கொழுந்து அகிலதாஸ் ஆகியோரே இவ்வாறு பயணமாகவுள்ளார்கள்.

இந்தச் செயலமர்வு எதிர்வரும் 8ஆம் திகதி முதல் 14ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. கடந்த வருடமும் இதுபோன்ற செயலமர்வு கேரளாவில் நடைபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (வ-ய-8)

## போதையில்...

கடிந்துகொண்டார். சம்பவம் நேற்று யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்றில் இடம்பெற்றது.

பிறந்த நாள் கொண்டாட்டம் ஒன்றில் மது அருந்தி விட்டு மாலை நேரம் வீதியால் வந்து கொண்டிருந்தபோது கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட அவர் நேற்று யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.

அவரைக் கடுமையாக எச்சரித்த நீதிவான் சி. சதீஸ்தரன் சமூகத்துக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டிய ஆசிரியர்களே மது அருந்தி விட்டு இவ்வாறு நடந்து கொண்டால் மாணவர்கள் எவ்வாறு நடந்து கொள்வார்கள் எனக் கடிந்துகொண்டார்.

இனியொரு தடவை இவ்வாறு நடந்து கொண்டால் கற்பிக்கின்ற பாடசாலையிலேயே மாணவர்களுக்கு முன்னால் சமூக சேவையில் ஈடுபட வேண்டியேற்படும் எனவும் எச்சரித்தார். அத்துடன் அவரை 7 ஆயிரத்து 500 ரூபாவை அரச செலவாகச் செலுத்துமாறும் அவருடைய சாரதி அனுமதிப் பத்திரத்தை ஒரு வருடத்துக்குத் தடுத்து வைக்குமாறும் கட்டளையிட்டார்.

இதேவேளை, மதுபோதையில் மோட்டார் சைக்கிளை செலுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட வேறு 5 நபர்களுக்கும் தலா 7 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

அவர்களுடைய சாரதி அனுமதிப் பத்திரத்தை ஒரு வருடத்துக்கு இடைநிறுத்துமாறும் 50 மணித்தியாலங்கள் அவர்களை கட்டாய சமூக சீர்திருத்த சேவையில் ஈடுபடுமாறும் நீதிவான் உத்தரவிட்டார். (உ-103)

## தூக்கிலிட...

உபுல்தெனிய தெரிவித்தார்.

"ஆயிரத்து 166 தூக்குத் தண்டனைக் கைதிகளில் 333 பேரின் மேன்முறையீட்டு விசாரணைகள் நிறைவடைந்து அவர்களது தூக்குத் தண்டனைத் தீர்ப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. 826 பேரின் தூக்குத் தண்டனைத் தீர்ப்புக்கு எதிரான மேன்முறையீட்டு விசாரணைகள் நிலுவையில் உள்ளன.

தூக்குத் தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்ட ஆயிரத்து 166 பேரில் 37 பெண்களும் உள்ளடங்குகின்றனர்" என்று துஷார உபுல்தெனிய மேலும் தெரிவித்தார். (வ-5,31)

## பொது அறிவு...

அண்மையில் இடம்பெற்ற அரச நிர்வாக சேவை திறந்த போட்டிப் பரீட்சையின் பொது அறிவு பரீட்சை வினாத்தாளில் உள்ள சில வினாக்கள் முன்னைய வினாத்தாள்களில் உள்ளடக்கப்பட்டிருந்தாக முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. வினாத்தாள் முற்கூட்டியே வெளியாகவில்லை என்று பரீட்சைத் திணைக்களம் மறுத்திருந்தது. இவ்வாறானதொரு நிலையிலேயே மேற்படி அறிவுறுத்தலை கல்வி அமைச்சர் வழங்கியுள்ளார். (வ-5,33)

## தாஜுதீன்...

வசீம் தாஜுதீன் படுகொலை வழக்கு, கொழும்பு மேலதிக நீதிவான் ஜெயராம் டொஸ்கி முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. சந்தேகநபர்கள் முன்னாள் மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் அனுர சேனநாயக்க, நாரஹேன்பிட்டி பொலிஸ் நிலைய முன்னாள் பொறுப்பதிகாரி சுமித் சம்பிக்க பெரேரா ஆகியோர் மன்றில் முன்னிலையாகினர்.

வழக்கின் தற்போதைய நிலையை, பிரதி மன்றாடியார் அதிபதி மன்றுக்கு அறிவித்தார்.

"கொலை இடம்பெற்ற தினத்தில் அரச தலைவர் செயலகத்தில் இருந்து நாரஹேன்பிட்டி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உள்ளிட்ட பலருக்கு அலைபேசி அழைப்பு எடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் இந்த விவகாரத்தில் தொடர்புடைய சந்தேகநபர்கள் பலர் தொடர்பான தகவல் களைத் திரட்ட முடிந்தது. மிக விரைவில் அவற்றை வெளிப்படுத்தும் கட்டத்தில் உள்ளோம். தற்போதும் விசாரணைகள் தொடர்கின்றன" என்றும் பிரதி மன்றாடியார் அதிபதி டிலான் ரத்நாயக்க தெரிவித்தார். (வ-5,31)

## துயிலும்...

வைக்கப்பட்டது.

இதுதொடர்பாக வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் அஸ்மின் மற்றும் ஆனோல்ட் தெரிவித்ததாவது:

வடக்கில் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்களை தாவரவியல் பூங்காவாக மாற்றவேண்டிய தேவை இல்லை. எதற்காக நாம் அவற்றைப் பூங்காவாக மற்றவேண்டும்.

இலங்கை சட்ட ஏற்பாடுகளின்படி கல்லறைகளை அமைப்பதற்கு அனுமதிகள் இருக்கின்றன. எனவே நாம் மாவீரர் துயிலும் இல்லங்களை பூங்காவாக மாற்றுவடிவம் செய்யவேண்டிய தேவை எமக்கு இல்லை.

நாம் மாவீரர் துயிலும் இல்லங்களை முன்பிருந்தவாறே சீரமைக்கமுடியும். உரிமைக்காகப் போராடிய மாவீரர்களுக்கு நாம் கொடுக்க வேண்டிய மரியாதைகளை கொடுக்கவேண்டும் என்றனர். (வ-ய-8)

## அரசியல்...

தண்டனைக் கைதிகளுடன் தடுத்து வைத்துள்ளனர். வவுனியா மேல் நீதிமன் றில் 4 ஆண்டுகளாக நடைபெற்ற வழக்கை, அநுராதபுரம் சிறப்பு மேல் நீதிமன்றுக்கு சட்டமா அதிபர் திணைக்களம் இடமாற்றியுள்ளது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே, தமிழ் அரசியல் கைதிகள் உணவு ஒறுப்பு போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர். (வ-5)

## ஆக்கிரமிப்பு...

வத்தினர் மனதளவில் பாதிக்கப்பட்டுள்ளனர் -என்றார். (வ-5,31)

## பலாலி...

யாழ்ப்பாணம், செப். 29

வலிகாமம் வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள மூன்று பாடசாலைகளை எதிர்வரும் டிசெம்பர் மாதத்துக்குள் விடுவிக்க இணங்கியுள்ள இராணுவத்தினர், பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையைத் தர முடியாது என மறுத்துள்ளனர்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் மக்களுக்குச் சொந்தமான நிலங்கள் மற்றும் பாடசாலைகளை விடுவிப்பது தொடர்பில் ஆராயும் சிறப்புக் கலந்துரையாடல் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.

இதில் கல்வி இராஜாங்க அமைச்சர் இராதாகிருஸ்ணன் , நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் , மாவட்டச் செயலாளர் நா.வேதநாயகன் , மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் சுரேஸ், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் , வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் , இராணுவ அதிகாரிகள் மற்றும் பிரதேச செயலாளர்களும் கலந்து கொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலில் வலிகாமம் வடக்கில் உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் உள்ள 6 பாடசாலைகளை விடுவிப்பதன் மூலம் மீள்குடியமரும் மாணவர்களின் கற்றல் நடவடிக்கையையும் , மேலும் நிலங்களை விடுவிப்பதன் மூலம் எஞ்சிய மக்களின் மீள்குடியமர்வையும் உறுதி செய்து கொள்ளமுடியும். அத்தோடு கற்பித்தல் நடவடிக்கைக்காக ஆசிரியர்களின் ஆற்றலை விருத்தி செய்ய பலாலி ஆசிரியர் கலாசாலையையும் விடுவிக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இந்த விடயங்கள் தொடர்பில் பதிலளித்த இராணுவ அதிகாரிகள், "வலிகாமம் வடக்குப் பகுதியில் அண்மையில் விடுவிக்கப்பட்ட பிரதேசங்களிலிருந்து அகற்றப்பட்ட படை முகாம்களை ஒன்றிணைக்கும் பணிகள் இடம்பெறுகின்றன. மக்களின் நிலங்கள் சில விரைவில் விடுவிக்கப்படும். மாணவர்களின் கற்றல் நடவடிக்கைக்காக மூன்று பாடசாலைகள் டிசெம்பர் மாதத்துக்குள் விடுவிக்கப்படும்.

நான்காவது பாடசாலையான பலாலி வடக்கு பாடசாலை தொடர்பில் 15 தினங்களில் பதிலளிக்க முடியும். எனினும் பலாலி படைத் தலைமையகத்துக்கு மிக அருகே உள்ள பலாலி ஆசிரியர் கலாசாலையைத் தற்போது விடுவிக்க முடியாது" என்று பதிலளித்தனர். (வ-101)

# இன்றைய மோதல்கள்

**வவு. மாவட்ட கால்பந்தாட்டம்**

வவுனியா மாவட்ட கால்பந்தாட்டச் சங்கம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வவுனியா நகரசபை மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் லயன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கோல்ட் ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.



**திருக்குமரனின் கால்பந்தாட்டம்**

உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக் கழகம் நடத்தும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அண்ணா சிலையடி இளைஞர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வரணி நியூஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஊர்காவற்றுறை அண்ணா விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**சிறிமுருகன் வி.க. கரப்பந்துத் தொடர்**

கோட்டைக்காடு மல்லாகம் சிறி முருகன் விளையாட்டுக் கழகம் நடத்தும் முத்துலிங்கம் ஜெகநாதன் ஞாபகார்த்தக் கிண்ணத்துக்கான கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இளவாலை மத்திய விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)

# வென்றது வளர்பிறை

யாழ்ப்பாணம், செப். 19
வவுனியா மாவட்ட கால்பந்துச் சங்கம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் வளர்பிறை அணி வெற்றிபெற்றது.
வவுனியா நகரசபை மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் அல்ஹிஜிரா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வளர்பிறை விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் வளர்பிறை விளையாட்டுக் கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

## றேஞ்சர்ஸ் பிலிப்நேரிஸ் இறுதியில் பலப்பரீட்சை

யாழ்ப்பாணம், செப். 29
கொடுக்குளாய் சக்திவேல் விளையாட்டு கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் இன்று பிற்பகல் 3 மணிக்கு குறித்த கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது. இந்த இறுதியாட்டத்தில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் அணியை எதிர்த்து பரந்தன் சென். பிலிப்நேரிஸ் அணி மோதவுள்ளது. (ம-422)



# தேசியமட்ட கபடித் தொடரில் யாழ். மாவட்ட அணி மகுடம்

யாழ்ப்பாணம், செப். 19
29ஆவது தேசிய இளைஞர் விளையாட்டு விழாவின் ஒரு அங்கமான கபடித் தொடரில் பெண்கள் பிரிவில் யாழ்ப்பாண மாவட்ட அணி சம்பியனானது.
அனுராதபுரத்தில் நேற்று இடம்பெற்ற இறுதியாட்டத்தில் யாழ்ப்பாண மாவட்ட அணியை எதிர்ந்து மட்டக்களப்பு மாவட்ட அணி மோதியது. இதில் யாழ்ப்பாண மாவட்ட அணி 61:27 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது. (ம-23)

# தேசியமட்ட குத்துச்சண்டையில் ஹாட்லி மாணவனுக்கு வெண்கலம்

யாழ்ப்பாணம், செப். 19
பாடசாலைகளின் குத்துச்சண்டைச் சங்கத்தினால் நடத்தப்படும் 48ஆவது டி.பி ஜெயா ஞபகார்த்தத் தேசியமட்ட குத்துச்சண்டைப் போட்டியில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவன் வெண்கலப் பதக்கத்தைக் கைப்பற்றினார்.
முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரியில் அண்மையில் இந்தப் போட்டிகள் நடைபெற்றன. 48 பாடசாலைகளைச் சேர்ந்த 267 வீரர்கள் பங்குபற்றினர். பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியைச் சேர்ந்த ம.மதிவாணன் 52-56 கிலோ எடைப்பிரிவில் வெண்கலப் பதக்கத்தை வென்றார். (ம-173)



# நீக்கிலஸ், திருமகள் அசத்தலாட்டம்

யாழ்ப்பாணம், செப். 19
உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக் கழகம் நடத்தும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் சென். நீக்கிலஸ், திருமகள் அணிகள் வெற்றிபெற்றன.
திருக்குமரன் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானகலா விளையாட்டுக் கழக அணி மோதியது. 7:0 என்ற கோல் கணக்கில் சென். நீக்கிலஸ் அணி வெற்றிபெற்றது.
தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் அராலி திருமகள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மணியம் தோட்ட ஐக்கிய விளையாட்டுக் கழக அணி மோதியது. 9:0 என்ற கோல் கணக்கில் திருமகள் அணி வெற்றிபெற்றது. (ம-23)

# ஞானமுருகன் வி.கழகம் அரையிறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம், செப். 19
அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில், மயிலங்காடு ஞானமுருகன் அணி அரையிறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெற்றது.
அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் நேற்று முன்தினம் இரவு 8 மணிக்கு இடம்பெற்ற காலிறுதியாட்டத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணி மோதியது. ஆட்டத்தின் 6ஆவது நிமிடத்தில் பல்கலையின் சார்பாக முதல் கோல் பதிவானது. இந்தக் கோலை மகிபன் பதிவுசெய்தார்.
21ஆவது, 26ஆவது நிமிடங்களில் மயிலங்காடு ஞானமுருகன் சார்பாக கோல்களைப் பதிவுசெய்தார் வாகின்சன். முதல் பாதியின் முடிவில் 2:1 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது மயிலங்காடு ஞானமுருகன் அணி.
இரண்டாவது பாதியின் 23ஆவது நிமிடத்தில் மயிலங்காடு ஞானமுருகன் அணிக்கான மூன்றாவது கோலைப் பதிவுசெய்தார் தீபன். முடிவில் 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது ஞானமுருகன் அணி. வாகின்சன் ஆட்டநாயகனானார். (ம-23)

# அண்ணா சிலையடி அணி பதற்றம் இல்லாத வெற்றி

யாழ்ப்பாணம், செப். 19
மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் அண்ணா நிலையடி அணி பதற்றம் இல்லாத வெற்றி பெற்றது.
சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் அண்ணா சிலையடி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சிமாட் போய்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் அண்ணா சிலையடி விளையாட்டுக் கழக அணி 5:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. ஆட்டநாயகனாக அண்ணா சிலையடி அணியின் நிவேதன் தெரிவானார். (ம-23)



# போராடி வென்றது திக்கம்

யாழ்ப்பாணம், செப். 19
மாலு சந்தி மைக்கல் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் திக்கம் விளையாட்டுக் கழக அணி போராடி வெற்றிபெற்றது.
மைக்கல் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் திக்கம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. 4:3 என்ற கோல் கணக்கில் திக்கம் விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்றது. (ம-23)

## மேற்கிந்தியத் தீவுகளுக்கு துரதிர்ஷ்டமான தோல்வி




இங்கிலாந்துக்கு எதிராக நேற்றுமுன்தினம் நடைபெற்ற நான்காவது ஒருநாள் ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணி வெற்றிபெறக் கூடிய சாத்தியம் அதிகம் இருந்த போதிலும் அந்த அணி துரதிஷ்டவசமாக தோல்வியடைந்தது.
நாயணச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி நிர்ணயிக்கப்பட்ட 50 பந்துப் பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 356 ஓட்டங்களைக் குவித்தது.
அதிகபட்சமாக ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் லூயிஸ் 176 ஓட்டங்களைக் குவித்தார். அவர் 17 பவுண்டரிகள், 7 சிக்சர்கள் உள்ளடங்கலாக 130 பந்துகளில் இந்த ஓட்டத்தைப் பெற்றார். 200 ஓட்டங்களைப் பெறக்கூடிய சாத்தியக்கூறு இருந்த போதிலும் 47ஆவது பந்துப்பரிமாற்றத்தின் இரண்டாவது பந்தில் காயம் காரணமாக வெளியேறினார்.
அவரை விடகோல்டர் 77 ஓட்டங்களையும், மொகமட் 46 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் வோக்ஸ் 3 இலக்குகளையும், பிளங்கட், ரசிட் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.
இங்கிலாந்து அணி 35.1 பந்துப் பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 258 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் மழை குறுக்கிட்டது. டக்வோர்த் லூயிஸ் முறைப்படி 6 ஓட்டங்களால் வெற்றிபெற்றது இங்கிலாந்து. அதிகபட்சமாக றோய் 84 ஓட்டங்களையும், மொயின் அலி 48 ஓட்டங்களையும், பட்லர் 43 ஓட்டங்களையும் பெற்றனர்.
இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான ஐந்தாவதும் இறுதியானதுமான ஆட்டம் இன்று நடைபெறுகிறது. இந்த ஆட்டத்தின் முடிவு எவ்வாறு அமைந் தாலும் கிண்ணம் இங்கிலாந்திடமே செல்லும் என்பது குறிப்பிடத்தக்கது.
(ம)


## இலங்கை அணி தற்காப்பு நிலை

பாகிஸ்தான் அணிக்கு எதிராக நேற்று ஆரம்பமான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் இலங்கை அணி பாதுகாப்பான தொடக்கம் கண்டுள்ளது.
இலங்கை அணி ஐக்கிய அரபு இராச்சியத்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. அங்கு பாகிஸ்தான் இலங்கை அணிகளுக்கு இடையிலான இரண்டு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் நேற்று ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.
ஆரம்ப வீரர்களாக கருணாரத்ன மற்றும் சில்வா. 12 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் சில்வா. ஓட்டமெதனையும் பெறாமல் யாசிர் ஷாவிடம் சிக்கி பவிலியன் திரும்பினார் கருணாரத்ன. குசல் மென்டிஸால் முடிந்தது வெறும் 10 ஓட்டங்கள் மட்டுமே. கருணாரத்ன, சந்திமல் இணைந்து பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். இருவரும் அரைச்சதம் கடந்தனர். 93 ஓட்டங்களுடன் ரண்அவுட் செய்யப்பட்டார் கருணாரத்ன. சந்திமல்லுடன் இணைந்து தாக்குப்பிடித்தார் டிக்வெல்ல. நாள் முடிவில் இலங்கை அணி 4 இலக்குகளை இழந்து 227 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. சந்திமல் 60 ஓட்டங்களுடனும், டிக்வெல்ல 42 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர்.
(ம)



## உமேஸ் 100

பன்னாட்டு ஒருநாள் அரங்கில் 100 இலக்குகள் என்ற அடைவை நிலை நாட்டினார் இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் உமேஸ் யாதவ்.
ஆஸ்திரேலிய - இந்திய அணிகளுக்கு இடையிலான ஒருநாள் தொடரின் நான்காவது ஆட்டம் நேற்று நடைபெற்றது. ஆஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. உமேஸ் யாதவ் 4 இலக்குகளைக் கைப்பற்றினார். அவர் பின்ஞ், ஹெட், சிமித், ஹான்ட்ஸ்கொம் ஆகியோரை வீழ்த்தினார். தனது 100ஆவது இலக்கையும் நேற்று நிறைவு செய்தார். இந்தப் பெறுதியை எட்டிய 18 ஆவது இந்திய வீரராக உமேஸ் யாதவ் உள்ளார்.
(ம)



## கருத்தரங்கு நாளை

மெய்வல்லுநர் தொழில்நுட்ப பரீட்சை எதிர்வரும் எட்டாம் திகதி நடைபெறவுள்ளது. இந்தப் பரீட்சைக்குத் தோற்றவுள்ளவர்களுக்கான கருத்தரங்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில் நாளையும் நாளைமறுதினமும் காலை 9 மணிமுதல் 12 வரையும் பின்னர் பி.ப. 1 மணி முதல் 4 மணி வரையும் நடைபெறவுள்ளதென யாழ்ப்பாண மாவட்ட மெய்வல்லுநர் தொழில்நுட்பச் சங்கத் தலைவர் இளம்பிறையன் அறிவித்துள்ளார்.
(ம-422)

## தென்னாபிரிக்க அணி மிக வலுவான ஆரம்பம்



பங்களாதேஷுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தின் நேற்றைய முதல் நாளில் தென்னாபிரிக்க அணி மிகவும் வலுவான தொடக்கம் கண்டது. அந்த அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் எல்கர் சதம் கடந்து ஆட்டமிழக்காது தொடர்ந்து துடுப்பெடுத்தாடி வருகிறார்.
பங்களாதேஷ் அணி தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான இரண்டு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் நேற்று ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. தென்னாபிரிக்காவின் ஆரம்ப வீரர்களாக எல்கர் மற்றும் மார்க்ரம்.
இணைப்பாட்டம் மிகக் கச்சிதமாக அமைந்தது. இலக்குச் சரிவில்லாமல் 100 ஓட்டங்களைத் தொட்டது தென்னாபிரிக்க அணி. ஆரம்ப வீரர்கள் இருவரும் அரைச்சதம் கடந்து தொடர்ந்து சிறப்பாக துடுப்பெடுத் தாடிய வருகின்றனர். ரகுமான், இஸ்லாம், மிராஸ் (வேகம், மித வேகம், சுழல்) கூட்டணியால் பதற்றத்தை ஏற்படுத்த இயலவில்லை.
அணி 196 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டமிழந்தார் மார்க்ரம். அவர் 97 ஓட்டங்களுடன் ரண்அவுட் முறையிலேயே ஆட்டமிழந்தார். மறுமுனையில் சதம் கடந்தார் எல்கர்.
எல்கர் அம்லா கூட்டணி மற்றுமொரு இணைப்பாட்டத்தை வலுவாக நிலை நிறுத்தியது. அரைச்சதம் கடந்தார் அம்லா. எல்கரும் நீண்டு நிலைபெற்றார். நாள் முடிவில் தென்னாபிரிக்க அணி ஒரு இலக்கை மட்டும் இழந்து 298 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. எல்கர் 128 ஓட்டங்களுடனும், அம்லா 68 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர்.
இரண்டு ஆட்டங்களைக் கொண்ட இந்தத் தொடரின் ஏதாவது ஒரு ஆட்டத்திலாவது தென்னாபிரிக்க அணியை தம்மால் வீழ்த்த இயலும் என்று பங்களாதேஷ் அணியின் தலைவர் ரகீம் நம்பிக்கை தெரிவித்திருந்தார்.
(ம)

# இந்தியாவின் வெற்றிநடைக்கு ஆஸி. வைத்தது முற்றுப்புள்ளி




இந்திய அணியின் தொடர்வெற்றிநடைக்கு ஆஸ்திரேலிய அணியால் நேற்று முற்றுப் புள்ளி வைக்கப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலிய அணி இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான ஐந்து ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரின் நான்காவது ஆட்டம் பெங்களூரில் நேற்று நடைபெற்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலிய அணி முதலில்துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அந்த அணியின் ஆரம்ப வீரர்களான வோர்ணர் மற்றும் பின்ஞ் இருவரும் சிறந்த ஆட்டத்தை வழங்கினர். இணைப்பாட்டமாக 100 ஓட்டங்கள் பகிரப்பட்ட பின்னரும் இலக்குச் சரிவு ஏற்படவில்லை. ஆஸ்திரேலியா 231 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 94 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் பின்ஞ். மறுமுனையில் சதம் கடந்து தொடர்ந்தும் அடித்தாடினார் வோர்ணர். அவர் 124 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். முடிவில் ஆஸ்திரேலிய அணி 5 இலக்குகளை இழந்து 334 ஓட்டங்களைக் குவித்தது. ஆஸ்திரேலிய அணி சுமார் 380 முதல் 400 ஓட்டங்கள் வரை குவித்திருக்க வேண்டும். ஆனால் ஆரம்ப வீரர்கள் வழங்கிய தொடக்கத்தை மத்திய வரிசை தக்கவைக்கத் தவறியது.

பந்துவீச்சில் உமேஸ் யாதவ் 4 இலக்குகளைக் கைப்பற்றினார். கேதர் யாதவ் ஒரு இலக்கைக் கைப்பற்றினார்.

பதிலுக்குக் களமிறங்கிய இந்திய அணிக்கும் அதன் ஆரம்ப வீரர்களான ரகானே, ரோகித் சிறந்த தொடக்கம் வழங்கினர். இலக்குச் சரிவில்லாமல் 100 ஓட்டங்களைத் தொட்டது இந்தியா. அணி 106 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 53 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் ரகானே. ரோகித் 65 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். கோக்லி 21 ஓட்டங்களுடன் கட்டுப்படுத்தப்பட்டார். பாண்டியா, கேதர் யாதவ் சிறிது போராட்டம் காட்டினர். எனினும் இலக்கை எட்டக்கூடிய வகையில் அது அமையவில்லை. ஆட்டத்தின் கடை சிக்கட்டப் பொறுப்பு டோனியின் தலையில் அப்படியே சரிந்தது. டோனியும் நேற்றுத் தடுமாறினார். 21 ஓட்டங்களால் வெற்றி பெற்றது ஆஸ்திரேலிய அணி.



### இந்தியாவின் தோல்விக்கு காரணம் என்ன?

முதல் மூன்று ஆட்டங்களிலும் இந்தியா வெற்றி பெற்று தொடரைக் கைப்பற்றுவதை உறுதி செய்துள்ள காரணத்தால் பந்துவீச்சு வரிசையை அப்படியே மாற்றியமைத்தார் கோக்லி. வேகப்பந்து வீச்சாளர்களான பும்ரா, புவனேஸ்வர், சுழல் வீரர் குல்தீப் ஆகியோருக்கு ஓய்வு கொடுத்து சமி, யாதவ், அக்சர் பட்டேல் ஆகியோரை களமிறங்கினார் கோக்லி. இவ்வாறு முழுவதுமாக மாற்றம் செய்ததற்குப் பதிலாக பும்ரா, புவனேஸ்வர் இருவரில் ஒருவரை களமிறக்க கோக்லி பரிசீலித்திருக்கலாம். (ம)

IPS

இலவச ஆங்கில, கணினி வகுப்புக்கள்

க.பொ.த. (உ/த) பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்காக

1. Diploma in Spoken English
2. Diploma in Information Technology

விஜயதசமி அன்று புதிய பிரிவுகள்

*காலம் 3 மாதங்கள் *பெறுமதிமிக்க சான்றிதழ்

ஆரம்பம் 30.09.2017 சனி காலை 10 மணி

IPS இராமநாதன் வீதி , திருநெல்வேலி.
Hotline : 076 685 2529, fb: Ips Ips
email : ipsstudies@gmail.com

வேலை வாய்ப்பு

குடாநாட்டில் இயங்கிவரும் எமது Everest நிறுவனமானது வட இலங்கையின் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் புதிய கிளைகளை ஆரம்பிக்கவுள்ளது. அப் புதிய கிளைகளுக்கான பணியாளர்கள், முகாமையாளர்கள், உதவி முகாமையாளர்கள், அலுவலக உதவியாளர்கள் போன்ற பதவிகள் கோரப்படுகின்றன.

தொடர்புகளுக்கு - 077 1717 278, 077 985 6671

புலமைக் கல்வி நிறுவனம்
சோதி வேம்படி லேன், மானிப்பாய் (சத்தியசாயி பாடசாலைக்கு அருகில்)

புதிய புலமைப் பரிசில் வகுப்புக்கள் ஆரம்பம்
30.09.2017 சனிக்கிழமை (விஜயதசமியன்று)

ஆசிரியர் திரு.க.கலாமோகன் (BA.Dip.in.Teach...)

தரம் - 05 (தற்போது தரம் 04) நேரம்: 3.15 PM
தரம் - 04 (தற்போது தரம் 03 ) நேரம்: 4.00 PM

தொ.இல: 077 212 1915 / பதிவுகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளமையால் பதிவுகளுக்கு முந்துங்கள்

அன்பான வாடிக்கையாளர்களுக்கு முக்கிய அறிவித்தல்

எள்ளின் விலை அதிகரிப்பு காரணத்தால் இன்று 29/09/2017 இல் இருந்து பரிமளாஸ்ரோர்ஸ் தயாரிப்பான V.S.P நல்லெண்ணையின் விலை அதிகரிக்கப் பட்டுள்ளது. என்பதை வாடிக்கையாளர்களுக்கும் விநியோகத்தர்களுக்கும் அறியத்தருகின்றோம்.

ஆகக் கூடிய சில்லறை விலை
1 போத்தல். 750 மில்லி - 600
1 போத்தல். 350 மில்லி - 300
1 போத்தல். 200 மில்லி - 190

தயாரிப்பாளரும் ஏகவிநியோகத்தருமாகிய பரிமளா ஸ்ரோர்ஸ்
26 A மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 9165,021 222 4135

## மரண அறிவித்தல்

### திருமதி பத்மராணி கோபாலச்சந்திரநாயகன்



கிளிநொச்சி, பரவிப்பாஞ்சான் மருதநகரை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்ட திருமதி பத்மராணி கோபாலச்சந்திரநாயகன் நேற்று (28.09.2017) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் கோபாலச்சந்திரநாயகன் (ஓய்வுபெற்ற இலங்கை வங்கி முகாமையாளர் - கிளிநொச்சி) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சிவராஜசிங்கம் - சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான அழகரத்தினம் - திலகவதிநாயகம் தம்பதிகளின் அன்பு மருமகளும், கார்த்திகா(கொழும்பு), பிரதீபா (கால்நடை வைத்திய கலாநிதி - பளை), செந்தூரன் (முகாமையாளர் - Senkadagala Finance PLC யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், ராஜ்குமார் (கொழும்பு), டினேஸ் (கணக்காளர் - லண்டன்), ஜெயகலையரசி (கோண்டாவில்) ஆகியோரின் அன்பு மாமியாரும், பிரபாகர் (கொழும்பு இந்துக் கல்லூரி), நேத்ரா, துதித்ரா (யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்), ராகவி (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், நரேந்திரசிங்கம், அகிலாண்டேஸ்வரி, கஜேந்திரசிங்கம், அமிர்தகௌரி, அமிர்தகாந்தி, இலங்கராணி, தாமிரவருணி, மங்களேஸ்வரி, தசவதி, திருக்கேதீஸ்வரி, கோணேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சந்திரராணி, ஜெனனச்சந்திரரத்தினம், காலஞ்சென்ற சந்திரபவானி மற்றும் திலகச்சந்திரரத்தினம், சந்திரவதனி, காலஞ்சென்ற அழகச்சந்திரநாயகம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 01.10.2017 ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 11 மணியளவில் திருநகர் பொதுமயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பரவிப்பாஞ்சான்,
மருதநகர், கிளிநொச்சி.

தகவல்:
குடும்பத்தினர்.

024 324 2993, 077 610 4892,
077 074 0351, 077 522 1118

சலூன் வாடகைக்கு

முடவேம்படி K.K.S. வீதி, சுன்னாகத்தில் செல்வம் சலூன் வாடகைக்கு விடப்படும். அத்துடன் தளபாடங்களும் விற்பனைக்குண்டு.

077 787 9546

வீடு, காணி விற்பனைக்கு

நல்லதண்ணீர் கிணற்றுடன் வீடு. காணி விற்பனைக்குண்டு.
இடம் : கொழும்புத்துறை வீதி, பாண்டியன் தாழ்வு , யாழ்ப்பாணம்.

076 785 1067

யாழ். நகரின் வர்த்தகப் பிரிவிற்கான தனித்துவமான நிறுவனம்

NEC

1 பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி.
2 மணிக்கூட்டு வீதி, யாழ். நகர்.

A/L DAY CLASS

ஆரம்பம்: 01.10.2017 ஞாயிறு 8.00 மணி

- பொருளியல் : NB. கஜீதரன்
- வணிகக்கல்வி : S.K. பாலசபேஷ்
- கணக்கீடு : Mr. பாலகஜன்

Note: பாடம் மாறி படிப்பவர்களுக்கு ஆரம்ப தேர்ச்சியில் இருந்து கற்பிக்கப்படும்.

A/L 2018, 2019
கலை, வர்த்தக, தொழில்நுட்ப பிரிவுகளுக்கான புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

T.P. 077 469 6695

புதிய பிரிவுகள் ஆரம்பம்

வங்கியியல் கற்கை நெறிகள்
**Banking Courses**
*IABF & DABF*
(Tamil & English Medium)
Qualification : G.C.E.O/L 6 Passes with 5 Credits including Maths.
ஆரம்பம் - 23.09.2017

கணக்காளர் கற்கை நெறிகள்
**Chartered Accounting Courses**
Executive Level & Business Level
(Tamil & English Medium)
Qualification : G.C.E. A/L 3 Passes
Note:- 2017 பரீட்சை எடுத்த மாணவர்களும் பதிவு செய்யலாம்.
ஆரம்பம் - 23.09.2017

Students A waiting (A/L) Results Enrich your Proficiency in English
**Certificate Course in English**
15 Batches have successfully completed the course
Register your names before 07.10.2017

*Further Details*
**Jaffna College**
Undergraduate Dept.
464, Hospital Road,
Jaffna,
021 222 3382/ 021 222 9149

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 29.09.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.